
# கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 05 ISSUE : 06 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 144 / News / 2014

## வரலாற்று வெளிச்சத்திற்கு வராத பனங்காமம் சிவனாலயம்

## தம்பிக்கு தமையன் தலைமை கொடுத்த ஆலங்குளாய் கோட்டம்

## பன்மைப் புலமைத்துவம் மிக்க பேராசிரியர் கா.சிவத்தம்பி


## Kullakottan traditions alive in Thampalakamam


www.kalaikesari.com June 2014

ISSN 2012-6824


| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 125.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்: Contents:







## அட்டைப்பட விளக்கம்:

*பௌத்த விகாரைகளிலும்
அரண்மனை வாசற்படிகளிலும்
காணப்படும் சந்திரவட்டக்கல்
சிங்கள கலாசார பாரம்பரியத்தில்
தனித்துவமானது. இது
அநுராதபுர விகாரையில் உள்ள
சந்திரவட்டக்கல் ஆகும்.*


06 மட்டு. புனித சிசிலியா தேசியக் கல்லூரி

28 மட்டுவின் மகத்துவங்கள் கூறும் பயன்மிகு ஏடுகள்

54 இசையில் பல சிகரங்களைத் தொட்ட எஸ்.இராமநாதன்

66 வகுளம் என்னும் மகிழ்

74 **Fading Traditions**












**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 7209830
kalaikesari@expressnewspapers.lk
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
luxmi.rajadurai@yahoo.com

**SUB EDITOR**
Bastiampillai Johnsan
johnsan50@gmail.com

**CONTRIBUTORS**
Prof. Sivalingarasa
Prof. P. Pusparatnam
Prof. Saba Jeyarasa
Dr. Viviyan Sathyaseelan
M. Kanapathipillai
K. Thangeswary
Mrs. Vasantha Vaithyanathan
Mrs. Pathma Somakanthan
R. Achuthapagan
Mrs. Amutha Varatharaj
Thuvaskar Ganesaraja
V. Varathasuntharam
Mrs. Sivanandini Duraisamy
Mrs. Madhuri Peiris

**PHOTOS**
S. M. Surenthiran
J. H. Mirunalan
L. Thev Athiran

**LAYOUT**
M. Srithara Kumar
S. A. Eswaran
K. Kulendran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING & SUBSCRIPTIONS**
S. Surendran - 077 5790370
Surenshy@gmail.com

**CIRCULATION**
K. J. Johnson Jeyaraj - 0777 270343

**PRODUCTION**
L. A. D. Joseph

**ISSN 2012 – 6824**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

Editor's Note



வணக்கம் கலைக்கேசரி வாசகர்களே! To our esteemed readers,

**June, 2014**

கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம்

நலந்தானே! நம்மரபு, கலை, பண்பாடு, பாரம்பரியங்களை பேணுதல் வேண்டும் என்பதனை பிரதான நோக்கமாகக் கொண்டு கடந்த நான்கரை வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் கலைக்கேசரி உங்கள் கவனத்தை மென்மேலும் கவர்ந்து வருவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த வகையில் ஒரு முக்கிய விடயத்தினை குறிப்பிடுதல் பொருத்தமானது. அதாவது எமது பண்டைய கலை, இலக்கிய, பண்பாட்டுச் செல்வங்கள் யாவும் எழுத்தாணி கொண்டு ஏடு களில் தான் புலவர்கள் மற்றும் அறிஞர்களால் பதிக்கப்பட்டு வந்துள்ளன என்பதை நாமறிவோம். இவற்றினை அழிய விடாமல் காலத்துக்கு காலம் பெரியோர்கள் மேற்கொண்ட அரும்பெரும் முயற்சி கள்தான் அவற்றுள் ஒரு சிறிய பகுதியேனும் நிலைத்திருந்து நமது பண்டைய வரலாற்றையும் கல்வி, கலை, பண்பாடு, வைத்தியம், வழிபாடு, கலாசாரம், மொழி மற்றும் இலக்கியச் சிறப்புகளையும் கூறிக் கொண்டிருக்கின்றன. பழைமைச் சிறப்பில்லா சமூகம் நிலவில்லா வானம் போல் ஒளியற்ற தாகவே விளங்கும் என்று கூறலாமல்லவா!

நமது நாட்டில் அரிய பழந்தமிழ் ஏடுகளை எடுத்து நூல்களாக பதிப்பிக்க முனைந்த தமிழறிஞர் சி. வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் இவ்வகையில் தமது ஞாபகத்துக்கு வருவது தவிர்க்க முடியாதது.

இதே போன்று கிழக்கு மாகாணத்தில் அரிய கூத்துக்கலைப் படைப்புகள் உட்பட பல பல்துறை பழந்தமிழ் ஏடுகள் கவனிக்கப்படாது விடப்படுகின்ற ஒரு சூழ்நிலையில் அவை காலப்போக்கில் அழிந்து போகலாம் என்ற கருத்தை இவ்விதழில் முன்வைக்கிறார் ஆய்வாளர் செல்வி. தங்கேஸ்வரி அவர்கள். இவ்விடயமும் நாம் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டிய ஒன்றே என்பதனைக் கூற விரும்புகின்றோம்.

மீண்டும் சந்திப்போமா? நன்றி வணக்கம்.

Kalaikesari as you are aware is a unique magazine that devoted mainly to nurture our traditions, customs, history, art and culture, and we are happy to mention here, that this magazine during its four and a half years of existence, has been able to attract more and more readers to its side.

In this respect, it is appropriate to give attention to an important matter also. It is a well known fact that our ancient works on literature, history and other important fields such as medicine and astrology were written on ola leaves by eminent poets and scholars of that time.

It is through the great efforts of some learned and socially conscious personalities, from time to time, that it had been possible to preserve at least a part of those ancient treasures from decaying. At this juncture the efforts and involvement of a Mr. C. V. Thamotharam pillai, a well known tamil scholar in Sri Lanka, in converting these manuscripts on palm leaves in the form of books cannot be easily forgotten.

According to Miss. Thangeswary, an analytical writer on Tamil culture and traditions, through her contribution in this issue, tries to point out a situation in the Eastern Province that, rare folk theatre inscriptions on palm leaves do not get proper care. We think, it is better to give some attention to preserve these manuscripts.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டு. புனித சிசிலியா தேசிய கல்லூரி

# பெருமைகளைத் தேடிக் கொள்வதல்ல; பெருமையோடு வாழ்வதே சிறப்பு

திருமதி. அமுதா வரதராஜ்
கலை வர்த்தகப் பிரிவு பகுதித் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கை எழில் கொஞ்சும் மட்டு. மாநகரில் 1876இல் இடப்பட்ட வித்து முளைத்து, வளர்ந்து, பூத்துக்காய்த்து இன்று மாபெரும் விருட்சமாகக் புனித சிசிலியா கல்லூரி காட்சியளிக்கின்றது. ஆன்மீகத்தோடு கலந்த கல்வியும் கட்டுப்பாடு நிறைந்த தியாக உணர்வுடன் கூடிய வாழ்க்கையும் இதன் அணிகலன்களாகும்.

புனித சிசிலியா பாடசாலை முழு மனிதத்துவத்தை கொண்டது. பூரண ஆளுமை நிறைந்த பிரஜைகளை உருவாக்குவதே இதன் இலக்காகும். அருட் சகோதரிகளின் அடிச்சுவட்டில் உரம் பெற்று, ஊட்டமும் ஊக்கமும் பெற்று உயர்ந்து நிற்கும் பாடசாலை இதுவாகும். 138 வருட பழைமை மிக்க இக்கல்விக் கூடத்தின் கல்வி வளர்ச்சியிலே கடவுளின் அருட்கொடைகள் பொழியப்பட்டுள்ளன. நல்ல தாய்மாரை, நல்லருட் சகோதரிகளை, சிறந்த பணியாளர்களை, உயர்ந்த வைத்தியர்களை, மதிநுட்பம் வாய்ந்த பொறியியலாளர்களை, நல்ல மனிதத்துவம் உள்ளவர்களை இப்பாடசாலை உருவாக்கியுள்ளது. இவர்களது ஆற்றுகைகள் உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பாடசாலையின் பெயரை விளங்கும்படி செய்கின்றன.

**அறியாமை இருள் போக்கும் அறிவொளி**

புனித சிசிலியா ஆங்கிலப் பாடசாலை அருட் தந்தை ஜே. பிரான்சிஸ் சேவியர் அடிகளாரால் 1876 ஆம் ஆண்டு 69 மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1900 ஆம் ஆண்டு அதிவணக்கத்துக்குரிய ஆயர் லவிங்னோ ஆண்டகையின் வேண்டுகோளுக்கு இணங்க மக்டலின் எனும் ஆசிரியை தனது இரு சகோதரிகளோடு மட்டுநகரின் மாணக்கருக்குக் கல்வி அறிவூட்டி அறிவுக் கண்களைத் திறந்தார். கைத்தொழில் பயிற்சி நெறியில் மாணக்கரை ஈடுபடுத்த தையல் பயிற்சி நிறுவனம் ஒன்றையும் ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை புனித மரியாள் பாடசாலையை நிர்வகித்த குலூனி சபை (Cluny) அருட்சகோதரிகள் 1910இல் புனித சிசிலியா பெண்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றனர். சிசிலியா அன்னையிடம் அறிவு பெற மக்கள் பலரும் நாடி வந்தனர். இதனால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. அருட் சகோதரிகளின் முயற்சியால் மாடிக் கட்டிடம் உருப்பெற்றது. அதில் 140 மாணவர்கள் கல்வி பயின்றனர். 17 மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றனர். இந்தியாவில் புனித குலூனி சபைக்கு ஆட்பற்றாக்குறை நிலவியதன் காரணமாக இச்சபையைச் சார்ந்த அருட்சகோதரிகள் இந்தியா செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது. இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு விஜயம் செய்த இயேசு சபையைச் சார்ந்த அருட்தந்தை டுபோன்ற் அடிகளார் அங்கு ஊக்கத்தோடும் உயிர்த்துடிப்போடும் சேவையாற்றி பலரின் நன்மதிப்பைப் பெற்றிருந்த அப்போஸ்தலிக்கக் கார்மேல் சபையினரின் சேவையினால் கவரப்பட்டார். மனிதனை மனிதனாக்கும் அறிவுப்பாதையில் கல்வி ஒளியூட்டுவதைத் தனது நோக்கமாகக் கொண்டிருந்த இச்சபையின் கல்விச் சேவையை அடிகளார் ஆயருக்கு எடுத்துக் கூறினார். ஆயர் அச்சபையின் தலைவியிடம் மட்டுநகர், திருமலை இடங்களில் உள்ள மடங்களைப் பொறுப்பேற்குமாறு வேண்டினார்.

### மகா மகத்துவம்

1922 ஆம் ஆண்டு தைத்திங்கள் 22 ஆம் திகதி அப்போஸ்தலிக்க கார்மேல் சபைத் தலைவி அருள் அன்னை அல்பிஷியா மட்டுநகர் மடத்தை ஏற்க வருகை தந்தார். முதலாவது அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் குழு ஐந்து அருட்சகோதரிகளுடன் திருமலைக்கு வருகை தந்தது. அதில் அருட் சகோதரிகள் யூலலி, லியோனி, பெப்பத்துவா, தியோட்லின்ட், கத்தறின் ஆகியோர் அங்கம் வகித்தனர். இவ்வாறு வந்தவர்களைக் குலூனி சபையைச் சார்ந்த அருட்சகோதரிகள் தியோனிற்றா, மேரி ஆகியோர் அன்போடு உளமார வரவேற்று புனித கல்விப் பணியை ஒப்படைத்தனர்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




#### செயற்பாட்டுச் செப்பம்

அருள்அன்னை யூலலியின் வழிகாட்டலில் புனித சிசிலியா கல்லூரி துரித முன்னேற்றமடைந்தது. காலத்தை அனுசரித்து இடத்தையும் பொருத்தம் பார்த்து செயல் செய்தால் உலகம் முழுவதையும் தமக்கு உரியதாக்கலாம் என்பதற்கேற்ப இவர்களால் நடத்தப் பெற்ற தையல் வேலைத் திட்டங்கள் மக்களது மனதில் மங்காத இடத்தைப் பிடித்தது.

#### எள்ளாத எண்ணிச் செய்தல்

அருட் சகோதரிகளின் சேவையையும் கல்விக் கைங்கரியத்தையும் கண்டு கல்வித் திணைக்களம் இரு வருடத்திற்குள் ஆங்கிலப் பாடசாலையாக தரம் உயர்த்தியது. வைகாசித் திங்கள் முப்பதாம் நாள் புனித சிசிலியா பாடசாலை முதற்தர ஆங்கில பாடசாலையாக உயர்வு பெற்றதைச் சிறப்பிக்கும் முகமாக சிறப்பு விடுமுறை நாளைக் கொண்டாடியது. பாடசாலையை எல்லா வகையிலும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்ற அப்போஸ்தலிக்க கார்மேல் அருட் சகோதரிகளின் ஆற்றல் நிறை சேவையைப் பாராட்டியே கல்வித் திணைக்களம் இப்பாடசாலைக்கு தரமுயர்வை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலையை மேற்பார்வையிட வந்த அதிகாரிகள் சிசிலியாவின் செயற்பாடுகளை தரிசித்து அவர்களும் தம்மை சீர்திருத்திக் கொண்டனர். இவ்வாறாக எல்லா வகையிலும் முன்மாதிரியாக இப்பாடசாலை மிளிர்ந்தது.

பல்வேறு விதமான இடர்களின் மத்தியிலும் பாடசாலைக்கு அண்மையில் உள்ள காணியை அருட்சகோதரிகள் வாங்கிக் கொண்டார்கள். ஆண்டவனை முன்னிறுத்தி அனைத்துக் காரியமும் ஆற்றும் இந்நிறுவன வளவில் 1929 தை மாதம் 13 ஆம் நாள் அன்று ஆலயத்திற்கான கால்கோள் இடப்பட்டது. இதே ஆண்டு மார்கழி 21 ஆம் நாள் இக்கட்டிடத்தை அதிவணக்கத்திற்குரிய ஆயர் றொபிசே ஆண்டகை திருப்பலி ஒப்புக் கொடுத்துத் திறந்து வைத்தார். 1960 ஆம் ஆண்டு அரசாங்கம் நாடு முழுவதும் உள்ள தனியார் பாடசாலைகளைப் பொறுப்பேற்றது. அவ்வேளையிலே கார்மேல் சபை அருட்சகோதரிகளும் அரசும் மேற்கொண்ட உடன்பாட்டிற்கு அமைய அரசு பாடசாலையைக் கையேற்றது.

1968 இல் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு பாடசாலைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டன. இரண்டு பாடசாலைகளும் ஒன்றாக இணைந்த பிற்பாடு சிறந்த முன்னேற்றத்தோடு தொடர்ச்சியான வளர்ச்சிகளையும் கொண்டு விளங்கியது.


#### உரமிட்டு உயிர்ப்பித்தவர்கள்

புனித சிசிலியாவின் வரலாற்றில் காலத்திற்குக் காலம் பதவிக்கு வந்த அதிபர்கள் தம்மையே அர்ப்பணித்துச் செயற்பட்டார்கள். அதிபர்கள் அருட்சகோதரிகள் யூலலி, லூசி, யோசப்பின், இன்னசன்ஸ், கசில்டா, மேரி ஜோசப், மாறி, பிறிடி சுவிட், கொன்சீலியா, ஆன், அனபல், டொத்தியா, கனிஸ், மேபிள், மாறி, தியோபின், டீலெக்ரா, வில்மா, எலிசபெத், அருள்மரியா ஆகியோராவார்.

தணியாத தாகம் கல்வியைப் பொறுத்தமட்டில் தனியொரு வேகம்; இதற்கு உதாரணமானவர் அருட் சகோதரி மாறி அவர்கள். அவர் தொட்டதெல்லாம் துலங்கும்; பண்பாகப் பக்குவப்படுத்துவார். இவரது காலத்திலேதான் 1947 இல் சிங்கள மாணவர் கல்வி பயிலும் பொருட்டு சிங்கள மொழிமூலம் கல்வி கற்பிக்கப்பட்டது. தமிழ், சிங்கள மாணவர்கள் ஒரு தாயின் பிள்ளைகள் போல் பாடசாலையில் உலா வந்தார்கள்.

பாடசாலையின் முன்னேற்றத்தை மூச்சாகக் கொண்டு உழைத்த அதிபர் அருட் சகோதரி மேபிள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவர்கள் சுறுசுறுப்பும் துடிப்பும் மிக்கவர். இவ்வதிபரின் காலத்தில் சிசிலியா அன்னை சீர் பெற்றாள்.

**உயர்வை நோக்கிய உயர்தரம்**

பாடசாலையின் வரலாற்றில் 1970 களில் க. பொ.த உயர்தர கலைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து விஞ்ஞான, வர்த்தக, கணிதப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. பாடசாலை விருது வாக்கான பெருமைகளைத் தேடிக் கொள்வதல்ல; பெருமையோடு வாழ்வது என்பதற்கேற்ப பாடசாலை என்ற குடும்பத்து அங்கத்தவர்கள் அனைவரும் செயற்பட்டு வந்தார்கள்.

**சூறாவளியும் பாடசாலையும்**

1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி சூறாவளி கிழக்கு மாகாணத்தைத் தாக்கியது. அவலம் நிறைந்த ஆதரவற்ற வாழ்க்கையை மக்கள் எதிர்கொள்ள வேண்டிய ஏற்பட்டது. மக்கள் சூறாவளிக்கு அஞ்சி பாடசாலைகளில் சரணடைந்தார்கள். இவ்வேளையில் புனித சிசிலியா புகலிடமளிக்கும் இல்லிடமாக மாறியது. பாடசாலையின் கூரைகள் காற்றினால் சூறையாடப்பட்டன. தளபாடங்கள், உடைபாடடைந்த கட்டிடங்கள், ஆவணங்கள் என அனைத்தையும் சீரழியாமல் அப்போதிருந்த அதிபர் அருட் சகோதரி தியோபின் தனது மதிநுட்பத்தினால் தடுத்து வெற்றி கொண்டார்.

அருட் சகோதரி தியோபின் மன்னாரைப் பிறப்பிடமாக் கொண்டவர். மட்டு. நகரில் கல்வி பயின்றார். கல்வி பயின்ற பாடசாலையிலே அதிபராகுமளவிற்கு அறிவு நிரம்பியராக விளங்கினார். 1970 தொடக்கம் 1980 வரை அதிபராக பணிபுரிந்தார். அருட் சகோதரி தியோபின் காலத்திலேதான் அனைத்து உயர்தரப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டதுடன் 1ஏபி பாடசாலையாகவும் உயர்வு பெற்றது.

**பணியினால் உயர்ந்த பண்பட்ட உள்ளம்**

காலமும் நேரமும் அலைகளும் யாருக்காவும் காத்திருப்பதில்லை. ஆனால் இவைகளைக் கடந்து சிலர் நமது மனதில் நீங்காத இடம் பெற்று விடுகின்றனர். அந்த வகையில் 1989 தொடக்கம் 1995 வரை பதினைந்து வருடகாலம் பணிபுரிந்த அதிபர் அருட்சகோதரி டி லெக்ரா அவர்கள் பாடசாலைக்கு மகாமத்துவத்தை பெற்றுக் கொடுத்தார். இவரது பதவிக் காலத்தில் கல்வியுடன் ஒன்றிணைந்த வகையில் விளையாட்டுடன் புறக்கிருத்தியங்கள் அனைத்தும் வளர்ச்சி கண்டன. சிறந்த முகாமைத்துவம் உடையவராக விளங்கினார். (ஏனைய பாடசாலை அதிபர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சியளிக்கும் ஆசான்)

இவரது காலத்தில் பாடசாலையின் இடவசதியை அதிகரிக்கும் வகையில் கொய்யா வளவு பெற்றுக்கொள்ளப்பட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. கொய்யா வளவில் இரண்டு மாடிக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. க.பொ.த (சா/த), (உ/த) சகல பிரிவுகளிலும் சிறந்த பெறுபேறுகள் பெறப்பட்டு விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களது எண்ணிக்கை பல்கலைக் கழக மட்டத்தில் அதிகரித்தன. அருட் சகோதரி டிலெக்ரா அவர்கள் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் இலங்கை, பாகிஸ்தான் மாகாணத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சிசிலியாவின் முகாமைத்துவப் பணியில் நின்று நீங்கி வாழ்வின் தவப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்தார்.

**சமூகத்தோடு ஒன்றுபட்ட சிசிலியா**

1990 களில் ஏற்பட்ட கலவரத்தின் விளைவாக மட்டுநகர் எங்கும் பதட்டம் நிலவியது. வீடுகளில் இருக்க அஞ்சிய மக்கள் பாடசாலையில் சரணடைந்தனர். பாடசாலை அகதி முகாமாகியது. அருட் சகோதரிகளும் அபயக்கரம் நீட்டி வந்த மக்களை அரவணைத்து தம்மாலான உதவிகளைச் செய்தனர். அகதி முகமாக இருந்த பாடசாலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம், ஜனனம் சம்பவங்கள் நிகழ்ந்து சமூகத்துடன் ஒன்றுபட்டதாக புனித சிசிலியா திகழ்ந்தது. ஒரு வைத்தியசாலையாக இயங்கி சத்திர சிகிச்சை உட்பட அனைத்தும் இப்பாடசாலையில் இடம்பெற்றன. எந்த இக்கட்டான வேளையிலும் கூட தனது இலட்சியமான கல்வியூட்டுதல் எனும் விடயத்திலிருந்து இப்பாடசாலை தவறவில்லை.

சிலியா அன்னையின் கல்விப் பணியில் 1995 இல் அதிபராக பணிபுரிந்த அருட் சகோதரி வில்மா மென்மையான குழந்தை உள்ளம் படைத்தவர். தனது மென்மைத் தன்மையோடு முகாமைத்துவ நிர்வாகத்தை செவ்வனே வழி நடத்தினார். அருட் சகோதரி டிலெக்ராவின் பிரிவினால் வாடியிருந்த உள்ளங்களுக்கு ஏற்ற மருந்தாக இவ்வதிபர் திகழ்ந்தார்.

### 125 வருட நிறைவில் சிசிலியா

அதிபராக அருட்சகோதரி எம். எலிசபெத் அவர்கள் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆண்டு மாசி மாதம் வரை பதவி வகித்த காலப்பகுதியில் பாடசாலை காத்திரமான துரித வளர்ச்சிகளைப் பெற்றதைக் கண்டு பாடசாலை சமூகம் மகிழ்வுற்றது. இப்பாடசாலையில் மாணவியாகக் கல்வி பயின்று, ஆசிரியராக அரும்பணி புரிந்து, உப அதிபராக கடமையாற்றி அதிபராக உயர்வு பெற்றார். துடிதுடிப்பு மிகுந்தவர். சொல்லிலும் செயலிலும் புதுமையை நாடி நிற்பவர். மன்னார் தந்த மங்காத தவச் செல்வி; தனது துறவற வாழ்வில் வெள்ளி விழாக் கண்ட நாயகி; தூய்மையும் குழந்தை உள்ளமும் நிறைந்தவர். ஆனால் கண்டிப்பு மிகுந்தவர்.

தமது முன்னோரின் அடிச்சுவட்டில் சென்ற இவரது காலத்தில் அனைத்து நிகழ்த்துகைக்கும் உந்து சக்தியாக விளங்கும் அன்னை வெரோணிக்கா கலையரங்கம் உருப்பெற்றது; விளையாட்டுத்துறை உயர்வை விளக்கும் விளையாட்டு அரங்கம், மாணவர்களின் நுண்ணறிவை உயர்த்தவல்ல நூலகம், நேரத்தை வீணடிக்காது விரைந்து செல்ல மேம்பாலம், பாடசாலையின் எழிலை எழிலூட்டவல்ல அழகிய நுளைவாயில், பாடசாலையை அரண் செய்யும் முன்புற அழகிய சுற்றுமதில், மாணவர்களின் விஞ்ஞான அறிவு மேம்பாட்டிற்கு வித்திடும் விஞ்ஞான கூடம், கல்வியறிவூட்டி கவின்பெறு மூன்று மாடிக் கட்டிடம், ஆரம்ப பிரிவு அழகிய கட்டிடத்தொகுதி, மாணவர்களின் தேவைக்கேற்ப மலசலகூடங்கள், கணனி அறிவை மேம்படுத்தவல்ல கணனிக் கூடம், கேட்கும் திறனை வளர்க்கும் கேட்டல் அறை (Audio Room). கொய்யாவளவைச் சுற்றியுள்ள மதில், அலுவலகத்தின் முன் புனித சிசிலியாவின் உருவச் சிலை போன்ற இன்னோரன்ன விடயங்களைக் குறிப்பிடலாம். ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சிறந்த அதிபருக்கான விருதினை 2011இல் அதிபர் அருட் சகோதரி எம். எலிசபெத் அவர்கள் பெற்றிருந்தார். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில், க. பொ. த (சா/த), க. பொ. த (உ/த) ஆகிய முக்கிய பரீட்சை மாணவர்கள் அதிகூடிய சித்திகளை பெற உந்து சக்தியாக செயற்பட்டார்.

சிசிலியாக் கல்லூரி 2001இல் தனது 125 ஆவது வருட நிறைவைக் கொண்டாடியது. இதனை முன்னிட்டு புதிய சீருடை (மரூண் நிறம்) மாணவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான காலணி கறுப்பு நிறமாக மாற்றியமை, ஆசிரியர்களுக்கான சீருடை, விசேட சஞ்சிகை வெளியீடு, சிசிலியா வீதி எனப்பெயர் சூட்டப்பட்டமை, மட்டக்களப்பு மாநகரத்தை அதிசயத்தில் ஆழ்த்திய சிசிலியன் நடை (Ceilian walk) போன்றன மிகவும் சிறப்பாக நடந்தேறியது வரலாற்றில் நிகழ்ந்த புதுமைகளாகும்.

### ஆழிப் பேரலையில் உதவிக் கரம் நீட்டிய சிசிலியா

2004 இல் ஆழிப்பேரலையில் அல்லலுற்றவர்களுக்கான உறைவிடமாக சிசிலியா மாறியது. ஆதரவற்றவர்களுக்கு அன்புக் கரம் நீட்டி அரவணைத்து ஆறுதல் அளித்ததில் அதிபர், ஆசிரியர்களின் பங்கு காத்திரமானதாக இருந்தது. மீளக்குடியமரும் வரை பாடசாலையிலேயே பாதிக்கப்பட்டோர் தங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பல்துறை பங்களிப்பு

1995 முதல் ஒவ்வொரு வருடமும் சிசிலிய ராகங்கள் எனும் பெயரில் பாடசாலை சஞ்சிகை பாடசாலை நிகழ்வுகளை உள்ளடக்கி மாணவர்களது எழுத்தாற்றலுக்கு உந்து சக்தியாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. வின்சன் மகளிர் உயர்தரக் கல்லூரிக்கும் சிசிலியா கல்லூரிக்கும் இடையேயான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி ஒழுங்காக நடாத்தப்பட்டு வருகின்றது.

ஏஎரி நிறுவனத்தால் நடாத்தப்படும் சிறந்த நிர்வாகத்தை பேணும் பாடசாலைகளுக்கான போட்டியில் ஐந்து வருடங்களாக மாகாண மட்டத்தில் தொடர்ந்து முதல் இடத்தை பிடித்து சாதனை படைத்து வருகின்றமை சிசிலியாக் கல்லூரியின் சிறந்த முகாமைத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

அருட் சகோதரி எம். எலிசபெத் அவர்கள் 2014 ஆம் ஆண்டு மாசி மாதம் ஓய்வு பெற்றதையடுத்து அருட்சகோதரி அருள் மரியா அதிபராகப் பொறுப்பேற்று தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வருகின்றார்.

### சாதனையின் உன்னதம்

இறைவன் இக்கல்லூரி மேல் பொழியும் அருட்கொடைகள் எண்ணிறைந்தவை. வரலாற்றை நோக்கும் போது வாழையடி வாழையாக இப்பாடசாலையை ஸ்தாபித்து, வளர்த்து, வளப்படுத்தி, நெறிப்படுத்தும் பணியில் உந்து சக்தியாகத் திகழ்பவர்கள் மேதகு ஆயர்கள். இந்த வரிசையிலே பாடசாலையின் போசகராக அதிவணக்கத்துக்குரிய மட்டக்களப்பு மறைமாவட்ட அதிவணக்கத்துக்குரிய ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகையின் ஆத்மார்த்தமான பங்களிப்பு பாடசாலைக்குக் கிடைத்தமை கிடைத்தற்கரிய பேறாகும்.


இப்பாடசாலையின் அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையாகவும் மனநிறைவுடனும் பணிபுரிவதன் விதம் அனைத்து சமய விழாக்களும் இங்கு நடைபெறுகின்றன.


### பக்கபலமும் பங்களிப்பும்

சிசிலியா அன்னையின் வளர்ச்சியில் பலரது பங்களிப்பும் பக்கபலமாக உள்ளது. ஒரு விருட்சத்திற்கு எவ்வாறு அதன் உறுப்புகள் உதவுகின்றதோ அதேபோல் இக்கல்விக் கூடத்திற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்களிப்பு காத்திரமானது. இதுபோல் பழைய மாணவ சங்கமும் பாடசாலை வளர்ச்சியை தமது கண்ணும் கருத்துமாகக் கொண்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த. சாதாரண, உயர்தரத்தில் சிறந்த பேறுகள் பெற்று மட்டுநகரில் முதன்மைப் பாடசாலையாகத் திகழ்கின்றது. இன்றைய பெறுபேறுகளுக்கு இப்போதுதான் அதிபர், ஆசிரியர்கள் மட்டுமன்றி இதன் முன்பு சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களும் பாத்திரமானவர்கள். தமிழ்த்தினம், ஆங்கில தினம் உட்பட ஏனைய அமைப்புகளால் நடாத்தப்படும் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை நிலைநாட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது. ஆளுமையை வளர்க்கும் விளையாட்டுப் போட்டிகளில் மாகாண தேசிய மட்டங்களிலும் பங்கு கொண்டு சாதனைகளைப் படைப்பதும் சிசிலித்தாவின் மாணவிகளாவார்.

138 ஆவது வருட நிறைவைக் காணும் புனித சிசிலியா பெண்கள் தேசிய கல்லூரி கீழ்த்திசையில் கதிரவனாகக் கல்விப் பணியில் ஒளிர்ந்து கவின் பேறு கலைக் கூடமாகத் திகழ வாழ்த்திசைக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2014 மேல் மாகாண அச்சிடப்பட்ட விபரக்கொத்தினை**

# இலவசமாக

**பெற்றுக்கொள்ளுங்கள்**

Computers
Taxi Cabs
Architects
Hotels
Jewellers
Wedding Halls
Leisure
Water Tanks
Interior
Education
Safety Equipment
Motor Spare Parts
Hardware
Pest Control
Tools
Marine
Plumbers
Government Departments
Laboratory
Gems
Security
Pets & Pet Care
Ministries
Florists
Ambulance Services
Corporations
Printers
Stationery
Garments
Tyres
Caterers
Photographers
Municipal Councils
Leasing & Finance
Hospitals
Ayurvedic Products
Aircondition Equipment
Aquariums
Roofing
Doctors
Mobile Phones
Restaurants
IT Solutions
Agriculture
Diplomatic Missions
Office Furniture
Banks
Constructions
Opticians




**அனைத்தையும் உடனடியாக தேடிக்கொள்ளுங்கள்**

**ஆயிரக்கணக்கான அரச மற்றும் வியாபார ஸ்தாபனங்கள், சமய நிறுவனங்கள், உற்பத்தி மற்றும் சேவை வழங்குநர்களை தேடிக்கொள்ளுங்கள்.**

**மேல் மாகாணத்திலுள்ள ஸ்ரீலங்கா டெலிகொம் வசிப்பிட வாடிக்கையாளர்கள் தமது வியாபார விபரக்கொத்தை இப்போது மேல் மகாணத்திலுள்ள ஏதேனுமொரு பிரதேச டெலிகொம் அலுவலகத்தில் அல்லது டெலிஷொப்பில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.**

SLT RAINBOW PAGES
The National Business Directory


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிர்வாகப் பணி

## 'நாகதீள்நகர்' என்ற நெடுந்தீவு-4

மா. கணபதிப்பிள்ளை
பணிப்பாளர் (தமிழ்), மும்மொழி விருத்திக்கான துரித செயலணி

நெடுந்தீவு மக்களுக்கான புரதான நிர்வாகப் பணிமனை நெடுந்தீவு மத்தியில் அமைந்திருந்தது. அதன் கட்டமைப்பு இணக்கசபை முறை போல் காணப்பட்டுள்ளது. உள்ளூரில் சமூகத்தில் மதிப்புள்ள பெரியார்கள் ஓரிடத்தில் கூடி, முறையாக விசாரித்து, நீதிவழங்கினார்கள் என்ற கர்ண பரம்பரைக் கதைகள் இன்றும் வழக்கத்தில் உண்டு. மனு நீதிச்சோழன் போன்று உற்றார், உறவினர், நண்பர்கள் என்று இல்லாது நடுநிலை தவறாது அவர்கள் அளித்த தீர்ப்பால் மீண்டும் குற்றங்கள் நிகழாது இருந்தன என்பதுடன் அத்தகைய பெரியார்கள் கோவில் திண்ணைகளில் கூடி, கிழக்கு நடுக்குறிச்சி, மேற்குப் பிராந்தியங்களில் சின்னஞ் சிறிய பிரச்சினைகளுக்கு உடனடியாக (On the spot) தீர்வு கொடுத்தனர் எனக் கூறப்படுகின்றது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்தியாவில் இருந்து 18 முதலிமார் வந்ததாகவும் அதில் தனிநாயக முதலி நெடுந்தீவைத் தெரிவு செய்து அங்கேயே குடியேறினார் எனவும் அவரின் வருகையின் பின் இக்கிராமிய நிர்வாகம் மாற்றமடைந்ததாகவும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. தனிநாயக முதலியின் நிர்வாகம் மிகச்சிறப்பாக இருந்ததாகவும் நீதிவழுவாப் பெரும் நிர்வாகியாக விளங்கினார் எனவும் அவரின் முன்மாதிரி ஏனைய இடங்களிலும் பின்பற்றப்பட்டதாகவும் காலிங்க முதலியார் குறிப்புக்கள் குறிப்பிடுகின்றன.

### அந்நியர் வருகையின்பின்

போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதில் காட்டிய அக்கறையை நிர்வாகப் பணிகளின் காட்டவில்லை. ஆனால் ஒல்லாந்தர்கள் ஏலவே தமக்குப் பரிச்சயமான றோமன் டச்சுச் சட்ட விதிகளுடன் இலங்கையின் பாரம்பரியமாகக் காணப்பட்ட நிர்வாக முறைகளைத் தொகுத்து, தேசவழமைச் சட்டம் என்று பின்னர் குறிப்பிடப்படும் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றினர். இவர்கள் காலத்தில் நெடுந்தீவின் மத்தியில் கடற்கரையை அண்மித்த பகுதியில் . தற்போதைய பிரதேச செயலாளர் காரியாலயத்து வளவில் நிர்வாகக் காரியாலம் அமைக்கப்பட்டு இருந்தது எனவும் வெடியரசன் கோட்டையில் இருந்து குதிரை வண்டில்களில் வந்த அதிகாரிகள் இப்பணிமனையில் இருந்து நிர்வாகம் செய்தனர் எனவும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மணியகாரர், உடையார் முறைமைகள் வரை இந்த நிர்வாகமே செயற்பாட்டில் இருந்து வந்தது. ஆங்கிலேயர் காலத்திலும் பல முதலியார்கள் நியமிக்கப்பட்டனர். தனிநாயக முதலியாரைத் தொடர்ந்து கந்தப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்து நீதிமன்ற வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்ற கட்டிடத்தில் அழியாத வர்ணத்தில் துல்லியமாகத் தெரியும் பிரித்தானிய இலச்சினையும் வருடமும்






ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தெற்காசிய நகரங்களுடனான இராணுவ, நிர்வாக செய்தி பரிமாற்றங்களுக்காக பயன்படுத்தப்பட்ட புறாக்கூடு

முதலியார் பற்றிய குறிப்புக்களும் மத்தேயு முதலியார் பற்றிய குறிப்புக்களும் காணப் படுகின்றன. மத்தேயு என்பது கத்தோலிக்கர் என்பதால் 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவராக அவரைக் கருதலாம்.

ஒல்லாந்தர்களால் கட்டப்பட்ட நீதிமன்றம் உடைக்கப்பட்டு விட்டபோதும் ஆங்கிலேயரும் அதேஇடத்தில் நீதிமன்றம் ஒன்றைக் கட்டினார்கள். அவர்களின் அக்கட்டிடத்தில் நீதிவான் அமரும் சிறிய மேடைக்கு பின்னால் உள்ள சுவரில் பிரித்தானிய இலச்சினையுடன் 1906 ஆம் ஆண்டு என்ற குறிப்பும் பொறிக்கப்பட்டுள்ளது. இது நூறாண்டுகளைக் கடந்துவிட்ட போதும் இன்றும் அழியாத வர்ணத்தில் துல்லியமாகத் தெரிகின்றது.

இந்நீதிமன்றக் கட்டிடம் நல்ல வசதி கொண்டதாகக் கட்டப்பட்டுள்ளது. இதன் அயலில் உள்ள நீதியரசர்கள் இளைப்பாறும் இடமும் அவர்கள் வதிவிடமும் நல்ல வசதிகளுடனும் அகன்ற அறைகள், நீண்ட வராந்தா கொண்டதாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். அதேபோல் குளியலறை, மலசல கூடம் போன்றவையும் பெரிய விசாலமானதாக உள்ளதை இடியுண்டு கிடக்கும் கட்டிடச் சிதைவுகளுக்கு இடையில் அவதானிக் கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நீதிமன்றத்திற்கு அருகில் காணப் படும் இடிபாடுள்ள கட்டிடம் கைது செய்யப்பட்டோரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்காகவும் அதற்குப் பின்னரும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது. மிகுந்த காற்றோட்டம் உள்ள வகையில் தனிமனிதர்களைக் கௌரவமாக நடாத்தும் பாணியில் கூடுகள் அமைக்கப் பட்டிருந்தன. குற்றம் சாட்டப் பட்டவர்கள் குற்றவாளிகள் அல்லர் என்ற அடிப் படையில் அவர்கள் தமது பக்கத்து நியாயங்களைச் சுட்டிக் காட்டி நிரபரா தியாக்கிக் கொள்ளும் எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டதுடன் கைதிகள் மனிதர்கள் என்ற வகையில் மதிக்கப் பட்டனர் என்பதை அக்கட்டி டத்தை பார்ப்போர் கண்டு கொள்ளலாம்.

இந்த நீதிமன்ற வளாக கட்டிடங்கள் ஆக்கக் குறைந்தது இந்த மட்டத்திலாவது பாதுகாக்கப்பட வேண்டும். எமது பிரதேச த்தில் வரலாற்றுப் புகழ்மிக்க கட்டிடங்களை பிரதேச சபை பூரணமாகப் பாதுகாக்க முன்வர வேண்டும். இல்லையேல் கால வோட்டத்தில் இக்கட்டிடங்களும் அழிந்து போனால் வெறும் காட்டு மிராண்டிகள்தான் வந்தார்கள் என்றவாறு கண்டவர்களும் எழுதும் நிலை வரலாம். எனவே எமது வரலாற்றுப் பாரம்பரியங்களை நாம்தான் தேடிப் பாதுகாக்க வேண்டும். நீதிமன்ற சிறைக்கைதிகள் கூடம், சட்டத்தரணிகள் இளைப்பாறுமிடம், நீதியரசர் வதிவிடம், நீதியரசர் இளைப்பாறுமிடம் போன்றவை முருங்கைக் கல்லால் கட்டப்பட்டுள்ளதால் மிக வேகமாக நிலை குலைந்து வருகின்றன. நீதிமன்றக் கட்டிடத்தில் பொறிக்கப் பட்டிருந்த இலச்சினையும் ஆண்டும் சுண்ணாம்புப் பூச்சால் மறைந்து கிடந்தது. 1980 களில் நெடுந்தீவுக்கு சுற்றுலா வந்த பிரித்தானியர்களிடம் இவ்விடம் நீதிமன்ற மாகச் செயற்பட்டது என்று ஊரவர்கள் குறிப்பிட்டபோது நேராக நீதிமன்றக் கட்டிடத்திற்குள் சென்ற அப்பிரித்தானிய உல்லாசப் பயணிகளில் ஒருவர், சுவரில் ஒரு குறிப்பிட்ட இடத்தை கணிப்பிட்டு அந்த இடத்தில் சிறிய சுத்தியலால் தட்டியபோது மேற்பூச்சான சுண்ணாம்புப் பூச்சு கழன்று இலச்சினையும் ஆண்டும் தென்பட்டன. இவ்வாறு நெடுந்தீவில் எத்தனையோ வரலாற்று ஆதாரங்கள் மறைந்திருக்க வாய்ப்புண்டு. எமது பிரதேச ங்களில் காணப்படும் குறிப்புகளில் மாத்திரமன்றி நெதர்லாந்து, இங்கிலாந்து, போர்த்துக்கல் போன்ற நாடுகளில் உள்ள ஆவணங்களும் சான்றா தாரங்களாக ஆராயப்பட்டால் மறைத்து கிடக்கும் பல உண்மைகள் வெளிக் கொணரப்படலாம். சின்னஞ்சிறிய சான்றுகளுக்காக எத்த னையோ அகழ்வாராய்ச்சிகள், தேடுதல்கள்



அழிவடைந்த நிலையில் காணப்படும் பிரித்தானிய நீதிமன்ற கட்டிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்படும் இக்காலத்தில் பாரிய வரலாற்று ஆதாரங்களைக் கொண்ட இத்தீவகக் குறிப்புக்கள் பற்றி தேடப் படாமல் இருப்பது வேதனைக்குரியது.

**புறாக் கூடு**

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்குட் பட்டிருந்த 1602 முதல் 1796க்கு இடைப் பட்ட காலப்பகுதியில் இப்புறாக்கூடு கட்டப்பட்டதாக தெரியவருகின்றது. பின்னர் ஆங்கிலேயர் இதைப் புனருத் தாரணம் செய்துள்ளார்கள். ஒல்லாந்தர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் தெற்காசிய நிர்வாகத்தில் முக்கியத்துவம் பெற்ற நகரங்களாக சென்னை, கோவை திகழ்ந்தன. இந்நகரங்களுக்கிடையிலான நிர்வாகம், இராணுவம் போன்ற முக்கிய செய்திகளை புறாக்களின் மூலம்தான் பரிமாறினார்கள். புராதன தொடர்பாடல் முறைக்கு புறாக்கள் பாரிய பங்களிப்புச் செய்தன என்று குறிப்பிடுவர். அந்தவகையில் இப்புறாக் கூடு இராணுவ, நிர்வாக இரகசியங்களைப் பெறும், அனுப்பும் மையமாக விளங்கியது என்ற குறிப்புக்களும் உள்ளன. இன்றும் புலம்பெயர்ந்து வரும் புறாக்கள் இங்குவந்து தங்கிச் செல்வதையும் அவதானிக்கலாம்.



நீதிமன்ற வளாகத்தில் கைதிகளை அடைத்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட கட்டிடத்தொகுதியும் மலசலகூடமும்



அந்நியர்களின் கட்டிடங்களில் ஒன்றான புறாக்கூடு வடிவம் கலையாது புராதன நீதிமன்ற வளாகத்தின் முன்காட்சி தரும் இதைச் சிதைவுறாது பாதுகாப்பது எமது அத்தியாவசிய கடமையாகும். இப்பணியில் நெடுந்தீவு பிரதேச சபை நிர்வாகம் கவனம் செலுத்துவதுடன் இந்தக் கட்டிடங்களை எல்லாம் பாதுகாப்பதுடன் ஒரு அலுவலரை நியமித்து வருகின்ற உல்லாசப் பயணி களுக்கு முறைப்படி விளங்கப் படுத்தினால் பெருந்தொகைப் பணத்தைப் பிரதேச சபை சம்பாதிப்பதுடன் இக்கட்டிடங்கள் அழிந்து விடாது பாதுகாக்கவும் முடியும். இத்தகைய செயற்பாடுகளில் ஆர்வம் காட்ட வேண்டும்.

ஒல்லாந்தரினதும் ஆங்கிலேயரினதும் நிர்வாகக் கட்டமைப்புக்கள் எமது புராதன, நிர்வாக நீதிமன்ற கட்டுமானங்களை அழித்து விட்ட போதும் இக்கட்டிடங் களாவது எச்சசொச்சமாய் நிற்பது, தனித்த நிர்வாக நீதிமன்ற முறைகளுடன் நெடுந்தீவு தனித்து இயங்கியது என்பதைப் பறைசாற்றி நிற்கும் சான்றாதாரங்களாகும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். வருவோரும் போவோரும் தம்பெயர் பொறித்தல், குறிப்பெழுதுதல் போன்றவற்றால் இக் கட்டிடங்கள் எதிர்காலத்தில் இன்றிருக்கும் நிலையையும் இழந்து விடலாம். எனவே தான் இப்புராதன கட்டிடங்களை எவரும் தொடாது வேலி அமைத்து, அயலில் நின்று பார்த்து விட்டுச் செல்லும் வகையில் முறையாக வழி நடாத்தும் முறைமை ஏற்படுத்தாது விட்டால் இன்னும் சொற்ப ஆண்டுகளில் இவை அழிந்தொழிந்துவிடும் என்பதில் ஐயம் இல்லை. நெடுந்தீவில் தற்போது கட்டப்படும் பிரதேசச் செயலாளர் அலுவலகத்துக்கு முன் இயங்கிய டி. ஆர். ஓ காரியாலயமும் ஒல்லாந்தர் காலத்துக் குரியது எனவும் பின்னர் சிறிய மாற்றங்களுடன் பிரித்தானியர் அதைப் பாதுகாத்தனர். இக் கட்டிடமும் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க பொக்கிசமாக பாதுகாக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

الفلاح
AL-FALAAH
ladies
ISLAMIC FINANCIAL SERVICES

# அவள் காட்டும் அளவற்ற அன்பிற்கு உபகாரம்

Empress DISCOUNT CARD
Fathima Noha
1234 5678 9012 3456

"அல் ஃலாஹ் மகளிர் " சேமிப்புக் கணக்குகளை வைத்திருப்போருக்கு
அறிமுகமாகிறது Empress விசேட தள்ளுபடி அட்டை

Empress அட்டை வைத்திருப்பவர்களுக்கு நாடெங்குமுள்ள பின்வரும் மற்றும் மேலும் அதிகமான வணிகர்களிடமிருந்து கவர்ச்சியான விலைக்கழிவுகள்

Hameedia – Real men wear real clothes
COOL PLANET
Elegant Smockers
The factory OUTLET
Dialog
Lanka Hospitals
Browns – A Heritage of Trust
VLCC
ROYAL FERNWOOD
UNCOMMON HOMES
LassanaFlora
SINGER Plus
SINGER Mega
SISIL WORLD
aito CERAMICS
sponge
Chamathka
Unforgettable
MALLIKA HEMACHANDRA JEWELLERS
Lumala City
kti
Burger Hut
DICKWELLA RESORT & SPA
EDEN Resort & Spa
GREENPARADISE
Dream Lodge
GEDARA
Birds Park
The Optical Link
Healthy Life Clinic – Life could be sweeter
sarasavi THE BOOKSHOP
RAZPAAS
INDIAN HUT Family Restaurant
HNB ASSURANCE Takaful
Amāna Takaful – Insurance Redefined
Orchard Mother Care
House of Abaya
House Of Hidayath Department Store
VISION
IMAN
The Lover
LIME LEAF INDIAN FAMILY RESTAURANT
DUTCH WALL
Empire Time – Time of Future
Medeireps private Limited
HARCOURTS PHARMACY
CHOICE PARK
KIDS UNLIMITED
VIJITHA YAPA BOOKSHOP
FH
SCISSORS
Family Mart
PARK LINE
Leather Line
Shu Limit
Safaya's
Pot Biriyani
NHH
SIMAYAS
DBL Rose Ranch

மகளிருக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட
"அல் ஃபலாஹ் மகளிர்" இஸ்லாமிய நிதிச் சேவைகள்

- வசதிக்கேற்ற சேவைகள்
- நாடெங்கிலுமுள்ள 600 ATM இயந்திரங்களுடான சேவை
- 60 இற்கும் மேற்பட்ட LOFC கிளைகள் மற்றும் விசேடமாக தெரிவுசெய்யப்பட்ட 5 அல்ஃலாஹ் கிளைகள்


5 880 785 | 0773 865 337 | 0770 780 786

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.

الفلاح
Shari'ah is our Success
AL-FALAAH
ISLAMIC FINANCIAL SERVICES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்மைப் புலமைத்துவம் மிக்க பேராசிரியர் கா.சிவத்தம்பி

- பேராசிரியர் சபா ஜெயராசா

மார்க்சிய இயங்கியலை சமூகத்துக்கும் இலக்கியத்துக்கும் சமகால அரசியலுக்கும் பிரயோகித்துப் பொருள் கோடல் செய்த ஆய்வறிவாளராக பேராசிரியர் கா.சிவத்தம்பி (1932-2011) விளங்கினார். அத்தகைய பிரயோகங்களை பேராசிரியர் வானமாமலை, பேராசிரியர் க. கைலாசபதி ஆகியோரும் வெவ்வேறு தளங்களிலே மேற்கொண்டனர். அந்த மூவரதும் புலமை முயற்சிகள் தமிழியல் ஆய்விலே புதிய புலக் காட்சிகளுக்கும் புதிய தடங்களுக்கும் இட்டுச் சென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழ் இலக்கியங்கள், சமூக வாழ்க்கை, நாடகங்கள் என்பனவற்றிலிருந்து நவீன இலக்கியங்கள், சமூகம், அரசியல், அரங்கு என்றவாறு விரிந்த ஆய்வு நீட்சியைக் கொண்டிருந்த புலமையாளராக அவர் விளங்கினார். சமூகவியலும் மார்க்சியத் தருக்கப் பிரயோகமும் அவரது ஆய்வுகளில் இழையோடியிருந்தன.

பேராசிரியரின் அனுபவப் புலங்களும் ஆய்வுப் புலங்களும் பலவாக இருந்தன. அவரது ஆரம்பக் கல்வி ஹேனமுல்லையில் இஸ்லாமியச் சூழலில் நிகழ்ந்தது. தொடர்ந்து அவரது கல்வி சைவச் சூழலில் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலும் விக்னேஸ்வராக் கல்லூரியிலும் நிகழ்ந்தது. தொடர்ந்து பல்கலைக்கழகம் புகும் வரை இஸ்லாமியச் சூழலில் கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டது.

சைவப் பண்பாட்டையும் இஸ்லாமியப் பண்பாட்டையும் தரிசித்த அவரின் புலக்காட்சி உலக நோக்கை விரிவாக்கம் பெறச்செய்தது. அந்த விரிவாக்கம் பல்கலைக்கழகத்திலே மார்க்சிய அறிவுடன் இணைந்து மேலும் விசாலித்தது.

ஆசிரியராக, நடிகராக, மொழிபெயர்ப்பாளராக, கலைச் சொல் ஆக்குனராக, உயர் நிலை ஆய்வாளராக பேராசிரியராக பல்கலைக்கழகத் துறைத் தலைவராக, பாடத்திட்ட வடிவமைப்பாளராக, கலை இலக்கிய திறனாய்வாளராக சமூக வினைப்பாட்டாளராக (activist) இதழாசிரியராக, பதிப்பாசிரியராக அவரிடத்து பொதிந்திருந்த பன்முக அனுபவங்கள் பேச்சிலும் எழுத்திலும் வாழ்விலும் எழுகோலங்கொண்டன.

அவர் எழுதிய நூல்கள். வாயிலாகப் புலமை ஆளுமையின் பன்முகப் பரிமாணங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

இலக்கியத்தில் முற்போக்குவாதம், இலக்கியமும் கருத்து நிலையும், விமர்சனச் சிந்தனைகள், தமிழில் இலக்கிய வரலாறு, ஈழத்தில் தமிழ் இலக்கியம், மதமும் கவிதையும் - தமிழ் அனுபவம், யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு - ஓர் இலக்கியக் கண்ணோட்டம், யாழ்ப்பாணம் - சமூகம், பண்பாடு, கருத்து நிலை, தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும், தமிழ் பண்பாட்டில் சினிமா, தமிழின் கவிதையியல், தொல்காப்பியக் கவிதையியல், இலக்கணமும் சமூக உறவுகளும், இலக்கணமும் கருத்து நிலையும், நவீனத்துவம் - தமிழ் பின் நவீனத்துவம், ஈழத்தின் தமிழ் இலக்கியச் சுடர் மணிகள், அரங்கு ஓர் அறிமுகம் (பேராசிரியர் மௌனகுருவுடனும் க.திலகநாதனுடனும் இணைந்து எழுதியது), தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், நாவலும் வாழ்க்கையும், தமிழ்ப் பண் பாட்டின் மீள்கண்டுபிடிப்பு, தமிழ் கற்பித்தலின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதங்கள் என்றவாறு அவருடைய தமிழ் நூலாக்கம் நீண்டு செல்கின்றது.

அவற்றுடன் அவர் பர்மிங்காம் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப் பட்டத் திற்கென மேற்கொண்ட "தமிழ் நாடகமும் அதன் சமூகமும் தொடர்பான ஆய்வும்" நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

ஆங்கிலத்திலும் பல ஆய்வு நூல்களைப் பேராசிரியர் வெளியிட்டார். பழந்தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வுகள், திராவிட இயக்கத்தை விளங்கிக் கொள்ளல், இலங்கைத் தமிழ்ச் சமூகமும் அதன் அரசியலும், ஒரு தமிழனாகவும் ஸ்ரீலங் கனாகவும் இருத்தல், அரசியல் தொடர்ப ாடலுக்குரிய ஊடகமாக சினிமா என்ற தலைப்புகளில் அவரது ஆங்கில நூல்கள் வெளிவந்தன. அவற்றுடன் பெருந் தொகையான ஆய்வுக் கட்டுரைகளையும் அறிவுப் பரவலுக்குரிய இதழ் கட்டுரை களையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதினார்.

சமூக வளர்ச்சி பற்றி மார்க்சியம் நிலை நிறுத்திய வரலாற்றுப் பொருள் முதல் வாத நோக்கில் பேராசிரியரின் ஆய்வு அணுகு முறைகள் அமைந்திருந்தன. உற்பத்தி முறை, சமூக உறவுகள், மொழி, அரசியல், கலை, இலக்கியங்கள் பற்றிய தொடர் புகளை மார்க்சிய நோக்கில் அவர் பின்வருமாறு வலியுறுத்துகின்றார்.

*"ஒரு சமூகத்தின் அல்லது குழுவின் பொருளியல் நிலைப்பட்ட உற்பத்தி முறைமையே அச்சமூகத்தில் அல்லது குழுவினுள் நிலவும் சமூக உறவுகளுக்கான திறவு கோலாகும். பொருளாதார அமைப் பினைத் தனித்தனியே விபரிப்பதிலும் பார்க்க உற்பத்தி முறைமையை விபரிப் பதனால் நாம் மனித இயக்கங்களின் தன்மைகளையும் செயல் நெறிகளையும் நன்கு விளங்கிக் கொள்ளலாம். (இலக் கணமும் சமூக உறவுகளும், 2002)*


மார்க்சிய வாதியான பேராசிரியர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கருத்தியல் வடிவமைப்பிலும் பங்கு கொண்டார். இலக்கியத்தில் முற் போக்கு வாதம் என்பதை விரிவாக விளக்கி 1978 ஆம் ஆண்டில் ஒரு நூலை வெளியிட்டார். அந்நூலில் மார்க்சியத் துக்கும் முற்போக்குவாதத்துக்குமுள்ள தொடர்புகளையும் செயல் நிலையில் அவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை யும் துல்லியமாக வெளிப்படுத்தினார்.

அக்காலத்தில் எழுதப்பட்ட ஒரு முக்கிய மான கருத்து மொழிவு, முற்போக்குவாதம் பிரசாரப் பண்புகளுக்கு முக்கியத்துவம்



செம்மொழி மாநாட்டில் அவைத்தலைமை வகிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொடுத்துக் கலைப் பண்புகளைப் பின்னே தள்ளி விடுகின்றது என்பதாகும். அந்த வாதத்தினை அவர் பின்வருமாறு எதிர் கொண்டார்.

"முற்போக்கு இலக்கியங்களிலும் தர மான, தரமற்ற இலக்கியங்கள் உண்டு. ஆதர்ச இலக்கியங்களிலும் தர வேறுபாடு உண்டு. இயலாமை எந்த ஒரு பிரிவினரதும் தனியுரிமையாகி விடாது. மேலே குறிப் பிட்ட குற்றச் சாட்டை மெய்ப்பிக்கும் முற்போக்கு இலக்கியங்கள் உள்ளன. ஆனால் அவை முற்போக்குவாதத்துக் கெதிரான சாட்சியாக அழைக்கப்படக் கூடாது. வைஸ்ணவத்தைக் கம்பன் பாடினான். வில்லிபுத்தூராரும் பாடியுள் ளார். வில்லிபுத்தூராரின் திறமைக் குறைவு வைணவத்தின் குறைபாடு ஆகாது" (இலக்கியத்தில் முற்போக்குவாதம், 1978)

அதேவேளை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினை திறனாய்வுடன் நோக்கும் புறவயத்தன்மையும் பேராசிரியரிடத்துக் காணப்பட்டது.

மிகப்பரந்துபட்ட எழுத்தாளர் கூட்ட த்தை ஒன்றிணைக்க வேண்டுமென்ற கொள்கை மேலோங்கத் தொடங்கியதால் முற்போக்கு வாதத்தின். அடிநாதமான சமூகச் சமமின்மை எதிர்ப்பிலும் பார்க்க சமூகச் சமரசத்துக்கு இடம் கொடுக்க வேண்டியதாயிற்று (எழுத்தாளனும் சிந்தனை நிலைப்பாடும், புதுமை இலக்கியம், 1984) என்பது அவரின் கருத்து.

இலங்கையின் இன முரண்பாடு களையும் இன மோதல்களையும் கோட்பாட்டு நிலையில் ஆராய்ந்தவர்களுள் பேராசிரியர் கா. சிவத்தம்பி முக்கியமானவர். பல்பண்பாட்டு வாதத்தை (Multi culturalism) வளர்த்தல், மோதல் தவிர்ப்புக் கான கோட்பாட்டு உபாயமாக அமையு மென அவர் கண்டார்.

அரசியல் தெளிவுள்ள நாடுகளில் பல்பண்பாட்டு வாதம் ஏற்றுக்கொள்ளப் படும் ஓர் எண்ணக்கருவாக இருத்தலைக் குறித்துரைத்தார்.

தென்கிழக்கு ஆசியாவில் சிங்கப்பூர் பல்பண்பாட்டு வாதத்தை ஏற்றுக்கொண்டு ள்ளமையால் அங்கு இனங்களுக்கிடையே ஒற்றுமை நிலவுகின்றது. தென் ஆசிய நாடுகளில் மத, மொழி ஒருமைக் குரல் வன்மையாக உள்ளதைக் குறிப்பிட்ட பேராசிரியர் அவற்றின் பின்புலத்தில் உள்ள பொருளியல் நலன்களையும் சுட்டிக் காட்டினார்.

பேராசிரியரின் ஆய்வு முயற்சிகள் பன்முகமானவை. தொன்மையான தமிழர் பண்பாட்டிலிருந்து சமகாலத்து யாழ்ப் பாணப் பண்பாடு வரை அவரது ஆய்வுகள் விரிந்து சென்றன. இலக்கியம், சமயம், வரலாறு, மொழி, இலக்கணம், நாடகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா, சமூகம், அரசியல் என்ற துறைகளில் ஆய்வுகள் வியாபித்துச் சென்றன. வரலாறு தொடர்பான மார்க்ஸிய நோக்கு பேராசிரியரின் ஆய்வுகளில் நீண்டு பதிந்திருந்தது. அதன் அடிப்படையில் தமிழில் இலக்கிய வரலாறு என்ற நூலை எழுதினார். முன்னைய வரலாற்று ஆய்வுகளிலே காணப்படும் மட்டுப் பாடுகளை தெளிவுபடுத்தியதுடன் ஆய்வு வழி எழும் தமது முன் மொழிகளையும் சமர்ப்பித்துள்ளார்.


தமிழ் இலக்கிய வரலாற்றை பிரித்து விளக்கும் செயற்பாட்டை முன்னைய பிரிப்புக்களில் இருந்து வேறுபட்ட நிலையில் நோக்கினார். அவ்வகையில் ஐந்து பெரும் காலப்பகுதிகள் அவரால் முன்வைக்கப்பட்டன.

அவை;

1 - கி.பி. 600 க்கு முற்பட்ட காலம்

2 - கி.பி. 600 - 1310 க்கும் இடைப்பட்ட காலம்

3 - கி.பி. 1310 - 1800 க்கும் இடைப்பட்ட காலம்



4 - கி.பி. 1800 - 1947 க்கும் இடைப்பட்ட காலம்

5 - கி.பி. 1947 க்கும் பிற்பட்ட காலம்

மேற்குறித்த பிரிவுகளை மேலும் உபபிரிவுகளாக பிரித்து தமது கருத்துகளை முன் வைத்தார்.

கி.பி. 600 க்கும் முற்பட்ட காலத்தை வீரயுக காலம், நிலப்பிரபுத்துவக் காலம், வணிகக் காலம் என்று பிரித்தார். தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது கால கட்டத்தை நிலப்பிரபுத்துவம் தமிழ் நாட்டிலே நிறுவப் பட்ட காலப்பகுதியாக விபரித்தார். அடுத்து இடம் பெற்ற காலகட்டத்தில் இஸ்லாமியர் வருகையும் நாயக்கர் ஆட்சியும் ஏற்படுத்திய விளைவுகளை விபரித்தார்.

தொடர்ந்து இடம் பெற்ற நான்காவது கால கட்டத்தில் பிரித்தானியர் ஆட்சியில் ஏற்பட்ட மேலைப்புலப் பண்பாடு மற்றும் சிந்தனைகளின் பரவலைக் குறிப்பிட்டார். ஐந்தாவது கால கட்டம் அரசியற் சுதந்திரத்துக்கு பின்னர் ஏற்பட்ட பன்முக விளைவுகளை குறிப்பிட்டு விளக்குவ தாகவுள்ளது.

பண்டைய தமிழ்ச் சங்கத்தில் நாடகம் என்ற அவரது ஆய்வு மார்க்ஸிய சமூகவியல் நோக்கில் நாடகத்தின் உருவாக்கத்தை தெளிவுபடுத்துகின்றது. திணை மரபும் ஒழுக்கங்களும் பழந்தமிழ் இலக்கியங் களிலும் தொல்காப்பியத்திலும் விதந்து பேசப்படும் விடயங்களாகவுள்ளன. திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்ப டைகள் பற்றிய பேராசிரியரின் கருத்துக்கள் பழந்தமிழ் பண்பாடு பற்றிய ஆய்வில் புதிய புலக்காட்சிகளையும் திசை மாற்றங்க ளையும் ஏற்படுத்தின.

ஆய்வு நிலையில் பேராசிரியர் எழுதிய தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் (1983) என்ற நூல் மிகவும் முக்கியமானது. இத்துறையில் ஏற்கெனவே பேராசிரியர் கைலாசபதி அவர்கள் எழுதிய பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் என்ற நூல் சமயமும் பக்தியும் சமய நிறுவனங்களும் பற்றிய சமூகவியற் சிந்தனைகளை மேலெழுப்பி தமிழ் பண்பாட்டு ஆய்வில் புதிய கருத்து நிலை வீச்சுக்களை தோற்றுவித்தது.

மதம் பற்றிய மார்க்ஸிய கருத்தை தெளிவுபடுத்தும் செயற்பாட்டை பேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் மேற்கொண்டமை தமிழ்ச் சமூகத்தில் நிலவிய சிந்தனை வழுக்களை திருத்தியமைக்கும் கற்றறிவுசார் செயற்பாடு எனலாம். அவ்வகையில் பேராசிரியரின் கூற்று வருமாறு;

"நம்மிற் பலர் நினைப்பது போன்று மார்க்ஸியம் மதத்தை முற்றாக நிராகரிக்கவில்லை. மார்க்ஸியம் மதத்துக்கான (மெய்யியல்) எடுகோளை நிராகரிக்கின்றது. ஆனால், மதம் என்பது முக்கிய சமூக நிறுவனம் என்பதை மார்க்ஸோ எஞ்சலோ என்றும் நிராகரிக்கவில்லை. மதம் ஒடுக்கப்பட்ட சீவனின் பெருமூச்சாகவும் இதயமற்ற உலகின் இதயமாகவும் இருத்தலை சுட்டிக் காட்டிய மார்க்ஸ் சமூகத்தில் மதத்துக்கு ஒரு வகிபாகம் உண்டு என்பதை நிராகரிக் கவில்லை என்ற கருத்தை அழுத்திக் கூறுகின்றார். அதனை அடியொற்றியே இலக்கியத்தில் மதமும் மானுடமும் தொடர்பான பேராசிரியரது கருத்துகள் அமைந்திருந்தன.

பேராசிரியரது கருத்தாடல்களுள் யாழ்ப்பாண சமூகத்தின் அமைப்பு, அதன் உருவாக்கம், அதன் அசைவியம், அங்கு மேலாட்சி செலுத்தும் கருத்தியல் முதலியவை சிறப்புப் பெற்றிருந்தன. புலமை நிலையில் யாழ்ப்பாண சமூகம் பற்றிய ஆய்வின் முன்னோடியாக பேராசிரியர் க. கணபதிபிள்ளை விளங்குகின்றார். அவரின் புலமைத்தூண்டல் பேராசிரியர் கா. சிவத்தம்பியிடத்து பல நிலைகளிலே செல்வாக்கு செலுத்தியுள்ளது. ஆய்வு நிலையில் மட்டுமின்றி அவரின் நாடகங்களுக்கு உயிர்ப்பூட்டும் அறிக்கை வடிவத்தையும் பேராசிரியர் கா. சிவதம்பி வழங்கினார்.

பேராசிரியரது பன்மைப் புலமைத்துவம் தொடர்பாடலியலிலும் நீட்சி கொண்டது. அந்த வகையில் அவர் எழுதிய தமிழ் பண்பாட்டில் சினிமா (2010) நீண்ட உசாவலுக்குரியது. சினிமா பற்றிக் கூற வரும் அவரது அறிமுகத்தின் பெறுமானத்தை பின்வரும் உரைப்பில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.


கலைஞர் கருணாநிதியுடன் பேராசிரியர் சிவத்தம்பி


1960களில் பேராசிரியர்

"ஒரு கலை வகை அல்லது படைப்பு ஒரு மக்கள் கூட்டத்தினரின் கலைப் பிரக்ஞைக்குள் வருவதென்பது இரண்டு தளங்களில் நடைபெறுவதாகும். ஒன்று அது அந்த மக்கள் கூட்டத்தினரின் அழகியலுக்குள் இணைத்து விடுவது. மற்றது அழகியல் பிரக்ஞைக்குள்ளே உள்வாங்கப்படுமளவுக்கு நமது உணர்வு முறையின் உள்ளே வருவதாகும். இந்த வருகை சமூக உறவுகளினூடாக சமூக இருப்பினூடாக வருவதாகும். அதாவது தமிழ் சினிமா நிஜநிலையிலோ நினைப்பு நிலையிலோ நமது சமூக வாழ்வின் பாய்ச்சலோடு இணைந்து விடுவதாகும். தமிழ் சினிமா பற்றி உயர்நிலையில் ஆய்வறிவாளர் ஈடுபடாதிருந்த பெரும் இடைவெளியை ஆழ்ந்த புலமைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடங்களோடு பேராசிரியர் நிரப்பி வைத்தார்.

மரபுக்கோடுகளில் இருந்து விடுபட்டு மாற்று தடங்களிலே கவிதைகளை ஆராயும் முறைமை இலங்கை பல்கலைக்கழக சூழலில் விபுலானந்த அடிகளாரில் இருந்து எழுச்சிகொள்ளத் தொடங்கியது. அதன் நீட்சியில் பேராசிரியர் வி.செல்வநாயகம் ஐ.எ.ரிச்சாட்டின் அணுகுமுறைகளை அடியொற்றி செயல்முறை திறனாய்வை (Practical Criticism) முதன்மைப்படுத்தினார். அதன் தொடர்ச்சியில் பேராசிரியர் க. கைலாசபதியும் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் மார்க்ஸிய திறனாய்வை முதன்மைப்படுத்தினர். தொல்காப்பியக் கவிதையில் இருந்து வளர்ந்து "மதமும் கவிதையில்" நீட்சி கொண்டு சமகாலக் கவிதை வரை அவரது ஆய்வு அகல் விரிவை அடைந்திருந்தது.

தமிழியலோடு இணைந்த தனிநபர் ஆய்வுகளையும் பேராசிரியர் முன்னெடுத்தார். அந்த வகையில் பதினொருவர் பற்றிய ஆய்வுகளை உள்ளடக்கி "ஈழத்தின் தமிழ் இலக்கியச் சுடர்கள்" என்ற நூலை வெளியிட்டார். ஆறுமுகநாவலர் தொடக்கம் பேராசிரியர் க.கைலாசபதி வரை பதினொருவர் அந்நூலில் இடம் பெற்றுள்ளனர். வரலாற்றுப்பின் புலத்தில் தனிநபர் ஆளுமையினையும் தனிநபர் ஆளுமையின் பின்புலத்தில் வரலாற்றோட்டத்தையும் தொடர்புபடுத்திப் பார்க்கும் முயற்சி பேராசிரியரால் மேற்கொள்ளப்பட்டது.

பேராசிரியரது உயர் கல்வி செயற்பாடுகள் பன்முகப்பட்டவை. அவர் அறிவை வழங்குபவராக மட்டுமின்றி உருவாக்குபவராகவும் செயற்பட்டார். சென்னை பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் தென் ஆசிய மையம், அனைத்துலக தமிழாராய்ச்சி நிலையம், உப்சலா பல்கலைக்கழகம், கிழக்கு இலங்கை பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வருகைப் பேராசிரியராக பணிபுரிந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்தவேளை தமது விடுப்பையும் ஓய்வையும் வினைத்திறனுடன் பயன்படுத்திய பேராசிரியர் நிரலில் அவர் முதலிடம் பெறுகின்றார்.

கலிபோர்னியா பல்கலைக்கழகம், ஹாவார்ட் பல்கலைக்கழகம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முதுநிலை ஆய்வாளராகவும் பணியாற்றினார்.

"தந்தக்கோபுரம்" எனப்படும் மரபு நிலைப் பல்கலைக்கழக தளத்தை மீறி சமூகத்தின் அடித்தளங்களுக்கு இறங்கி வந்து செயற்பட்ட ஒரு வினைப்பாட்டாளரும் ஆவார். அவரின் சமகால அரசியல் எழுத்தாக்கங்கள் ஒடுக்குமுறையின் கனதியை சுமந்த ஆழ்ந்த தேடல்களுடன் இணைந்தன. நிதானமான அரசியல் நோக்கும் உரையாடலும் அவரிடத்தே நிலைத்திருந்தது.

ஆழ்ந்த உலக நோக்கு அவரிடத்தே காணப்பட்டாலும் குடும்ப நேசிப்பிலும் நிறைகுடமாக இருந்தார். அவர் எழுதிய ஒவ்வொரு நூலிலும் அதற்குரிய பதிவுகளைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கூந்தலை அலங்கரித்து
## எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்ளுங்கள்

**சிகை அலங்காரம் மற்றும் அழகுக்கலைத் துறையில் விசேட ஆர்வம் கொண்ட உங்கள் அனைவருக்கும் சன்சில்க் வழங்கும் புலமைப் பரிசில்களை வென்று, அழகுக் கலைத் துறையின் உச்சத்தை அடைவதற்கான அரிய வாய்ப்பு இப்போது மலர்ந்துள்ளது.**

சன்சில்க் உடன் ரமணி பெர்னான்டோ 10வது முறையாகவும் இணைந்து, வெற்றிகரமாக நடத்தப்பட உள்ள சிகை அலங்கார மற்றும் அழகுக்கலை பாடநெறிகளில் கலந்து கொள்ளும் உங்களுக்கு கீழ் காணும் வாய்ப்புகள் வழங்கப்படும்.

- தெரிவு செய்யப்படும் 12 மாணவ மாணவியருக்கு பாடநெறியை இலவசமாக பின்பற்றுவதற்கான முழுமையான புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். புலமைப் பரிசிலின் பெறுமதி ரூ.100,000க்கும் அதிகமானது.
- மேலும் 20 மாணவ மாணவியர்களுக்கு 35% வரையிலான ஆறுதல் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். (வயது எல்லை கிடையாது)
- பிரபல சிகை அலங்கார நிபுணர் ரமனி பர்னான்டோ மற்றும் பிரபல பயிற்சி ஆலோசகர்களின் வழிநடத்தலின் கீழ் இப் பாட நெறிகள் 4 மாத காலத்திற்கு நடைபெறும்.
- பாட நெறியின் இறுதியில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பெறுமதிமிக்க டிப்ளோமா சான்றிதழ் ஒன்று Ramani Fernando Sunsilk Hair & Beauty பயிற்றுவிப்பு நிலையத்தாரிடம் இருந்து உங்களுக்கு வழங்கப்படும்.
- பாட நெறியின் இறுதியில் மாணவ மாணவியர்களுக்கு City & Guilds மற்றும் NVQ சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்களை கோர முடியும்.
- விசேட திறமைகளை வெளிப்படுத்துவோருக்கு ரமணி பர்னான்டோ அழகு கலை நிலைய வலையமைப்பில் தொழில் வாய்ப்புகளும் வழங்கப்படும். (இறுதித் தீர்ப்பு சன்சில்க் வர்த்தக நாமம் வசமுடையது)
- வார நாட்களில் அல்லது வார இறுதி நாட்களில் கண்டி அல்லது கொழும்பில் இப் பாடநெறிகளை பின்பற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பிப்பதற்கான குறைந்தபட்ச தகுதிகள்:**

- 18-27 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும் (பகுதி புலமைப் பரிசிலுக்கு எல்லை இல்லை)
- க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் (புலமைப் பரிசிலின் இறுதித் தீர்மானம் தெரிவுக் குழு வசமுள்ளது)
- ஆக்கத்திறமை மிக்கவராக இருத்தல் வேண்டும்

**பாடநெறி 2014 ஜூன் மாதம் 28ம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதால் கீழ் காணப்படும்**
கூப்பனை நிரப்பி சுய விபரக் கோவையுடன் விண்ணப்பத்தை 2014 ஜூன் 9ம் திகதிக்கு முன்னர் எத்தகைய சன்சில்க் லேபல்கள் 2 உடனும் அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி Sunsilk Hair & Beauty Scholarships, Ramani Fernando Sunsilk Hair & Beauty Academy, 70, 2/14H, Lucky Plaza Building, St. Anthony's Mawatha, Colombo 3. புலமைப் பரிசிலின் வகையை உறையின் மேல் இடது பக்கத்தி குறிப்பிடவும்.

இந்த புலமைப் பரிசிலை பெறுவதற்குரிய உங்கள் தகுதியை விளக்கப்படுத்தும் கடிதமொன்றினை உங்கள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புங்கள்.

City & Guilds
Approved Centre
Registered with TVEC under PO1/0406

* Conditions Apply.

---

பெயர் ................................................ தொலைபேசி (Res) ........................ (Mob) ........................

மின்னஞ்சல் ................................................

வயது ................................................

பாடநெறியை பின்பற்றும் நகரம் - கண்டி / கொழும்பு

முகவரி ................................................

புலமைப் பரிசில் வகை -
முழு புலமைப் பரிசு / பகுதி புலமைப் பரிசு

................................ மாவட்டம் ........................ NIC ................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு நூதனசாலையில்
தொன்மையை பறைசாற்றும் சான்றுகள்

# மட்டுவின் மகத்துவங்கள் கூறும் பயன்மிகு ஏடுகள்

செல்வி க.தங்கேஸ்வரி பி.ஏ.
தொல்பொருளியல் சிறப்பு

(கடந்த மாதத் தொடர்ச்சி)

மேலும் சில ஏடுகள் வேதநாயகம் - கிரான் குளம் அலையப்போடி - தம்பாப்பிள்ளை - செங்கலடி (சிறிய வைத்திய ஏடு) என்பனவும் வழங்கப்பட்டு உள்ளன. இவ்வேடுகள் அனைத்தையும் பொதுவான சில பிரிவுகளுக்குள் உட்படுத்தலாம்.

அ) கூத்து ஏடுகள், ஆ) வைத்திய ஏடுகள், இ) வழிபாட்டு ஏடுகள்

முதலில் கூத்து ஏடுகள் பற்றி பார்த்தல் பொருத்தமானது.

### அ) கூத்து ஏடுகள்

இந்த நூதன சாலையிலே கூத்து ஏடுகளாக சாம்பேந்திரன் நாடகம், அலங்கார ரூபன் நாடகம், அனுருத்திரன் நாடகம் ஆகியன உள்ளன. இவைகளை நூலுருவில் எழுதி வெளியிட வேண்டும் என்றெல்லாம் அப்போது இருந்த கலாசார பேரவை திட்டமிட்டது. ஆனால் செயற்படுத்த முடியாமல் போய்விட்டமை துரதிஷ்டமே. காரணம் அப்போதைய அரச அதிபர் கலாசார உத்தியோகத்தர் மாற்றம் சில உறுப்பினர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறப்பு போன்றனவாகும். எனவே இவ்வேடுகள் பற்றிய சுருக்கமான தகவல் இங்கு தரப்படுகிறது. பொதுவாக கூத்து ஏடுகள் புராண இதிகாசக் கதைகளிலிருந்தே தமக்குரிய கதைகளைப் பெற்றுள்ளன. சில கற்பனையான கதைகளும் உள்ளன. சாம்பேந்திரன் கூத்து என்று கூறாமல் சாம்பேந்திரன் நாடகம் என்றே கூறப்பட்டுள்ளது. பொதுவாக கூத்துக் கொப்பிகளை எடுத்துப் பார்த்தால் நாடகம் என்றே கூறப்பட்டிருக்கும். பொதுவாக இக்கூத்துக் கலையின் பிறப்பிடம் மட்டக்களப்பாக இருக்கலாம் என்ற ஓர் ஐயப்பாடும் உண்டு. மட்டக்களப்பிலே அந்தளவுக்கு கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன. இன்றும் ஆடப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பிலே பயிலப்படும் கூத்துக்களில் வடமோடி, தென்மோடி என்ற இருவகை ஆட்ட நுணுக்கங்கள் உண்டு. இதனால் இதனை இருபாங்குக் கூத்துக்கலை என சிறப்புடன் அழைக்கலாம். இக்கூத்துக்கள் எல்லாமே ஏட்டு வடிவிலேயே உள்ளன. இந்த ஏடுகளில் இருப்பவைகளை சாதாரண எழுத்துக் கொப்பிகளில் எழுதி பாவிப்பர். இவை கூத்துக்கொப்பி என்றழைக்கப்படும்.

பொதுவாக ஏடுகள் அனைத்துமே பனை ஓலையில் எழுத்தாணியால் (பனையோலையில் எழுதும் கோல் எழுத்தாணி) எழுதப்பட்டவையாகும். பல்வேறுபட்ட ஏடுகள் இன்னும் கூட கிராமப் புறங்களில் முடங்கிக் கிடப்பதைக் காணமுடியும். மட்டக்களப்பிலே இதுவரை ஆடப்பட்டு வரும் கூத்துக்களும் வடமோடியில் சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட கூத்து வகைகளும் உள்ளன. பேராசிரியர் மௌனகுரு தமது மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் என்னும் பாரிய நூலிலே இவற்றை வகைப்படுத்திக் காட்டியுள்ளார். அத்தகைய ஏடுகளே இந்த நூதனசாலையில் காணப்படுவதுமாகும். இங்கு குறிப்பிடும் மூன்று ஏடுகளும் அதாவது சாம்பேந்திரன் நாடகம், அலங்காரரூபன் நாடகம், அனுருத்திரன் நாடகம் என்பன தென்மோடிக் கூத்து ஏடுகளாகும்.

**சாம்பேந்திரன் நாடகம் எனும் ஏட்டுப் பிரதி**

இது செட்டிப்பாளையம் இளைய தம்பி பரிசாரி கணபதிப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது என்று இவ்வேட்டின் முன்புறம் குறிப்பிடப்பட்டுள்ளது. த---ஹ உ. சூ. ம. இசினி மாதம் என ஆண்டு திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. ஏட்டின் முதல் பக்கம் சிவமயம் கணபதி முன்னில் சாம்பேந்திரன் நாடகம் என்று எழுதப்பட்டுள்ளது. அதன் பின்னர் சபை விருத்தம் கூறப்பட்டுள்ளது.

**சபை விருத்தம்**

*சீர் செவி துபைமாலை சிறந்தணி கிருஷ்ணனீன்ற*
*பேர் செறி சாம்பரூபன் பெண்கொடி விஸ்ரகாந்தி*
*வார் செறி குழலால் தன்னை வதுவை செய்*
*கதையைப்பாட*
*கார் செறி கார்முத்துக் கணபதி காப்புத் தானே*

பின்னர் கட்டிய காரன் வரவு
ராஜாதி ராஜன் ராஜமார்த்தண்டன் தம்பி
சாத்தரி கொலு வருகிறார்கள் என கதைதொடர்ந்து

இந்த சாம்பேந்திரன் நாடக ஏட்டில் சில இடங்களில் சாம்பரூபன் எனவும் பெயர் குறிப்பிடப்படுகிறது. இந்த சாம்பேந்திரன் (சாம்பரூபன்) கிருஷ்ணனின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பில் பயிலப்படும் கூத்துக்களில் வடமோடி, தென்மோடி என்ற இருவகை ஆட்ட நுணுக்கங்கள் உண்டு. இதனால் இதனை இருபாங்குக் கூத்துக்கலை என சிறப்புடன் அழைக்கலாம். இக்கூத்துக்கள் எல்லாமே ஏட்டு வடிவிலேயே உள்ளன. இந்த ஏடுகளில் இருப்பவைகளை சாதாரண எழுத்துக் கொப்பிகளில் எழுதி பாவிப்பர். இவை கூத்துக்கொப்பி என்றழைக்கப்படும்.

மகனாவான். துரியோதனன் மகள் விஸ்ரகாந்தியை காதலித்து அவளது அந்தப்புரத்தில் மறைவாக இருந்து பிடிக்கப்படுவதாக கதை தொடர்கிறது. தனது வீரத்தை வெகுவாக காட்டிய பின்னர் துரியோதனனாலும் வெல்ல முடியாமல் சாம்பேந்திரன் வீரம் காட்டப்பட்டு தலையாரியால் பிடிபட்டு பின்னர் திருமணப் படலத்தில் முடிவடைவதாக இக்கதை தொடர்கிறது. இது ஒரு தென்மோடிக் கூத்து ஏடாகும்.

### அலங்காரரூபன் நாடகம் ஏட்டுப்பிரதி

இது பெரியகல்லாற்றைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பெற்றது எனலாம். பெயர் குறிப்பிடா விட்டாலும் சாம்பேந்திரன் ஏடு போன்ற நடை, எழுத்து எல்லாமே ஒத்து உள்ளது. ஏட்டின் முதல் பக்கம் சபை விருத்தம், பின்னர் அழகாபுரி அரசன் மகன் இளவரசன் அலங்காரரூபன் பகை அரசனால் துரத்தப்பட்டு காட்டுக்குள் ஓடிப்போய் விறகு வெட்டி விற்று வாழ்கிறான். அவன் தலையில் விறகு கொண்டு வருவதால் விறகுத் தலையன் எனப்படுகிறான். குளிக்கப்போன இடத்தில் விறகுத் தலையனான அலங்காரரூபனைக் கண்டு அவன் அழகில் மயங்கிய அலங்காரரூபி அவனை தனது மாளிகைக்கு வரச் சொல்கிறாள். செட்டியாக வந்த அலங்காரரூபன் அவளுடைய கன்னிமாடம் வந்து சுகித்திருந்தான். இறுதியில் அரசனுடைய தலையாரிகளால் கள்வனாக பிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டு கொலைக்களம் கொண்டு வரப்பட்டு கழுவேற்றப்படுகிறான்.

அலங்காரரூபன் கழுவிலேற்றப்பட்டதும் முனிவர் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கலை விடுவிக்கிறார். பறையன் வரவுடன் அலங்காரரூபனுக்கும் ரூபிக்கும் திருமணம் என பறையறைவிக்கிறான். திருமணம் நடைபெறுகிறது. இறுதியில் வாழி காணப்படுகிறது.

*தொந்தி வயிற்றங்கரக்கு மங்களம் வாழி*
*சுந்தர விநாயகர்க்கு மங்களம் வாழி*
*கந்தர் முருகேசருக்கு மங்களம் வாழி*
*கதிர்காம வேலவர்க்கு மங்களம் வாழி வாழி வாழி*

இப்படி தொடர்கிறது - இறுதியில் அலங்கார ரூபன் நாடகம் முற்றிற்று. சிவமயம். திருச்சிற்றம்பலம். தேவி சகாயம் சிவகு கணபதி து. உரை வெற்றி வேலுர்ற க. சா. க. ஆ. ம வெள்ளிக்கிழமை முற்பகல் க. மணியளவில் புனர்பூச நட்சேந்திரமும் சித்தயோகமும் கூடிய தினத் தில் மட்டக்களப்பு கரவாகுப்பற்று பெரிய கல்லாறதனிலே குடிபரிந்திருக்கும் குருகுலத்தவர்களின் மானாதியாகந்தப்பனாயிச்சி பிள்ளையாகிய நான் இன்னும் ஒரு ஏட்டில் உள்ளபடி எழுதி நிறைவேற்றியது. ஆகையால் ஏதும் குளறுகளிருந்தால் கல்விகளுள்ள வித்துவானாகிய பெரியோர்கள் உணர்ந்து வாசிக்கக் கடவர். இந்த ஏட்டை பயன்தரும்படி வாசிக்கும் படி சி றியோனாகிய நான் தங்களைக் கேட்கிறேன். சிவமயம். தேவி சகாயம். என முடிவுரையில் உள்ளது. ஆகவே இவ் ஏடு பெரியகல்லாற்றைச் சேர்ந்தவர் எழுதியது என்பது தெளிவாகிறது. இதுவும் தென்மோடிக் கூத்து ஏடாகும்.

## அனுருத்திரன் நாடக ஏட்டுப் பிரதி

முதல் பக்கம் திருச்சிற்றம்பலம் கணபதி முன்னில் சேவலும் மயிலும் எனத் தொடங்குகிறது. சபை விருத்தம் ''சீர் பூத்த பதிகள் எல்லாம் செங்கோ லோச்சும் ஓர் பூத்த'' ...... எனத் தொடங்கப் பட்டுள்ளது. பின்னர் கட்டியகாரன் வரவு மந்திரி வரவு என கதை தொடர்கிறது. இதுவும் தென்மோடி கூத்தாகும். வாணாசுரன் மகள் வயந்த சுந்திரியின் கனவிலே அனுருத்திரன் கூடி காதல் வயப்படுகிறாள்.

தோழியரிடம் விடயத்தைக் கூறுகிறாள். தோழியர் தாம் அறிந்த மன்னர் படங்கள் கீறிக் காட்டி இறுதியில் அனுருத்திரன் படத்தைக் கீறிக் காட்டியதும் காதல் வயப்படுகிறாள். வாணசுரனின் மகள் வயந்த சுந்தரியின் மாளிகையில் களவாக இருக்கிறான். இறுதியில் அனுருத்திரன் பிடிபட்டு சிறை செய்யப்பட்டு தலையாரிமாரினால் கட்டி அடிக்கப்படுகிறான். போர் நடக்கிறது. வாணன் போரின் முடிவில் கிருஷ்ணனிடம் மன்னிப்புக் கோருகிறான். பறையன் அழைக்கப் படுகிறான். திருமணம் என பறை சாற்றுகிறான். திருமணம் நடக்கிறது.

இந்த ஏட்டுப் பிரதியினுரிமை யாரால் எழுதப்பட்டது என்ற விடயம் அறியமுடியவில்லை. இதுவும் ஒரு தென்மோடி கூத்து ஏடாகையால் பல ஏடுகளை எழுதிய செட்டிபாளையம் இளையதம்பி கணபதிப்பிள்ளையினால் எழுதப்பட்டதாகலாம். உண்மையில் அனுருத்திரநாடகம், அலங்காரரூபன் நாடகம், இராமநாடகம், வீர குமார நாடகம் என்பன காலத்தால் முற்பட்டன. இவை இணுவில் சின்னத்தம்பி என்பரால் எழுதப்பட்டது எனவும் மாணிப்பாய் நாடகசுவாமி நாதர் என்போரால் எழுதப்பட்டது எனவும் கருதப்படுகிறது.

(அடுத்த இதழிலும் தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடன உருவாக்கத்தில் நால்வகை அபிநயம்

துவாஷ்கர் கணேசராஜா எம். எப். ஏ.

ஆடற்கலை பண்டைக் காலத்தில் கூத்து, நாடகம் என்ற பெயரில் வழங்கி வந்தது. இது இக்காலத்திலுள்ள வசன நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம் ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைத்த தன்மையுடையது. சமுதாயக் கருத்துக் களைக் கூத்தரும் கூத்தியும் கூத்தில் நிகழ்த்தினர். பொருனனும் அவன் மனைவி விறலியும் போர் புரிதல், தேரோட்டுதல், வீரசாகசம் புரிதல் ஆகியவற்றை நாடகமாக நடித்துக்காட்டினர். பரதரின் நாட்டிய சாஸ்திரம் இதனை நாட்டியம் என்கிறது. எனவே கூத்து, நாடகம், நாட்டியம், என்னும் மூன்றும் ஒரே பொருளைக் குறிப்பதாகக் கையாளப் பெறுகின்றன. இதில் ஒவ்வொரு நடிகரும் ஒவ்வொரு பாத்திரத்தைச் சித்தரித்து, பேசி, பாடி, ஆடி, ஒரு கதையைத் தழுவி நடித்து வந்தனர்.

நாடகத்தின் தொடக்கத்தில் ஆராதனை நிகழ்வதைப் புர்வாங்கம் என்பர். இந்த புர்வாங்கத்தின் ஒரு விசேட நிகழ்ச்சியாகவே நிருத்தம் (அபிநயம்) இருந்தது. தேவர்களையும் அசுரர்களையும் மூதாதையரின் ஆன்மாக்களையும் நினைவு கொள்ளுமாறு செய்ய முதலில் நிருத்தம் நிகழ்த்தப்பட்டது. இது தவிர நாட்டியத்தில் சிருங்கார ரசம் ஓங்கி நிற்கும் காட்சிகளிலும் நிருத்தம் ஓர் இன்றியமையாத அம்சமாக இருந்தது. எனவே பண்டைக்கால நாடகத்தில் பக்தி அல்லது காதலின் வெளிப் பாட்டினை விளக்குவதற்காகவே நடனம் நிகழ்த் தப்பட்டது.

பரதநாட்டிய சாஸ்திரத்தின்படி பரதரால் உருவாக்கப்பட்ட முதல் நடன உருப்படிகளே அமிர்மந்தனம், திரிபுர தஹனம். இவை நால்வகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயங்களை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டவை. இவையே நடன உருவாக்கங்கள் நிகழ்த்தப்பட பிற்காலத்தில் முன்னோடியாக திகழ்ந்தன.

**நடன உருவாக்கம்**

Choreography என்ற சொல் நடன உருவாக்கம் என்ற பொருளுடையது இது நடன உருவாக்கத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். நடன உருவாக்கம் என்று கூறுகையில் அது இசையின் அடிப்படையில் தான் உருவாக்கப்படுகின்றது. இந்த நடன உருவாக்கம் என்பதை செவ்வியல் ஆடல், நாட்டுப்புற ஆடல், மேற்கத்திய ஆடல் என பிரித்து அதில் மேலும் சில உட்பிரிவுகள் கொண்டு வகுக்கலாம்.

செவ்வியல் ஆடலில் நிருத்தியத்தை அடிப்படையாக கொண்ட ஆடல், அபிநயத்தை மட்டும் கொண்ட ஆடல், நிருத்திய வகை ஆடல் மேலும் நிருத்திய நாடகம் என்பவைகளாகும். இன்றைய சூழலில் நவீன ஆடலில் உள்ளிட்ட அனைத்திற்கும் ஒரு வரைமுறை இருக்க வேண்டும். பரதநாட்டியத்தில் செவ்வியல் ஆடல் முறையில் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதை காண்போம்.

ஒரு நடனக்கலைஞன் கற்கும் ஆடலின் அடிப்படையில் அதன் அமைப்பைக் கையாண்டு புதிய உருப்படிகள் அமைப்பதற்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். இது அக்கலைஞரின் திறமையை வளர்த்துக் கொள்ளவும் வெளிக்கொணரவும் எதிர்கால கலைஞர்களுக்கு வழி காட்டவும் உதவும். எனவே நடன அமைப்பு பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்.



பரதநாட்டியத்தில் உருப்படிகள் அமைக்க வேண்டும் எனில் அதில் உள்ள அனைத்து அடவுகளும் அதன் வரைமுறைகளும் அதன் தன்மை (தாண்டவம், லாஸ்யம், கொண்ட அடவு) தெரிந்திருக்க வேண்டும். தாளத்தில் நல்ல ஞானமும் பாவரஸங்களை பற்றிய தெளிவும் இசையறிவும் தெரிந்திருத்தல் அவசியம். மேலும் சாஸ்திரம் கூறும் இலக்கணம் (நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம்) புராணக் கதைகள் இந்த நடன உருவாக்கத்திற்கு நம் முன்னோடிகள் வகுத்து கொடுத்த வரைமுறைகளும் நல்ல கற்பனை வளமும் இருத்தலோடு மட்டுமின்றி குறைந்தது ஒரு மார்க்கமாவது தெளிவாக கற்றிருத்தல் அவசியம். பெரியவர்களில் ஒவ்வொருவரின் பாணியில் உருவான உருப்படிகளை ஆராய்ந்தால் நடன வடிவமைப்பை உருவாக்க ஏதுவாக இருக்கும்.


பரதநாட்டியத்தில் இன்று வழக்கில் உள்ள அடவுகள் நடனம் கற்கவும் அப்யாசிக்கவும் உகந்த கிரமத்தினை உருவாக்கியவர்கள் தஞ்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வர்களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு என்பது உலகறிந்ததே. இந்த ஆடல் தேவதாசிகளாலும் ராஜதாசிகளாலும் வளர்க்கப்பட்டதால் இவ்விதமான பாணியோடும் வளர்ந்து வந்தது எனலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் பல புதுயுக்தியை இவ்வாடல் தன்னகத்தே தாங்கி வளர்ந்து வந்துள்ளது.

தேவதாசிகளின் ஆடல் மேன்மையான சிருங்காரமான மதுர பக்தி பிரதிபலிக்கும் உருப்படியாக இருந்தது. ராஜதாசிகளிடம் சிருங்காரரஸம் ததும்பும் உருப்படிகளும் நரஸ்துதி கொண்ட பாடல்களும் காணப்படும். அடவுகள் அமைக்கும் முறைகள் ஒத்தே காணப்படுகின்றன. ஆனால் காலப்போக்கில் அரசவையில் ஆடும் ஆடலில் பல புதுமைகள் புகுந்தன. பரோடா நாட்டின் ஆடல் பாணி தென்னக அரசவை ஆடல் பாணியில் சேர்க்கப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.









**மறுமலர்ச்சி காலம் (ருக்மணி தேவி)**

ஆடல் மறுமலர்ச்சி காலத்தின் போது இவ்வாடல் பல மாற்றங்கள் கண்டு புதுப்பொலிவுடன் பழைமை வழுவாது பிரதிபலித்தது. ருக்மணி தேவி அடவு, ஆடல் உருப்படிகளின் அமைப்பு முறையில் ஒரு நேர்த்தியான நிலையான வடிவம், ஆண்ட, ஆபரணங்கள், ஒப்பனை என பலவகையில் அழகுபடுத்தி இன்றுள்ள நடன முறையை உருவாக்கினார். இருப்பினும் நடன அமைப்பில் அனைத்து நடனக் கலைஞர்களும் நட்டுவனாரை கடைப்பிடித்து ஆடும் ஒழுங்கு முறையும் கடைப்பிடிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் வாழ்ந்த மு. தண்டாயுதபாணிபிள்ளை, பத்மா சுப்பிரமணியம் என ஒவ்வொருவரின் நடன உருவாக்கத்தை நன்கு ஆராய்ந்தால் இது விளங்கும்.

நடன உருவாக்கம் எனும்போது அது நான்கு வித அபிநயங்களான ஆங்கிகம், வாச்சிகம், ஆஹார்யம், சாத்வீகம் ஆகியவற்றை அமைக்கும் கடமை நடன இயக்குனரையே சாரும். எவ்வித அடவு, கை, பாவனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை, பாடல், அதற்கேற்ற காட்சியமைப்பு, ஆடையலங்காரம், உணர்ச்சி ததும்பும் பாவம், ஆகியவற்றை எவ்வாறு ஒத்து அமைப்பது என்பதை நடன இயக்குனரே தீர்மானிக்க வேண்டும்.

**நடன உருவாக்கத்தின் ஆங்கிகா அபிநயம்**

அங்கத்தின் அசைவுகளால் ஆடியும் அபிநயத்தும் செய்யப்படுவதனால் அங்கிக அபிநயம் என்பர். நடனம் செய்யப்படும் அடவுகள், அதில் உள்ள மண்டலங்கள், சாரிகள், முத்திரைகள், அபிநயம் செய்ய உதவும் முத்திரை ஆகியவற்றை ஆழ்ந்து உணர்தல் முக்கியமானதாகும். நிருத்தத்திற்கு முத்திரைகள் அபிநய தர்ப்பணத்தில் 13 என்றும் நாட்டிய சாஸ்திரத்தில் 50 என்றும் உள்ளது. இதைப் பயன்படுத்தி அடவுகள் கோர்வைகள் செய்யலாம். அதேபோல் ஒவ்வொரு செயல், இடம், வார்த்தை, பொருள் மூலம் விளக்கிடும் முத்திரைகளையும் அறிந்திருக்க வேண்டும்.

நடன மொழி என்பது அபிநயத்தை விளக்கும் சைகை மொழியான நடிப்பு ஆகும். அது பார்வையாளருக்கு புரியும்படி செய்கின்றது. இந்த முத்திரைகள் அங்க அசைவுகள், மண்டலங்கள் என அவற்றின் பேதங்கள் அறிதல் வேண்டும்.

ஒவ்வொரு செவ்வியல் ஆடலிலும் இந்த முத்திரைகளின் மண்டலங்கள் வேறுபடும். ஒடிசியில் த்ரிபங்க நிலையில் இருப்பர்; ஆனால் பரதத்தில் அரை மண்டியில் நேராக இருக்க ஆயத்த மண்டலம் பயன்படுத்துவர். எனவே இவற்றின் தெளிவு உணர வேண்டும். எந்த வார்த்தைக்கு என்ன முத்திரை கொண்டு அபிநயம் பிடிக்க வேண்டும் என்பதனையும் கடவுள்கள், ஜாதி, நவக்கிரஹம் என சகலதையும் பற்றிய முத்திரைகளை அறிதல் அவசியம். உதாரணத்திற்கு அம்மா எனின் வலது கையில் வயிற்றுக்கு நேராக அலபத்மம் செய்து இடது கையில் குவிபதாகத்தை நாட்டியாரம்பத்திற்கு கொண்டு சென்றால் அம்மா என்று குறிப்பதாகும். அதேபோல் பிரம்மாவை காண்பிக்க வலதில் ஹம்ஸ்யம் இடத்தில் சதுரம் பிடித்தல் பிரம்மா என உணர்த்த முடியும். இவ்வாறு பாடலுக்கு எவ்வகையில் சைகை காட்ட வேண்டுமென தெளிவுவர வேண்டும்.



அடவுகள் என்று எடுத்துக் கொண்டால் அது தாளத்தையும் ஜதியையும் பொருத்தக் கூடிய அழகான வகையில் இணைத்தல் வேண்டும். இதில் பாரம்பரிய அடவுகளையும் பல தாளக்கணக்குகளுடன் இணைத்து ஆடுவர். மேலும் பல புதிய அடவுகளையும் தம்திறமையைப் பயன்படுத்தி வெளிப் படுத்தினாலும் அது இலக்கணம் வழுவாது இருத்தல் வேண்டும். ஒவ்வொரு அடவுகளையும் சேர்த்து கோர்வை வலது, இடது எனும் வகையில் அரங்கை முழுமையாக அலங்கரிக்கும்படி அமைத்தல் அழகாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடன உருவாக்கத்தில் இசை, தாளத்தின் பங்கு**

இசையின்றி ஆடலில்லை என்கின்ற போது ஆடலில் உள்ள இசை வடிவங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? நிருத்தத்திற்கு முக்கியத்துவம் உள்ள உருப்படிகள் கொண்ட பாடல் விறுவிறுப்புடனும் பல தாளப்ரஸ்தாரங்களுடனும் சாதாரணமான (சதுஸ்ர) நடையில் இருக்கும் போது ஆடல் அமைப்பும் அதற்கு தகுந்த ராகத்தினை கொடுக்க வேண்டும். சிருங்காரமெனில் கமாஸ், உசேனி ராகங்கள்; கோபம் எனில் நாட்டை; ஹாஸ்யம் எனில் கேதாரம்; சோகம் எனில் சுபபந்துவராளி என அமைகின்ற போது நடனம் புரிகிறபோது எவ்வித பாவத்தினையும் பாடல் தோற்று விக்கும்.


மேலும் நடன நிகழ்ச்சியில் முதலில் எவ்வித ராகங்கள் பயன்படுத்த வேண்டும் என உள்ளது. அதாவது நாட்டை, ஹம்ஸத்வனி போன்றவையெனில் கம்பீரமாகவும் பக்திமயமாகவும் உத்வேகம் தரக்கூடிய தாகவும் இருக்கும். பாடுபவரும் பாடலில் பொருள் உணர்ந்து ராகபாவத்தோடு பாட வேண்டும். இசையானது ஆடலானாலும் அபிநயமானாலும் ஆடுவோரை இசைத்து ஆட்டுவிக்க வேண்டும். ஆடலில் தாளம் மிகவும் முக்கியம். ஆடல் மட்டுமின்றி அனைத்திலும் தாளமும் மிகமுக்கியமானதாக அமைந்து விடுகின்றது. இதனை "பாரதி தாளம் தாளம் தாளமில்லையேல் கூலம் கூலம்சுசு என்கிறார். தாளஞானம் வரவே நடனம் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அடவுகள் கற்றுத்தரப் பட்டு காலப் பிரமாணத்தோடு ஆடும் திறமை வளர்க்கப்படுகின்றது. முதல் காலம், 2ம் காலம், 3ம் காலம் என அழைக்கப்பட்டு நடனத்தில் எவ்வாறு பயன்படுகின்றது என்பது கவனிக்கப்படவேண்டும். கோர்வை அமைக்கின்றபோது அதன் வடிவம் எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதும் ஜதிகள் உருவாக்க பயன்படும் மிருதங்கம், கஞ்சிரா, தபேலா போன்றவைகளின் சொற் கட்டுகளை அறிந்து அவற்றை கோர்த்து ஜதிகள் அமைத்து அதை ஓர் அழகான குறைப்புடன் கொண்டு வந்து ஏதேனும் ஒரு பகுதியில் முடிக்க வேண்டும் என்பது வழக்கு. மேலும் தாள வின்யாசம் செய்தல், கதிபேதம் செய்தல் ஆகியவை நன்றாக அறிதல் அவசியம்.

அபிநய உருப்படிகளில் சந்தத்தை சார்ந்த தாள நடை அமைத்தல் அழகு. பல தாள கணக்குகள் செய்தாலும் அது அபிநயத் திற்கு குந்தகம் செய்யும் வகையில் இருக்க கூடாது. வாத்தியங்கள் ஆடலுக்கு வாசிக்கும் போது ஆடலை உத்வேகத்துடன் செய்ய துணைபுரியும் வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இசைக்க வேண்டும். மேலும் நிருத்த உருப்படியில் வன்மையான நாதமுடைய இசைக்கருவியையும் வாசித்து துணை செய்ய வேண்டும். வன்மை நாதமுள்ளது எனில் தோற்கருவிகள், நட்டுவாங்கம் ஆகியவை அழுத்தி வாசிக்கவும் மென்மை நாதமெனில் வீணை, புல்லாங்குழல் ஆகியவற்றை வாசிக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு உருப்படியின் வடிவமும் அதன் சிறப்பும் தெளிவாக தெரிந்து உருவாக்க வேண்டும்.

**ஆஹார்ய அபிநயத்தின் பங்கு**

பரத நாட்டியத்தில் பொதுவான ஆஹார்ய அபிநயமேயுள்ளது. ஆனால் நிருத்திய நாடகங்களில் ஆஹார்ய அபிநயத்திற்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. இதில் ஒவ்வொரு பாத்திரத்திற்கான ஆடை, ஆபரணங்கள் மேலும் கற்பனைகள் இருத்தல் அழகு. அதே போல் ஒவ்வொரு சூழலுக்கும் கற்பனை ஆடை அலங்காரம் மாறுபட வேண்டும். உதாரணமாக சீதை அந்தப்புரத்தில் தோழிகளுடன் விளையாடுவதாக காட்சி வருகின்றதெனில் அழகான ஆடை, ஆபரணங்கள் அணிந்து முக மலர்ச்சியுடன் இருக்க வேண்டும். அதேநேரம் அசோக வனத்தில் சீதையை காண்பிக்கும் போது சோகத்தை வெளிப்படுத்தும் முகம் ஆபரணங்களின்றி காவி தரித்தது போல் காட்ட வேண்டும். மேலும் காட்சிக்கு தகுந்த மேடை அலங்காரம், திரை ஒளி அமைப்பு இருக்க வேண்டும். கதாபாத்திரம் வைத்திருக்கும் பொருட்களை மறவாது வைத்திருக்க வேண்டும். ராமரெனில் வில், அம்பு; கிருஷ்ணனெனில் புல்லாங்குழல் என அப்பொருட்களை கொண்டு அடையாளம் காண முடியும். இவ்வாறு ஆஹார்ய அபிநயத்தில் முக்கியத்துவம் தருதல் அவசியம்.

இன்று மேடை, அலங்காரம், ஒப்பனை மிகவும் மேன்மை நிலையில் புதுமைகளுடன் சிறப்பாக திகழ்வதை காணமுடிகிறது. பரதர் கூறியது போல் மேடையில் எதைக் காட்ட வேண்டும் எதைக் காட்டக்கூடாது எவ்வாறு ஒரு சூழ்நிலைக் காட்சிகளை நேர்த்தியாக உருவாக்கி விளக்க முடியுமோ அது உருவாக்குபவரின் திறனை வெளிப்படுத்தி உருவாக்க வேண்டும். நாட்டுப்புற ஆடல், மேற்கத்திய ஆடல் ஆகியவற்றை செய்கின்றபோது அதற்கேற்றவாறான கலாசார உடை, ஒப்பனை, அலங்காரம் செய்து ஆடுவது அப்பாடலின் பொருள், அவற்றின் கலாசார அழகும் மாறாமல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாத்வீகத்தின் பங்கு**

பரதத்தில் பாவம் முக்கியமானதாக கருதப்படுகின்றது. நாம் கூற விளைகின்ற செய்தியை நேர்த்தியாக கூறிட உதவும் பாவத்தில் பல பிரிவுகள் உள்ளன. அவற்றைப்பற்றி நன்றாக அறிந்திருக்க வேண்டும். மேலும் நாயகன், நாயகி பாவம் விளக்கமாக தெரிய வேண்டும். ஏனெனில் நாம் ஆடும் ஆடல்களில் பாவம் பெரும்பாலும் இதன் துணையைக் கொண்டே அமையும். இதனை தெளிவுற்றாலே சிறப்பாக பாவம் செய்யமுடியும். அப்பாவம் உள்ளுணர்வை கிளர்ந்து சாத்வீக பாவமாக கிளர்ந்தெழும். சாத்வீக பாவம் செய்வதற்கு உலகத்தை உற்றுநோக்க வேண்டும். விஸ்வாமித்திரர் தசரதனிடம் ராமனை என்னுடன் அனுப்பிவை என்று கேட்டார். அப்பொழுது அவ்வார்த்தைகள் தசரதனை எந்தளவிற்கு பாதித்தது என்பதை செய்து காட்டுமுன் அதனை கம்பன் விளக்குவதை தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது இதயத்தில் ஒரு ஈட்டி குத்தி, ஒரு பள்ளம் செய்து, அந்த இடைவெளியில் பழுத்து காய்ச்சிய இரும்புக் கம்பியை விட்டது போல் இருந்ததாம் அவ்வார்த்தை. மேலும் விஸ்வாமித்திரர் கேட்டது எமன் தன் உயிரை கேட்டது போன்றது என்றார்.

இதனை உணர்ந்து அந்த பாவத்தினை உருவாக்க வேண்டும். உலக மக்கள் ஒவ்வொருவரின் செயல்களை ஆராய்ந்து காட்சிக்கு தேவையான இடத்தில் அப்பாவத்தை சேர்த்து அபிநயிக்க வேண்டும். உணர்ச்சிபூர்வ மாக செய்யப்படுகின்றபோதே சாத்வீக பாவம் என்றும் அதன் வழியே தோன்றும். ரசத்தை சாத்வீக ரசமாகவும் கருதலாம். பார்வையாளரிடம் ரசம் பொங்கும் அளவிற்கு அபிநயங்களையும் பாவம், சாத்வீக பாவம் இருக்குமளவுக்கு சிறப்பாக வேண்டும். சஞ்சரி, நேர்கை என அனைத்திலும் தம் கற்பனையை சிறப்பாக வெளிப் படுத்த வேண்டும். உணர்ந்து உருவாக்கும் திறன் அவசியம். பரதநாட்டிய உருப் படிகள் உருவாக்கும் முறைகளை பின்பற்ற வேண்டும்.



ஆகவே நடன உருவாக்கத்தினை செய்யும் போது நால்வகை அபிநயங்களின் அடிப்படை கருத்துக்களை எண்ணத்தில் கொண்டு புதிய நடன அமைப்புக்களை உருவாக்க வேண்டும். நால்வகை அபிநயங்களின் பொதுவான கொள்கைகளை அறியாதவர்களால் ஒரு முழுமையான நடன அளிக்கையை உருவாக்க முடியாது. சிலர் ஒன்று அல்லது இரண்டு அபிநயங்களை மட்டும் கருத்தில் கொண்டு செய்கின்ற நடன படைப்புக்கள் முழுமையான நிறைவினை பார்வை யாளருக்கு வழங்காமல் முகம் சுழிக்கும் படி செய்து விடுகின்றன. எனவே நால்வகை அபிநயங்களை ஆராய்ந்து, அறிந்து தங்கள் நடன உருவாக்கத்தின் அபிநயங்களின் பங்கு முழுமையடைந்துள்ளதை உறுதி செய்ய வேண்டும். ஒரு நடன கலைஞனின் நிறைவு பார்வையாளர்களின் பாராட்டு மற்றும் கரகோச த்தில் அடங்கியுள்ளது. எனவே இதனை கருத்தில் கொண்டு சிறந்த நடன உருவாக்கங்களை உருவாக்கி நடன உலகத்திற்கு எமது பங்கினை முழுமையாக வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலிங்கோ லை.:.ப்

குடும்ப சவாரி 7

# அழகிய சிங்கப்பூரின் அழகில் மெய்மறந்து போன .:.பெமலி சவாரி அதிர்ஷ்டசாலிகள்
















செலிங்கோ லை.:.ப் .:.பெமலி சவாரி 7 மூலம், இம்முறை 50 குடும்பங்கள், முழு உலகையும் தன்வசம் கவர்ந்திழுக்கும் அழகிய சிங்கப்பூருக்கு சென்று வந்தனர். அனைத்து குடும்பங்களும், சிங்கப்பூரிலுள்ள சென்தோசா தீவு, இரவு நேர சவாரி, நகர சுற்றுப் பயணம் மற்றும் பலவற்றைக் கண்டுகளித்ததுடன், மறக்க முடியாத ஷொப்பிங் அனுபவங்களையும் பெற்றுக்கொண்டனர் என்பதற்கு இப்புகைப்படங்கள் சான்று பகருகின்றன.

நீங்களும் உங்கள் குடும்பத்தினருடன் அழகிய சிங்கப்பூருக்குச் சென்று மறக்க முடியாத அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, செலிங்கோ லை.:.ப் .:.பெமிலி சவாரி 8 உடன் இணைந்துகொள்ள இன்றிலிருந்தே தயாராகுங்கள்!

வாழ்க்கை,
பாசம்,
பாதுகாப்பு.

செலிங்கோ லை.:.ப்



CEYLINCO LIFE

செலிங்கோ லை.:.ப்
கம்பனி பதிவு இல. PQ24 தொ.இல.: (011) 2 461 ... இணையம்: www.ceylincolife.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# யாழ்ப்பாணம்,
# ஆலங்குளாயில்
# ஆனைமுகன்
# இளவல் ஆறுமுகன்

இ. அச்சுதபாகன் பி.ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோழ இளவரசி மாருதப்பூரவீகவல்லி கண்டகி தீர்த்தத்தின் மருங்கே கோவிற் கடவையில் குமர வேளுக்கு கோயில் எடுத்தாள். அதுவே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் எனப் பேரும் புகழும் நிறை கந்தக் கோட்டமானது. 'மூலக் கனலில் மூட்டும் அனற் பொறி அறுசுடர்சு எனப் பழந்தமிழ் இலக்கணம் ஐந்திறம் எனும் பிரபஞ்ச விஞ்ஞான நூல் (Cosmological Science Text) செப்பிடும் அகவிண்ணொளி தரும் முருகொளி அறுசுடர் பேரொளிக்கு கோயில் எடுத்த பின்னர் அவன் ஆக்ஞைப்படி மூலக்கனல் மூண்டெழும் மூலாதாரத்தின் அதிதேவதையான கணபதிக்கு ஏழு திருத்தலங்களை இளவரசி எடுத்தார் எனச் சொல்லப்படுகிறது.

அவள் இவ்ஓங்கார ஒளி வடிவினனுக்கு எடுத்த கோயில்கள் முறையே முருகன் கோயிலுக்கு அணித்தாய் வருத்தலப் பிள்ளையார் கோயில், கொல்லன் கலட்டி பிள்ளையார் கோயில் அதைத் தொடர்ந்து அளவெட்டியில் அழகொல்லை, கும்பிழாவளை பெருமாக் கடவை பிள்ளையார் கோயில்கள் அமைகின்றன. ஆறாவதும் ஏழாவதுமாக சண்டிலிப்பாய் வடக்கில் ஆலங்குளாய், தெற்கில் கல்வளைப் பிள்ளையார் கோயில்கள் அமைகின்றன.

சண்டிலிப்பாய் வடக்குப் பகுதியில் ஆக்கூட்டங்களும் இலை, குளை, தழை நிறை சோலையாகவும் வயல்களும் வளம் சேர்க்கும் வழுதியாறு (வழுக்கியாறு) ஊடறுத் துப் பாயும் இடமாகவும் விளங்கியதால் ஆலங்குளாய் என அழைக்கப்பட்ட இடத் தில் விநாயகருக்கு கோட்டம் அமைக்கப் பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியில் 500 க்கும் மேற்பட்ட சிறிதும் பெரிதுமான சைவால யங்களை போர்த்துக்கேயர் இடித்தழித்ததாகத் தெரிகிறது. இந்த விநாயகர் கோயில் எப்போது முருகன் கோவிலானது என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தலவிருட்சமான அரசமரம்

தெரியவில்லை. இப்பொழுது கால எல்லை செய்ய முடியாக் காலத்திலிருந்து மூலஸ்தானத்தில் முருகப் பெருமான் இருந்து அருள் பாலிக்கின்றார்.

ஆனால் விநாயக பக்தரான ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் பெரியார் பொ. கனகரத்தினம் அவர்கள் குறித்த ஏழு விநாயகர் கோயில்கள் மீதும் பாடப்பட்ட ஆயிரம் பாடல்களைக் கொண்ட விநாயகர் பாமாலை என்ற நூல் 2013 இல் வெளியிடப்பட்டுள்ளது. முருகனின் அருட்செயல் களையும் தம்பிக்குத் தமையன் தலைமை கொடுத்ததையும் உருக்கமாக அதில் பாடுகிறார் கவிஞர்.

*ஆலங்குளாய்தனில் அன்புடைத் தம்பியை அருள் புரியென்று*
*மூலத்தானத்திலிருத்திய முதுமுதலே! முக்கண்ண!*
*பாலன் சிறுவனென்ற சூரனுக்கருள் புரிந்த*
*வேலன் முன்னொருநா ளெந்தைக்கும் குருவானான் என்றெண்ணி உகந்தீரே (510)*

என்பது நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.


மூலத்தானத்தில் முருகப் பெருமான் அமர பிரகாரத்தில் வலப்புறமாக நிருதி மூலையில் விநாயகப் பெருமான் அமர்ந்துள்ளார். சூரிய


ஆலயத்தின் வெளிவீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்த தீர்த்தக் கேணி



பகவான், சனீஸ்வரன், நாகதம்பிரான், வயிரவர் ஆகிய மூர்த்திகள் உட்பிரகாரத்தில் பரிவாரக் கோயில்களில் அமர்ந்துள்ளார்கள். உற்சவ மூர்த்திகளாக முத்துக்குமரன், சண்முகப் பெருமான், வள்ளிநாச்சியார், தெய்வானை அம்மையார், விநாயகப்பெருமான், சண்டேசுவரப் பெருமான் ஆகியோர் மகா மண்டபத்தில் எழுந்தருளியுள்ளனர். கோயில் விஸ்தாரமாகக் கட்டப்பட்டு அண்மையில் கும்பாபிஷேகம் என்ற பெருஞ்சாந்தி விழாவும் நடைபெற்றது.

இங்கு தமிழ் வருடப்பிறப்பு, உற்சவம், சதுர்த்தி உற்சவங்கள், ஐப்பசி வெள்ளி உற்சவங்கள் மற்றும் புரட்டாதி சனிக்கிழமைகளில் சனீஸ்வரனுக்கு அபிஷேகமும் நடைபெறுகிறது. கந்தப் பெருமானுக்கு தலை சிறந்த விரதமான கந்த சஷ்டி சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. திருக்கார்த்திகை என்னும் திருமுருகனுக்கு உகந்த நாளும் கொண்டாடப்படுகிறது.

*'அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய், பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாக கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரெண்டு கொண்டே ஒரு திரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய'* என்று கந்த புராணம் கூறும் அருள் அவதாரம் வைகாசி விசாகத்தில் நடந்ததென்பர். அவ் வைகாசி விசாகத்தில் ஆறுமுகனின் ஜனன தின உற்சவம் ஆலயங்களில் நடைபெறுவது வழக்கம். இங்கு அந்நாளை தீர்த்தோற்சவமாக கொண்டு பெருந் திருவிழாவான பஞ்சகிருத்திய மகோற்சவம் நடைபெறுகிறது.

மூலமூர்த்திக்கு 2013 இல் 29 அடி உயரமான எண் கோணவடிவத் தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெற்றது. அதனை உடுவிலைச் சேர்ந்த ஸ்தபதி பரமசாமி ஆச்சாரியார் தலைமையில் உள்ள சிற்பிகள் அமைத்தனர். ஏனைய இரு தேர்களிலும் விநாயகரும் சண்டேசுவரரும் அமர புதிய சித்திரத்தேரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் விசாலமான உள்வீதி





தீர்த்தக் கேணியில் உள்ள அழகிய சிற்பங்கள்

முருகப் பெருமானும் அமர்ந்து வலம் வருவார். திருத்தேர் தரிப்பிடம் அமைக்கப்பட்ட இடத்திற்கு அருகில் தலவிருட்சமான அரசு கிளை பரப்பி நிற்கிறது.

பெருமானின் ஊஞ்சல் பாடல்களை அளவெட்டி அருட் கவி புலவர் விநாசித்தம்பி அவர்கள் அழகு தமிழ்ப்பாடல்களாக இயற்றியுள்ளார்.

*பிரணவத்தின் பெருமையை அறியாத பிரமனின் செருக்கை*
*சரணவத்தோனடக்க அரனவன் வந்து தளையவிழ்க்க அருள் வேண்ட*
*உரனுடைய வேலனிணங் காது பின் தாதை தன் சொல் தட்டாது வருளியதுதி*
*கரமுடையான் துணைவ! அண்ணனுடன் அருள் வீரிரங்கி (612)*

ஓங்கார ஒளிவடிவாய் அமைந்த அண்ணனையும் இளவலையும் ஓங்கார ஒலிவடிவாய் அமைந்த தமிழாலே தொடை சாத்தி என்றும் நாம் ஆனைமுகனே ஆறுமுகனே எனப் போற்றி வழிபட்டு அருள் பெறுவோம்.

**குறிப்பு:** *மார்ச் மாத கலைக்கேசரியில் வழிபாட்டு மரபு பகுதியில் பிரசுரிக்கப்பட்ட களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் தேவஸ்தானம் என்ற கட்டுரையில் ஆலயத்தின் நிர்வாக, உபய உரிமை கொண்ட ஆறு குடும்ப வாரிசுகளாக பெத்தாக்கிழவி குடும்பம், பேனாச்சி குடும்பம், சுரைக்காய் மூர்த்தி குடும்பம், போற்றி நாச்சி குடும்பம், செட்டி குடும்பம், வள்ளி நாயகி குடும்பம் ஆகியன விளங்குகின்றன என இடம்பெற்றிருத்தல் வேண்டும்.*

ஆலயத்தின் விமானமும் உள்வீதியும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










சென்னை லலித கலா மந்திர் வழங்கிய
'அபிராமி பட்டர்' என்னும் நாட்டிய நாடக நிகழ்ச்சி
18-05-14 அன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி
மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
அதில் சில காட்சிகளை இங்கு காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்று வெளிச்சத்திற்கு வராத பனங்காமம் சிவன் ஆலயம்

**பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்**
தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஐரோப்பியர்ஆட்சிக்காலத்தில்இருந்துநிர்வாகவசதிக்காகஉருவாக்கப்பட்டுள்ள வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசம் தற்காலத்தில் வன்னி எனவும் அடங்காப்பற்று எனவும் அழைக்கப்படுகிறது. ஆனால் கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வன்னி உள்ளிட்ட வடஇலங்கை பாளி மொழியில் நாகதீபம், உத்தரதேசம் எனவும் தமிழில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. கி.பி.13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பொலநறுவை அரசு கலிங்கமாகனால் வெற்றி கொள்ளப்பட்டு சிங்கள மக்களும் இராசதானியும் தெற்கு நோக்கி தம்பதேனியாவிற்கு நகர்ந்த போது வடக்கில் கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தமிழருக்குச் சார்பான அரசு தோன்றியது. அப்போது இப்பிராந்தியத்தின் குறிப்பிட்ட சில வட்டாரங்கள் வன்னி, வனிப்பற்று எனவும் அங்கு வாழ்ந்த மக்கள் வன்னியர் எனவும் அங்கு ஆட்சி புரிந்தவர்கள் வன்னிச் சிற்றரசர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

இப்பிராந்தியத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை 1970 களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் இருந்து தெரிகிறது. இங்கு இற்றைக்கு 1,25,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்ததற்கான நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு இரணைமடுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கருவிகளும் மன்னார், மாங்குளம், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த பிற்பட்ட கால நுண்கற்காலச் கருவிகளும் சான்றா கும். வன்னியில் இரணைமடு, சாஸ்திரி கூழாங்குளம், செட்டிக்குளம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதோட்டம், பூநகரி முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்ட கல்வட்டங்கள், பரலுருபதுக்கை, தாழி முதலான ஈமச்சின்னங்களும் பெருங்கற்கால குடியிருப்பு பகுதியில் கிடைத்த பலதரப்பட்ட பண்பாட்டுச் சின்னங்களும் இலங்கையின் ஏனைய பிராந்தியங்கள் பலவற்றைப் போல் இங்கும் இற்றைக்கு 2,500 ஆண்டுகளுக்கு முன்பிருந்து நாகரிக உருவாக்கம் நிகழ்ந்ததை உறுதிசெய்கின்றன. இப்பண்பாடு தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து புலம்பெயர்ந்து வந்து குடியேறிய மக்களால் அறிமுகப்படுத்தப் பட்டதென்பது தொல்லியலாளர்களின் பொதுவான கருத்தாகும். இப்பண்பாட்டு மக்களின் வருகையுடன்தான் இப்பிராந்தியத்தில் நிலையான குடியிருப்புக்கள், இரும்பின் அறிமுகம், நீர்ப்பாசன விவசாயம், மட்பாண்ட உபயோகம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன அறிமுகமாகியதென்பது அறிஞர்களின் கருத்தாகும். இப் பண்பாட்டு மக்கள் வன்னியில் குளங்களை மையப் படுத்திய கிராமக் குடியிருப்புகளை உருவாக்கியதன் காரணமாகவே அங்குள்ள பல இடப்பெயர்கள் குளத்தைப் பின்னொட்டுச் சொல்லாகக் கொண்டு தோற்றம் பெறக் காரணமாகும். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் வன்னிப் பிராந்தியம் பற்றி ஆய்வு செய்த ஐரோப்பிய நாட்டவரான எச்.பாக்கர் என்பவர் வவுனியா மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் தமிழ் மொழிக்கேயுரிய தனித்துவமான எழுத்துக் களையும் தமிழ்ப் பெயர்களையும் ஆதாரம் காட்டி இற்றைக்கு 2,200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந்து வருகின்றனர் எனக் குறிப்பிட்டார். மேலும் அவர் மஹாவம்சத்தில் வரும் அநுராதபுரத்திற்கு வடக்கே 30 மைல் தொலைவில் உள்ள பெலிவாவியை தற்போதைய வவுனிக்குளம் என அடையாளப்படுத்தி இது எல்லாள மன்னனால் கட்டப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் முல்லைத்தீவில் பெருந் தொகையாகக் கிடைத்த லட்சுமி உருவம் பொறித்த நாணயங்கள் எல்லாள மன்னனால் வெளியிடப் பட்டவை எனவும் குறிப்பிட்டார். மேலும் வன்னிப் பிராந்தியத்தில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்கள் இற்றைக்கு 2,200 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியம் நாக மற்றும் வேள் முதலான குறுநிலத் தலைவர்களாலும் சிற்றரசர்களாலும் ஆட்சி செய்யப்பட்டதை உறுதி செய்கின்றன.

இவ்வரலாற்றுத் தொன்மையை நோக்கும் போது வன்னியில் உள்ள பல இந்து ஆலயங்களுக்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அண்மையில் வன்னியில் சாஸ்திரி கூழாங்குளத்திலும் 40 ஆண்டு களுக்கு முன்னர் உருத்திபுரத்திலும் மேற்கொள் ளப்பட்ட ஆய்வுகளின்போது சுடுமண்ணாலான இலிங்க உருவங்கள், ஆண்பெண் சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொடகக் கும்பர என்ற அறிஞர் சிவன், சக்தி வழிபாட்டின் தொன்மைச் சான்றுகள் எனக் குறிப்பிடுகின்றார். 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வன்னி பற்றி ஆய்வு நடாத்திய பிரித்தானிய அதிகாரிகள் தமது தொல்லியல் ஆய்வின் போது தாம் கண்டறிந்த தொன்மையான ஆலய அழிபாடுகள், சிற்பங்கள், நிலைகள், கல்வெட்டுக்கள் அரச கட்டிட


ஆலயத்தின் கருப்பக்கிருக வாசல் பகுதியில் வைத்துக் கட்டப்பட்டுள்ள புராதன ஆலயத்திற்குரிய புடைப்புச் சிற்பங்கள்


ஆலயச் சுற்றாடலில் காணப்படும் புடைப்புச்சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலயத்தின் முன்மண்டபத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வழிபாட்டு இடத்தில் வைக்கப்பட்டுள்ள இரு சிவலிங்கங்களும் புராதன ஆலயத்திற்குரிய விநாயகர் சிற்பமும்

அழிபாடுகள் பற்றி குறிப்பிட்டுள்ளனர். நெவில் என்ற பிரித்தானியர் வன்னியில் உள்ள பனங்காமம் பற்றிக் குறிப்பிடுகையில் தான் வாழ்ந்த காலத்தில் வன்னி இளவரசர்களது வாசல்தலங்களும் வீடுகளும் கோவில்களும் இருந்ததாகவும் அவை சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். ஒல்லாந்து கிழக்கிந்திய கொம் பனியின் அலுவலர் ஜே. ஹவ்னர் என்பவர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கால் நடையாகச் சென்ற போது மறிச்சுக்கட்டி என்ற இடத்தில் இருந்து ஏழரை மைல் தொலைவில் கல்லாறு என்ற இடத்தில் சைவ ஆலயம் ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

இவ்வாலயத்தை சி. எஸ். நவரட்ணம் தக்சண கைலாசபுராணத்தில் குறிப்பிடப்படும் குதிரை மலையில் இருந்த ஐயனார் கோவில் எனக் குறிப்பிடுகிறார். ஹக் நெவில் என்பவர் தனது Taprobanizn' என்ற நூலில் இவ்வாலயத்தை அண்மைக்காலம் வரை இந்தியாவில் இருந்து வரும் யாத்திரிகர்கள் தரிசித்தாகக் குறிப்பிடுகிறார். ஜே. பி. லுவிஸ் தனது Manual of Vanni என்ற நூலில் தான் கண்டவற்றையும் பிறரது நூல்களில் இருந்து அறியப்பட்டவற்றையும் ஆதாரம் காட்டி ஓமந்தை, பெரியமாற இலுப்பை, கனகராயன்குளம், இராசேந்திரன்குளம், மதகு வைத்தகுளம், ஒட்டு சுட்டான், மகாகந்தை ஆகிய இடங்களில் இந்து பௌத்த ஆலயங்களின் அழிபாடுகள், குறுநில மன்னர்களது இருக்கைகள் என்பவற்றை அடையாளம் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

மாதோட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 10 - 11 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய இரு சோழச் சாச னங்கள் இப்பிராந்தியத்தில் இராஜராஜேஸ்வரம், திருவிராமேஸ்வரம் என்ற பெயரில் இரு ஆலயங்கள் இருந்ததாகக் கூறுகின்றன. இவ்வாதா ரங்கள் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் பல இந்து ஆலயங்கள் வன்னியில் இருந்ததை உறுதி செய்கின்றன. ஆயினும் அக்காலத்திற்குரிய கலை மரபுடன் கூடிய ஓர் ஆலயம் தானும் இதுவரை முழுமையாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. இங்கு முழுமையான தொல்லியல் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டால் இதுவரை வெளிச்சத்திற்கு வராத பல உண்மைமைகள் வெளிவர வாய்ப்புண்டு. அதன் தொடக்கப் புள்ளியாக பனங்காமம் சிவன் ஆலயம் பற்றிய ஆய்வைக் குறிப்பிடலாம்.

**பனங்காமம் சிவன் ஆலயம்**

இவ்வாலயம் மாந்தை கிழக்கில் மல்லாவி பிரதேச சபைக்கு உட்பட்ட மூன்று முறிப்பில் உள்ள நட்டன்கண்டிற்கு தெற்கே இரண்டு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் பனங்காமம் என்ற பெயரைப் பெற்றதற்கு பலகாரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் 13 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வந்த பாணன் என்ற அந்தணன் ஒருவன் வட இலங்கையில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த அரசன் முன்னிலையில் யாழ். வாசித்து பெரிய கமம் ஒன்றையும், மணற்றிடர் ஒன்றையும் பரிசாகப் பெற்றான். பாணனுக்கு கிடைத்த இடமே காலப்போக்கில் பனங்காமமாக மருவியது எனக் கூறப்படுகிறது.

ஆனால் கம, காம என முடியும் இடப்பெயர்கள் இலங்கையில் இற்றைக்கு 2,300 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இடப்பெயர்களின் பின்னொட்டுச் சொல்லாக வன்னியிலும் இலங்கையின் ஏனைய இடங்களிலும் இருந்ததற்கு கல்வெட்டுக்களிலும் பாளி இலக்கியங்களிலும் ஆதாரங்கள் காணப்படு கின்றன. பிராகிருத மொழிக்குரிய இப்பெயர்கள் இலங்கையில் மட்டுமன்றி தென்னாசியாவில் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து காணப்படுகின்றன.

இப்பெயர்கள் காலப்போக்கில் தமிழில், தெலுங்கில் கமம், காமம் என மாற்றமடைந்துள்ளன. உதாரணமாக ஆந்திராவில் உள்ள நந்திகாமம், புட்டுக் காமம் முதலான இடங்கள் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் அப்பிரதேசத்தின் முக்கிய தலைநகரங்களாக இருந்ததை தெலுங்குக் கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன. இதனால் பனங்காமம் என்ற இடப்பெயரின் தோற்றத்தை பிற்பட்ட கால யாழ்பாடியின் கதையுடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தெரியவில்லை.

ஆனால், ஒல்லாந்தர் கால ஆவணங்களில் 1870 இல் பனங்காமத்தில் ஆட்சி புரிந்த நல்லமாப்பாணன் ஒல்லாந்தரால் சிறைபிடிக்கப்பட்டு கொழும்பு சிறையில் அடைக்கப்பட்டபோது அவர் மனைவி நல்லைநாச்சியார் வண்ணார்பண்ணைக்கு வந்து வைத்திலிங்க செட்டியாரிடம் அடைக்கலம் பெற்றதாகக் கூறப்படுகிறது. அப்போது வைத்திலிங்கச் செட்டியார் கொழும்பு சென்று தனது செல்வாக்கைப் பயன்படுத்தி வன்னிச்சிற்றரசன் நல்லமாப்பாணனை விடுவித்ததாகவும் அதற்குப் பிரதியுபகாரமாக வைத்திலிங்க செட்டியார் கட்டிய ஆலயத்திற்கு நல்லமாப்பாணன் 20,000 பனைமரங்களையும் துணுக்காயில் உள்ள தோரங்கண்டல் கிராமத்தையும் நன்கொடையாக வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

இவற்றை நோக்கும்போது நல்லமாப்பாணன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசம் பண்டுதொட்டு பனைவளம் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டதாலேயே இப்பிரதேசம் பனங்காமம் என்ற பெயரைப் பெற்றதாகக் கூறுவது பொருத்தமாகும். இங்கிருக்கும் தற்போதைய ஆலயம் ஒன்றாகும். ஆனால் இவ்வாலயம் அமையப்பெற்ற இடத்தில் புராதன ஆலய மொன்றிருந்ததை ஆலயச் சுற்றாடலிலும் அயலில் உள்ள காட்டுப்பகுதியிலும் காணப்படும் புராதன கட்டிட அழிபாடுகள் உறுதிசெய்கின்றன. மேலும் புராதன ஆலயத்தில் வைத்து வழிபடப்பட்ட சிவலிங்கங்களே தற்போதைய ஆலயத்தின் பிரதான தெய்வங்களாக காணப்படுகின்றன.

ஆலயச் சுற்றாடலில் காணப்படும் தொல்லியல் ஆதாரங்கள் இவ்வாலயம் அமையப்பெற்றுள்ள பனங்காமத்திற்கு தொன்மையான தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை உறுதி செய்கின்றன. 1982இல் கலாநிதி இரகுபதி இலங்கைத் தொல்லியற் திணைக்களத்துடன் இணைந்து பனங்காமத்தில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் கிறிஸ்தவ சகாப்த காலத்தை அண்டிய புராதன குடியிருப்புகள் இருந்ததற்கான பல வகை மட்பாண்டங்களைக் கண்டுபிடித்திருந்தார். அவற்றை மேலும் உறுதிப்படுத்தும் சான்றுகளை அண்மையில் எமது களவாய்வின் போதும் அடையாளம் காணமுடிந்தது. இருப்பினும் இப்பிரதேசத்தின் வரலாறு வன்னியர் குடியேற்றம், வன்னிச் சிற்றரசர்கள் தொடர்பான வரலாற்றோடே வெளிச்சத்திற்கு வருவதைக் காணமுடிகிறது.

இலங்கையில் வன்னி, வன்னியர் பற்றிய ஆதாரங்களை சோழர் ஆட்சிக் காலத்தில் இருந்து அறிய முடிகிறது. இப்பெயர்கள் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் இருந்து வன்னி, வன்னிப்பற்று,


ஆலயச் சுற்றாடலில் காணப்படும் கபோதங்கள்

இலங்கைத் தமிழர் வரலாற்றில் வன்னியர் ஆட்சிக்காலம் முக்கியத்துவம் மிக்கது. ஆயினும் அவர்களின் ஆட்சிக்கால தொல்லியல் எச்சங்கள் இதுவரை சரிவர அடையாளப் படுத்தவில்லை. அதை அடையாளப்படுத்தும் தொடக்கப் புள்ளியாக இச்சிவாலயம் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னிச் சிற்றரசர்கள் என்ற பெயரில் வட இலங்கையிலும் தென்னிலங்கையிலும் செல்வாக்கைப் பெற்றதைப் பாளி சிங்கள இலக்கியங்களிலும் கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம், வையாபாடல் முதலான தமிழ் இலக்கியங்களிலும் காணமுடிகிறது. இதற்கு தமிழகத்தில் இருந்து பல்வேறு காலகட்டங்களில் பல நோக்கங்களுடன் வன்னியர் என்ற சமூகம் இலங்கையில் வந்து குடியேறியதே காரணமாகும்.

இலங்கை பண்டுதொட்டு தமிழகத்துடன் நெருங்கிய அரசியல் தொடர்புகளைக் கொண்டிருந்ததால் தமிழகத்தில் போர் நடவடிக்கையில் முக்கிய பங்கெடுத்த வன்னியர் சமூகம் சமகாலத்தில் இலங்கையிலும் குடியேறியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. பேராசிரியர் சி. பத்மநாதன் சோழர் ஆட்சியில் இலங்கையில் இருந்த வேளைக்காரப் படைப் பிரிவில் வன்னியர் பணியாற்றியதால் சோழர் ஆட்சியின் முடிவில் அவர்கள் இலங்கையில் நிரந்தரமாக தங்கியிருக்கலாம் எனக் கருதுகிறார்.

அதனால் அவர்கள் வாழ்ந்த இடங்கள் வன்னி, வன்னிப்பற்று என்ற பெயர்களைப் பெற்றது. 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகன் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிபுரியத் தொடர்ந்து பொலநறுவை அரசு தெற்கு நோக்கி நகர்ந்த போது வட இலங்கையில் கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தமிழர்களுக்குச் சார்பான புதிய அரசுகள் தோற்றம் பெற்றதைச் சூளவம்சம், இராஜாவலிய, பூஜாவலிய முதலான பாளி, சிங்கள இலக்கியங்களும் தமிழகக் கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. இக்காலத்தில் இருந்துதான் வடஇலங்கை வன்னி, வன்னிப்பற்று எனவும் அங்கு வாழ்ந்தவர்கள் வன்னியர் எனவும் அவர்களை ஆட்சி புரிந்தோர் வன்னிச் சிற்றரசர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். அவற்றுள் பனங்காமமும் வன்னிச் சிற்றரசர்களின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாக மாறியது.

இவ்வரசு சில சந்தர்ப்பங்களில் சுதந்திர அரசாகவும் பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாண அரசுக்கு உட்பட்ட அரசாகவும் ஆட்சி செய்யப்பட்டதை யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்களும் உறுதி செய்கின்றன. இவ்வரலாற்றுப் பின்னணியில்தான் பனங்காமத்தில் உள்ள சிவன் ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பை நோக்கமுடிகிறது.


இங்கிருந்த புராதன ஆலயம் எப்போது கட்டப்பட்டதென்பதை உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் அழிவடைந்த ஆலயக் கட்டிடச் சிதைவுகள், சிலைகள், சிற்பங்கள் என்வற்றின் கலைமரபுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயம் மிகப்புராதன காலத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியதெனக் கூற முடிகிறது. தற்போதைய ஆலயம் மூன்று காலகட்ட கலை மரபுக்குரிய கட்டிடப் பாகங்களைக் கொண்டு கட்டப் பட்டதாகக் காணப்படுகிறது. தற்போதைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஆவுடை யுடன் கூடிய மூன்று சிவலிங்கங்களும் இவ்விடத்தில் இருந்த புராதன ஆலயத்திற்கு உரியதாகும். ஆனால் புராதன ஆலயத்தில் ஐந்து சிவலிங்கங்கள் இருந்துள்ளன. அதனால் அவ்வாலயம் பஞ்சலிங்கேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாலயத்திற்குரிய ஐந்து சிவலிங்கங்களுள் ஒன்று இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட ஆலயம் ஒன்றில் வைத்து வழிபடப்பட்டு வருகிறது.

இன்னொரு சிவலிங்கம் உடைந்த நிலையில் காட்டுப் பகுதியில் காணப்படுகிறது. தற் போதைய ஆலயத்தில் உள்ள மூன்று சிவலிங்கங்களுள் மிகப்பெரிய சிவலிங்கம் பிரதான தெய்வமாக கர்ப்பக்கிருகத்தில் வைக்கப் பட்டுள்ளது. மற்றைய இரு சிவலிங்கங்களும் புராதன ஆலயத்திற்குரிய விநாயகர் சிற்பத்துடன் தற்போதைய ஆலயத்தின் முன்மண்டபத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வழிபாட்டு இடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

கர்ப்பக்கிருகத்தில் உள்ள கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ள ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் ஏறத்தாழ 114 செ.மீ. உயரத்தைக்



பெருங்கற்கால ஈமத்தாழி



1950 களில் கட்டப்பட்ட பனங்காமம் சிவன் ஆலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பூநகரியில் கிடைத்த கற்கருவிகள்



பரல் உயர் பதுக்கை



சரித்திர காலத்தைச் சேர்ந்த நாட்டுப்புற தெய்வங்கள்

கொண்டது. ஆவுடைக்கு வெளியே காணப்படும் இலிங்கத்தில் உயரம் 43 செ.மீற்றராகும். சிவலிங்கத்தின் விட்டம் 2.8 செ.மீற்றராகும். வட்டவடிவில் அமைந்த ஆவுடையின் உயரம் 71செ.மீற்றராகும். அதன்சுற்றளவு 90செ.மீற்றராகும்.

இச்சிவலிங்கம், ஆவுடை என்பவற்றின் உயரம், வடிவமைப்பு, கலைமரபு என்பன மாதோட்டம், பாலியாறு, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கங்களைப் பெரிதும் ஒத்ததாகக் காணப்படுகிறது. இவ்வாலயத்தில் உள்ள ஏனைய இரு சிவலிங்கங்களும் இவற்றை ஒத்ததன்மையைக் கொண்டுள்ளன.

தமிழகத்தில் இத்தகைய வடிவில் உள்ள சிவலிங்கம் பெரும்பாலும் பல்லவர் அல்லது முற்பட்ட சோழர் காலத்திற்குரியதாகக் காணப் படுகின்றன. இதனால் இங்கிருந்த புராதன ஆலயத்தின் தோற்ற காலத்தை கி.பி.8 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டுக்கு இடைப் பட்ட காலமாக எடுத்துக் கொள்ள இடமுண்டு. ஆயினும் தற்போதைய ஆலயத்தின் கர்ப்பக் கிருகம் வாசல்பகுதியில் வைத்துக் கட்டப் பட்டுள்ள புராதன ஆலயத்திற்குரிய புடைப்புச் சிற்பங்கள், ஆலயச் சுற்றாடலில் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள், கபோதங்கள், கொடுங் கைகள், யாளிமட்டங்கள், விநாயகர் சிற்பம் என்பன சிவலிங்கங்களின் காலத்தைவிட காலத்தால் சற்றுப் பிற்பட்டதாகக் காணப்படுகின்றன. கலாநிதி இரகுபதி இவற்றின் கலைமரபுகள் கி.பி.13-14 நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதுகிறார். இக்காலப் பகுதியில் பனங்காமம் வன்னியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் அவர்களின் ஆதரவில் இவ் வாலயம் அமைக்கப் பெற்றிருக்கலாம் எனக் கருதஇடமுண்டு. புராதன ஆலயத்தை நினைவு படுத்தி கட்டப்பட்டுள்ள தற்போதைய ஆலயத்தின் கலைமரபு 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

இலங்கைத் தமிழர் வரலாற்றில் வன்னியர் ஆட்சிக்காலம் முக்கிய காலகட்டத்தைக் குறித்து நிற்கிறது. ஆயினும் அவர்களின் ஆட்சிக்கால தொல்லியல் எச்சங்கள் இதுவரை சரிவர அடையாளப்படுத்தவில்லை. அதை அடையாளப் படுத்தும் தொடக்கப் புள்ளியாக இச்சிவாலயம் காணப்படுகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையில் பல சிகரங்களைத் தொட்ட டாக்டர் எஸ்.இராமநாதன்

- பத்மா சோமகாந்தன்



பேராசிரியர் எஸ். இராமநாதன் ஐக்கிய நாடுகள் சபையில் வீணை இசைக்கின்றார்.

இசைக் கலையை வரன் முறையாக மாபெரும் மேதாவிகளிடம் கற்று 'சங்கீத பூஷணம்' என்ற கல்லூரிப் பட்டத்தோடு கௌரவங்களையும் பாராட்டுக்களையும் அள்ளிக் குவித்துக் கொண்டவர் டாக்டர் பேராசிரியர் எஸ். இராமநாதன். மதுரை தமிழிசைச் சங்கம் அளித்த 'மதுர கலா ப்ரவீண', காரைக்குடி தமிழிசைச் சங்கம் அளித்த 'இசைக்கடல்', மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் அளித்த 'சங்கீத கலா நிபுண வள்ளலார்', சென்னை மியூஸிக் அக்கடமி வழங்கிய 'சங்கீத கலாநிதி', வள்ளலார் இறை பணி மன்றம் கொடுத்த 'இசைக் கலைச் செல்வம்', ஸ்வாதித் திருநாள் சங்கீதசபா வழங்கிய 'ஸ்வாதி திலகம்' எனப் பெருமையுடன் மென்மேலும் அடுக்கிக் கொண்டே செல்லும் வகையில் அளவிறந்த பட்டங்கள் சூட்டப்பட்ட பெருமைக்குரியவரே இப்பெரும் இசை மேதை.

திருக்கோயிலூர் நாமுடுபாகவதர், சுப்பிரமணிய தீட்சிதர் ஆகியோரிடம் தனது ஏழு வயதிலேயே இசை கற்கத் தொடங்கிய இவர், தென்னாற்காடு வளவனூர் எனும் ஊரில் 1917ஆம் ஆண்டு பிறந்தார். இளமையிலேயே இசையைக் கற்றதோடு தொடர்ந்தும் 'சங்கீத பூஷணம்' என்ற பட்டப் படிப்பை மேற்கொள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கற்றார். மதுரை மணிஐயர் டைகர் வரதாச்சாரியார் ஆகியோரிடமும் இன்னும் பல இசைவல்லுனர்களிடமும் இசைப் பயிற்சியை மேற்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இசை வல்லுனர்கள் தமது ஆற்றல் களை தம் கச்சேரிகள் மூலம் வெளிப்படுத் தினர். சிலர் பிறருக்குக் கற்பித்தனர்; சிலர் நூல்களை எழுதி, வாத்தியங்களை ஆக்கினர். ஆனால் டாக்டர் இராமநாதனோ மேற்படி விடயங்களோடு இன்னும் மேலதிகமாக இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாத்திரமன்றி அமெரிக்கா, இலண்டன், மலேசியா, எடின்பரோ என உலகின் பலநாடுகளுக்கும் சென்று இசை பற்றிய சொற்பொழிவு, கருத்தரங்கு, ஆய்வுகள், கச்சேரிகள் எனப் பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கர்நாடக இசையின் மகத்துவத்தைப் பற்றிய கருத்துக்களைப் பரவச் செய்தார். உலக இசை மாநாடுகளில் பங்குபற்றி உரையாற்றியுள்ளார். பண்கள், இராகங்கள் பற்றிய அரிய ஆராய்ச்சிச் சொற் பொழிவுகளை சீனா, தாய்வான் ஆகிய நாடுகளிலும் நிகழ்த்தியுள்ளார்.

இவருடைய இந்த இசைத் திறமைகளை நன்கு புரிந்து கொண்ட வொஷிங்டன், கோல்கேட், இலினொய்ஸ் ஆகிய பல்கலைக்கழகங்கள் வருகைதரு இசைப் பேராசிரியராக நியமனம் செய்து இவரது இசைத் திறமையை நன்கு பயன்படுத்திக் கொண்டன. ஏனைய இசை மேதைகளை விட டாக்டர் எஸ். இராமநாதனுக்குக் கிடைத்த இவ்வாய்ப்பினால் தமிழ்நாடே பெருமைதேடிக் கொண்டதெனக் கருத லாம். டாக்டர் அவர்கள் சென்னையில் வாழ்ந்த காலத்தில் வாளாடி கிருஷ்ண ஐயரிடம் பத்து ஆண்டுகள் வரை வாய்ப் பாட்டுப் பயிற்சி பெற்றதோடல்லாமல் தேவகோட்டை நாராயண ஐயங்காரிடமும் வீணை வாத்தியத்தைக் கற்றுத் தேர்ந்தார்.

ஒருவரிடம் எத்தனை கொள்ளையாகத் திறமைகள் குவிந்திருந்தாலும் அவற்றை வெளிக் கொணரத் தக்கதொரு தூண்டுகோல் அவசியம் என்பதற்கிணங்க டாக்டருடைய ஆற்றலை வெளிப்படுத்தச் சிறந்த தூண்டு கோலாக அமைந்தவர் அன்று சென்னையில் முதல் அமைச்சராக இருந்த எம். பக்தவத்சலம் ஆவார். இதனை டாக்டரு டைய இவ்வார்த்தைகளே உறுதிப்படுத்து கின்றன. "இரு ஆண்டுகள் என்வாழ்வில் மிகப்பயனுள்ள ஆண்டுகள். நூற்றுக்கணக் கான கோயில்களுக்கு விஜயம் செய்து இசை, நடன ஆராய்ச்சிகளை மேற் கொண்டது எனக்கு ஆழ்ந்த அறிவை அளித்தன" என மொழிந்திருந்தார். "இந்த அருமையான வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர் தமிழ்நாடு

இசையின் உச்சம் தொட்ட மனிதராக விளங்கிய போதிலும் இளம் வயதினர் ஆரம்ப பயிற்சி பெறும் இசை நிகழ்ச்சிகளில் முன்வரிசையிலிருந்து கேட்டு இரசிக்கும் பண்பினராகத் திகழ்ந்தார்.


டாக்டர் எஸ்.இராமநாதனுக்கு மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலமைச்சர் அவர்களே" எனக் குறிப்பிட்டுள்ளார் டாக்டர் இராமநாதன்.

இந்த ஆராய்ச்சி அனுபவத்தாலும் தான் பெற்றுக் கொண்ட திறமையாலும் தனது இசை அறிவு விசாலித்ததாகவும் மென்மேலும் அத்துறையில் தனக்கு ஊக்கமும் அக்கறையும் ஏற்பட்டது என்பதே இவரது கருத்தாகும்.

இசைத் துறையிலே இத்தகையதொரு பாரிய ஆய்வை மேற்கொண்டதன் பட்டறிவின் விளைவே அவர் பிற்காலத்தில் சங்கீத வித்வத் சபை, தமிழிசைச் சங்கம் என்பவற்றின் நிபுணர் குழுவிலிருந்து பணியாற்றியதுமன்றி, சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் இருந்து கடமை புரியப் பேருதவியாக அமைந்தது. கேரளா பல்கலைக் கழகமும் இவரை விட்டுவைக்கவில்லை. அதன் இசைக்கான துணைவேந்தர் பதவியையும் இவரே அலங்கரித்தார். இத்தனை காத்திரமான பொறுப்புக் களைச் சுமந்து கொண்டிருந்த வேளையிலும் விசேட வைபவங்கள், கொண்டாட்டங்கள், விழாக்களின் போதெல்லாம் இசைக்கச்சேரி செய்வதையும் வானொலியில் இசைக் கச்சேரிகள், ஆய்வுரைகள் செய்வதிலும் கூடப் பின்வாங்காது இசையையே வாழ்வாக மேற்கொண்டு வாழ்ந்தார்.

சங்கீத வகுப்புக்களை ஒழுங்காக நடாத்தும் இவர், சிலப்பதிகாரத்தில் இசை என்ற தலைப்பில் நீளமான, ஆழமான ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினைத் தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் எழுதியமையால் வெஸ்லியன் பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இப்படிப் பல பட்டங்களையும் கௌரவங் களையும் பிறநாட்டில் புகழ்வாய்ந்த பெரும் அமைப்புக்களிடமிருந்து பெற்றிருந்தாலும் அமெ ரிக்காவில் ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் மனித உரிமைகளுக்கான தினத்தில் செய்த வீணைக் கச்சேரியையும் மலேசியாவில் இடம்பெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தான்செய்த இசைக்கச்சேரியையும் என்றென்றுமே தன் நினைவிலிருந்து அகற்ற முடியாது எனப் பெருமிதத்துடன் குறிப்பிடுவார். எத்தனை பிரமாண்டமான மகிழ்வுதரும் நிகழ்ச்சி




1981 இல் நடைபெற்ற தமிழ் இசைச் சங்கத்தின் பரிசளிப்பு நிகழ்வில் பேராசிரியர் எஸ். இராமநாதன் தனது மாணவப் பரம்பரை ஒருவருக்கு ராஜாஜி தம்பூரா பரிசை வழங்கி வைக்கின்றார்.



சாதனைப் புன்முறுவலுடன் டாக்டர் பேராசிரியர் எஸ். இராமநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பல இசைவல்லுனர்கள்
கச்சேரிகள் மூலம்
தமது ஆற்றல்களை
வெளிப்படுத்தினர்.
சிலர் கற்பித்தனர்;
சிலர் நூல்களை எழுதி,
வாத்தியங்களை ஆக்கினர்.
ஆனால் டாக்டர் இராமநாதனோ
மேற்படி விடயங்களோடு
உலகின் பல நாடுகளுக்கும்
சென்று கர்நாடக இசையின்
மகத்துவத்தைப்
பரவச் செய்தார்.

கள் நம் வாழ்வில் இடம்பெற்றாலும் ஒரு சிலவே நம் மனதில் பதிந்தது, மனதைக் கவர்ந்த நிகழ்வுகளாக இருப்பது இயல்புதான்.

கர்நாடக இசையைத் தெரியாத, புரியாத பிற இனத்தவருக்கு எமது இசையின் மேன்மையைத் தாற்பரியத்தை நாடுநாடாகச் சென்று விளங்க வைத்தார். இந்த அரிய பணியில் திருப்தியடையாமல் உள்ளூர் இசைப்பிரியர்களுக்கும் இசை பற்றிய அறிவை மேம்படுத்த ஆசிரியர்களைத் தெரிவு செய்து பயிற்சி கொடுத்து, பல நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு இசைப்பயிற்சி அளிக்கும் கல்லூரியின் பேராசிரியராக நீண்ட காலம் சேவை செய்தார். 1969 முதல் மதுரை பல்கலைக்கழகத்தின் இசைக்கல்லூரி முதல்வராகவும் சுமார் பத்துவருடங்கள் வரை பணியாற்றினார்.

இசையில் முதல்வராக, இனிய சொற்பொழிவாளராக, பேராற்றல் மிக்க ஆராய்ச்சியாளராக, சிறந்த பேராசிரியராகத் திகழ்ந்த டாக்டர் இராமநாதனிடம் கல்வி பயின்ற ஒரு மாணவப் பரம்பரை தொடர்ந்து கொண்டே வந்தது.

இசையின் உச்சம் தொட்ட மனிதராக இவர் இருந்தாலும் இளம் வயதினரின் ஆரம்ப பயிற்சி பெறும் இசை நிகழ்ச்சியாக இருப்பினும் தனது இத்தனை வேலைப்பளுவின் மத்தியிலும் அவற்றைப் பெரிது படுத்தாமல் முன்வரிசையில் இருந்து கேட்டு இரசித்து மகிழ்வார். இத்தகைய இவரது பண்பும் பணிவும் எல்லோரையும் நன்கு கவர்ந்திருந்தது.

ஏனைய இசைக் கலைஞர்களுடன் இணைந்து கோவூர்ப் பஞ்ச ரத்ன கீர்த்தனைகளைப் பாடுவது இவரது வழக்கமாக இருந்தது. அப்படியே ஒவ்வொரு ஆண்டும் தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை, ஐயந்தி தினம் ஆகிய வைபவங்களின் போதெல்லாம் தவறாது தன் சிஷ்யர்களுடன் திருவையாறு சென்று சுவாமிகளின் சமாதியில் திவ்ய நாம கீர்த்தனைகளைப் பாடுவதையும் தனது வாழ்வில் மிக முக்கிய கடமையாகக் கொண்டு வாழ்ந்த டாக்டர் எஸ். இராமநாதன் இசையோடு ஒன்றிணைந்து விட்ட பிறவிகளோடு வைத்து எண்ணப்படக் கூடியவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியனின் அரிய ஆடலில் "ஆடும் அருள்ஜோதி"

சிங்கப்பூர் அப்ஸராஸ் கலையகம் அருஸ்ரீ கலையகத்துடன் இணைந்து ஆடும் அருள் ஜோதி என்னும் நடன நிகழ்ச்சி ஒன்றினை அண்மையில் கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் சிறப்பாக மேடையேற்றியது. பல வடிவங்களைப் பெறினும் இறைவன் ஒருவனே. அவன் ஒளிவடிவானவன். அவன் ஆடல் தெய்வம் என இந்துமதம் போற்றும். அவ்விதமே ஏனைய தெய்வங்களும் திவ்விய நடனங்களைக் காட்டி நிற்பதைப் புராணங்கள் சித்ரிக்கின்றன.

இந்த வகையில் சிவபிரான் மற்றும் கிருஷ்ண பரமாத்மாவின் ஆடல்களை சிறப்பாகவும் ஏனைய தெய்வங்களின் ஆடல்களை தொட்டுக்காட்டுவது மான ஒரு வித்தியாசமான நடனப்படைப்பு ''ஆடும் அருள் ஜோதி''

சிங்கப்பூர் அப்ஸராஸ் கலாலயத்தின் பணிப்பாளர் கலைஞர் அரவிந்த் குமாரசாமியின் கருப்பொருளில் உருவான இந்நிகழ்வுக்கு நடன வடிவமைப்பு கொடுத்து அரங்கில் உயிரூட்டியவர் நடன வித்தகர் தவராசா மோகனப்பிரியன்.

திருச்சி கலைக்காவேரி நுண்கலைக்கல்லூரியின் உயர் பட்டதாரியான இவ்விளம் கலைஞர் நடன ஆசிரியராகவும் பல்வேறு நடன நிகழ்ச்சிகளின் நடன வடிவமைப்பாளராகவும் ஆடற்கலைஞராகவும் அனுபவம் பெற்ற ஒருவர்.

ஆடும் அருள் ஜோதி நடன நிகழ்ச்சி கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் அருஸ்ரீ கலையகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் அரங்கேறியபோது அதனைக் கண்டு களிக்கும் வாய்ப்பு கொழும்பு ரசிகர்களுக்கு கிடைத்தது. அரங்கில் ஏக கலைஞனாக மிளிர்ந்த மோகனப்பிரியன் தில்லைக் கூத்தனான ஆடல் அரசன் சிவபிரானின் ஆடற்லை மிகச் சிறப்பான பாடல் வரிகளுக்கும் இராக தாள ஜதிகளுக்கும் ஏற்ப பாவங்களை மாறி மாறி அற்புதமாகப் புலப்படுத்தி ஆடியதுடன் அருணகிரிநாதரின் திருப்புகளுக்கும் பக்திபூர்வமாக ஆடி சபையினரை பெரிதும் கவர்ந்தார்.

அடுத்து இடம்பெற்ற ஊத்துக்காடு வெங்கட கவி இயற்றிய ஆடாது அசங்காது வா கண்ணா என்னும் மந்தியமாவதி இராகத்தில் அமைந்த பாடலுக்கான எழில்மிகு கிருஷ்ண நடனத்தையும் அவர் மிகச் சிறப்பாக ஆடி ரசிகர்களை பரவசத்திலாழ்த்தினார். பக்க வாத்தியங்கள் மற்றும் பாடலின் உச்ச அளிக்கையையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இதனைத் தொடர்ந்து பாபநாசம் முதலியாரின் சிறந்த நிந்தாஸ்திதி பாடல் வரிகளுக்கு மோகனப்பிரியன் பாவங்களைப் பிரதிபலித்து விறுவிறுப்பாக ஆடி மேலும் தமது ஆற்றலை புலப்படுத்தியதை ரசிக்க முடிந்தது.

பிருந்தாவனத்தில் கிருஷ்ணர் கோபியருடன் ஆடி மகிழமும் ரஸலீலா நடனத்தை ஆடி இவ்விளம் கலைஞர் கற்பனைச் சிறப்போடு நளின பாவங்களுடன் இனிமை ரசம் சொட்ட ஆடிய விதமும் ரசிக்கும்படியாக மிளிர்ந்தது.

தமது நிருத்தியத்தில் வித்தியாசமான ஆடல் நுணுக்கங்களையும் காட்டி சுழன்றாடிய பிரியன் நடனத்தின் முத்தாய்ப்பான தில்லானாவிலுங்கூட காலின் சலங்கை ஒலிக்கும் மிருதங்க தாள ஒலிக்கும் ஒரு சிறு போட்டியையும் ஏற்படுத்தி ஆடி ரசிகர்களைக் கவர்ந்தமை ஒரு தனி விசேஷமாகும்.

ஆடும் அருள் ஜோதி நிகழ்வில் மிருதங்க இசையை ரி.ரமணனும் (தமிழ் நாடு) ,வயலினை ஆர்.சி வகுமாரும் (தமிழ்நாடு) பாடல்களை அனிஸ் ராமும் சிறப்பாக வழங்கினர்.

- லஷ்மி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாணத்திலே தமிழ்க்கல்வி போதிக்கப்பட்ட முறைமை

## (19ஆம் நூற்றாண்டைக் கருத்திற் கொண்டது)

**- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே நிலவிய தமிழ்க்கல்வி மரபிலே தமிழ்க்கல்விப் போதனா முறைமை பற்றிப் பூரணமாக ஆராயப் போதிய எழுத்து நிலைப்பட்ட ஆவணச் சான்றுகள் மிகவும் குறைவாகவே காணப் படுகின்றன. ஊகமும், செவிவழிக் கதைகளும், முதியோர் உரையாடல்களுமே 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்வி முறைமைக்குரிய ஆய்வுச் சான்றாதா ரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

ஆசிரியர்களை நூலாசிரியர், உரையாசிரியர், போதனாசிரியர் எனப் பலவகைகளாகப் பாகுபாடு செய்வர். இம்மூன்று வகை ஆசிரியரிலும் போதனா சிரியர் பணியே மிகவும் கடினமானதும் பெறுமதியானதுமாகும். போதனாசிரியர் மாணவர் களோடும் சமூகத்தோடும் நெருக்கமான தொடர் புடையவராக இருக்க வேண்டியவர். இதனாலே நூலாசிரியர், உரையாசிரியர் முதலானோருக்கு இல்லாத சில தகுதிப்பாடுகள், குணவியல்புகள், ஆளுமை முதலியன போதனாசிரியரிடம் காணப் படவேண்டும். தமிழ்க்கல்வி மரபிலே போதனாசிரி யர்களிடம் முற்சுட்டிய பல தகுதிப்பாடுகளும் காணப்பட்டன என்றே கருதமுடிகின்றது.


பாலபோதம்.

இரண்டாவது.

௧ம் பாடம்.

தேவன்.

ஒரே மெய்த் தேவன் உண்டு.
அவர் நாமம் யேகோவா.
அவர் யாவையுஞ் சிருட்டித்தார்.
அவர் ஆவியாய் இருக்கிறார்.
அவருக்கு ரூபம் இல்லை.
நாங்கள் அவரைக் காணக் கூடாது.
அவர் பிதாச் சுதன் ஆவி என்னுந் திரி ஏகராய் இருக்கிறார்.
சுதனுக்கு யேசுக்கிறிஸ்து என்னும் பெயர்.
அவரே மனுஷரை இரட்சிக்கப் பரலோகத்தில் இருந்து பூமியில் வந்தார்.
பரிசுத்த ஆவி மனுஷரைச் சுத்தஞ் செய்கிறவர்.

1

பழந்தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் ஆசிரியருக்குரிய இலக்கணங்களை அவர்களது பயன்பாட்டினைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றன. எனினும் பெரும்பாலான பழந்தமிழ் நூல்கள் ஆசிரியர் எனக் குறிப்பிடும் பொழுது அது பெரும்பாலும் போதனாசிரியரையே குறித்து நிற்பதையும் அவதானிக்க முடிகின்றது.

19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் இரண்டு வகையான கல்வி நிறுவனங்கள் விளங்கின. இவை இரண்டுக்குமிடையே பாடத் திட்டங்கள் ஒன்றுபட்டும் வேறுபட்டும் நடைமுறைப்ப டுத்தப்பட்டன. பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தலுக்கும் கல்விப் போதனா முறைமைக்குமிடையே நெருக்கமான தொடர் புண்டு என்று கருதலாம். யாழ்ப்பாணத்தில் நிலவிய இரண்டு வகையான தமிழ்க்கல்விப் பாரம் பரியத்திலும் கற்பித்தல் முறைமையில் வேறுபாடு காணப்பட்டன.

### மரபுவழிக் கல்வியிற் கற்பித்தல் முறைமை

மரபுவழிக் கல்வியிலே தமிழ் போதிக்கப்பட்ட முறைமை இன்றைய கற்பித்தல் முறைகளில் இருந்து பெரிதும் வேறுபட்டது. மரபுவழிக் கல்வியில் வயது நிலையை மனங்கொள்ளாமல் மாணாக்கர்களின் திறன் நிலையையே ஆசிரியர் மனங்கொண்டு கற்பித்தார். இன்றைய உளவியல் பரீட்சார்த்தங்கள் எதுவும் அன்று பயன்படுத்தப் படவில்லை என்றே சொல்லலாம்.

ஆசிரியர் தான் எப்படிப் படித்தார், தனக்கு எப்படிக் கற்பிக்கப்பட்டது என்ற சுய அனுபவ அடிப்படையில் உள்ள அனுபவத்தையே தனது முறைமையாகக் கொண்டார். சுய அனுபவ முறைமையே அவரது பயிற்சியாக இருந்தது. ஆசிரியர்கள் சிலர் பிறரைப் போல செய்வதன் மூலமும் தம் திறனை வளர்த்துக் கொண்டதும் உண்டு.

19 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்விப் பரப்பிலே சுய அனுபவம் ஓரளவு பயனைக் கொடுத்தது என்றே கருதலாம். வயது முதிர்ச்சியும் அனுபவ முதிர்ச்சியும் அறிவு முதிர்ச்சியின் வெளிப்பாடு என்பதும் அக்காலக் கல்விக் கொள்கையின் ஒரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முக்கியமான அம்சமாகவே இருந்தது எனக் கருதலாம். அனுபவமே ஓர் ஆசிரியரின் திறனாகக் கருதப்பட்டது. மரபுவழிக் கல்வியில் எவ்வளவு காலம் அவர் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார் என்பதை வைத்துக்கொண்டே அவரது மதிப்பு, திறமை, ஆற்றல் முதலியவை தீர்மானிக்கப்பட்டன.


அனுவபம் வாய்ந்த ஆசிரியர் கற்பிக்கும் முறையை ஆசிரிய அனுபவமாகப் பலர் பின்பற்றினர் என்று கருத முடிகின்றது. இந்த அனுபவ முறையிலேயே கற்பித்தல் முறையும் அமைந்தது. 19 ஆம் நூற்றாண்டின் தமிழ்க் கல்வி மரபில் மாத்திரமன்றிப் பிற்காலக் கல்வி முறையிலும் இத்தன்மை ஓரளவு பேணப்பட்டது எனக் குறிப்பிடலாம்.

மாணவனுக்கு உச்சரிப்பைத் தொடர்ந்து எழுத்துப் பயிற்சிகள் நடைபெறுவது வழக்கம். உச்சரிப்பு (ஒலிமரபு முறைகளை) ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் விதத்திலேயே மாணவனும் உச்சரிக்க வேண்டுமென்ற நியதியுமிருந்தது. ஆசிரியருக்குச் சிலவேளைகளில் ஏற்படும் தடங்கல்களையும் மாணவர்கள் பின்பற்றிவிடுவதும் உண்டு. தமிழ் நெடுங்கணக்கில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு மிகவும் சிக்கலான, வேறுபாடற்ற ஒலிகளாகக் காணப்படும் ளகர, ழகரங்களையும் றகர, ரகரங்களையும் திரும்பத் திரும்ப உச்சரித்துக் காட்டிப் பயிற்றுவர். உச்சரிப்புச் சரியாக அமையாதவிடத்து மாணவன் எழுத்துப் பிழைவிட வாய்ப்பிருக்கும் என்பதில் மரபுவழித் தமிழ் ஆசிரியர்கள் மிகவும் கவனமாக இருந்தமையை அவதானிக்க முடிகின்றது. ரகர, றகரத்தைப் போலவே னகர, நகர, ளகர, லகர ஒலிவேறுபாடும் மிகவும் சிக்கலானது. இதனாலேயே மனன வழியில் அந்த ஒலிகளை நினைவுபடுத்தத் தன்னகரம், றன்னகரம் என்ற வேறுபாட்டையும் ஆசிரியர் விளங்க வைப்பார்.

உச்சரிப்புப் பழகியபின் வரன்முறையாக எழுதத் தொடங்கும் போது, கொம்பு, சுழி என்பவற்றைப் பற்றிய தெளிவு ஏற்படும் வரை ஒலிப்பயிற்சியுடன் கூடிய எழுத்துப்பயிற்சி நடைபெறும். மிக ஆரம்ப மாணவர்களுக்கு ஆசிரியரே அவர்களது கையைப் பிடித்துத் திரும்பத் திரும்ப மணலிலே எழுதிப் பழக்குவார். இம்முறை ஆசிரியர் மாணாக்கன் மீது செலுத்தும் தனித்த கவனத்தின் பாற்படுகின்றது.

*கொம்பு சுழி கோணா மற் கொண்ட பந்திசாயாமல்*
*அம்பு போற் கால்கள் அசையாமல் - தம்பி*
*எழுதினால் நன்மையுண்டு.*

என்று ஒரு பழம் பாடலும் உண்டு. உச்சரிப்பும் வரிவடிவமும் பழகிய பின்னர் சொற்கள் எழுதும்



உ
கணபதி துணை.
பாலபாடம்
மூன்றாம்புத்தகம்.
இது
யாழ்ப்பாணத்து நல்லூர்
ஆறுமுகநாவலரவர்கள்
சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகராயிருந்த
பொன்னம்பலபிள்ளையால்
செய்து,
சென்னபட்டணம்
வித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.
கக - ம் பதிப்பு.
பிரமாதி ஆடிமீ.
1939.
அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது.
(Copyright Registered.)

பயிற்சி அளிக்கப்படும். ஆறுமுக நாவலரின் முதலாம் பாலபாடத்தை நுணுக்கமாக ஆராய்ந்தால் அக்காலத்திலே தமிழ்க்கல்வி கற்பிக்கப்பட்ட முறைமையைத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.

மரபுவழி வரும் தமிழ்க் கல்வி எவ்வாறு நிறுவனவழிவரும் தமிழ்க்கல்விமரபுடன் சங்கமமாகின்றது என்பதையே பொதுவாகப் பாலபாடங்கள் காட்டிநிற்கின்றன.

ஓரெழுத்துச்சொல், முதலிலே மாணவனுக்கு உச்சரிப்பு, வரிவடிவ முன்னறிவோடு பயிற்றப்பட்டது. முதலாவது பாலபாடத்தின் ஒழுங்கு முறையே 19 ஆம் நூற்றாண்டின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தமிழ்க்கல்வி கற்பித்தல் முறையின் வெளிப்பாடு எனக் கொள்ளலாம். முதலாம் பாலபாடத்தின் ஒழுங்குமுறை பின்வருமாறு அமைகின்றது.


**1. நெடுங்கணக்கு**
- உயிரெழுத்து
- மெய்யெழுத்து
- உயிர்மெய்யெழுத்து

**2. சொற்கள்**
- ஓரெழுத்துச் சொற்கள்
- இரண்டெழுத்துச் சொற்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிஷனரிமாரின் தமிழ்ப் பாடநூல் - 1867**

**2ஆம் பாலபோதம் (1867) மூல நூலின் சில பக்கங்கள்**


இரண்டாம்

பாலபோதம்.

AMERICAN CEYLON MISSION.

MANEPY PRESS. JAFFNA.
1867.

மூன்றெழுத்துச் சொற்கள்
நான்கெழுத்துச் சொற்கள்
ஐந்தெழுத்துச் சொற்கள்

**3. சொற்றொடர்கள்**

இரண்டு சொற்கள் உள்ள தொடர் எனத் தொடங்கிப் படிப்படியாகச் சொற்றொடர்கள் நீண்டு செல்கின்றன. வாக்கிய அமைப்பு முழுமையாக முதலாவது பாலபாடத்தினூடே பயிற்றப்பட்டது.

**4. ஒரு சம்பாசணை**

ஒரு குருவுக்கும் மாணவனுக்கும் நடந்த சம்பாசணை என்று பகுதி வருகின்றது.

**5. பிரார்த்தனை (பிரார்த்தனம்)**

பிராதக்காலப் பிரார்த்தனம்
சாயங்காலப் பிரார்த்தனம்

மேற்காட்டிய வகையில் ஏறத்தாழ நாற்பத்தைந்து பாடங்கள் உள்ளன. 19 ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணக் குடாநாட்டின் தமிழ்க்கல்வி நிறுவன மயமானதாக மாற்றமடைந்த போதும், பெரும ளவுக்கு மரபுவழிக் கற்பித்தல் முறைமைகளில் இருந்து அது விடுபடவில்லை என்றே கருத வேண்டும்.

காலை, மாலை வணக்கமும் பாடத்தின் ஒரு பகுதியாகி அவை போதிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. ஆசிரியரையும் கடவுளையும் வணங்கப் பழக்குவதும் பயிற்றுவதும் கூட ஒரு கல்வி முறையாகவே கருதப்பட்டு வந்துள்ளன வென்று கருதவேண்டும். இம்முறைமை நிறுவன ரீதியான பாடசாலை மரபுகளிற் பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டது. சைவப் பாடசாலைகளிற் தேவாரம் ஓதுதலும், கிறிஸ்தவப் பாடசாலைகளில் வேதாகமம் வாசிப்பதும் வழக்காறாகின. இவ்வழக்காறு இன்று வரை தொடர்வதையும் அவதானிக்க முடிகின்றது.

19 ஆம் நூற்றாண்டின் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்திலே உச்சரிப்புப் பயிற்சியைத் தொடர்ந்து எழுத்துப் பயிற்சி அளிக்கப்பட்ட போதிலும் சிற்சில இடங்களில் எழுத்துப் பயிற்சியும் உச்சரிப்புப் பயிற்சியும் ஒன்றாகவே அளிக்கப்பட்டன என்றும் அறிய முடிகின்றது.

உச்சரிப்புப் பயிற்சி சற்று வளர்ந்த மாணாக் கர்களுக்கு ஆசிரியர்கள் சில கடினமான தொடர்களைக் கூறிச் சரியாக உச்சரிக்கப் பழக்குவர் என்றும் அறிய முடிகின்றது. குரல் ஒலித்தசை நார்கள் மாத்திரமன்றி நாப்பயிற்சி, தாடை, அலகுத் தசை நார்ப் பயிற்சியும் கீழ்வரும் தொடர்களை உச்சரிப்பதால் ஏற்படும் என்று நம்பினார்கள். சிறப்பாகக் கொன்னை, திக்குவாய் உடைய மாணவர்களை, கீழ்வருவது போன்ற கஸ்டமான தொடர்களை உச்சரிக்கும்படி கேட்பார்களாம்.

*கடற்கரையில் உரல் உருளுது*
*கண்ட புலிக்குத் தொண்டை இறுகுது*

*ஓடுற நரியிலே ஒருநரி கிழநரி*

*எங்கடை தச்சன் சொத்தித் தச்சன்*
*சத்தகங் குத்திச் செத்துப் போனான்*

*சாக்குப் பீத்தல் சாக்கு*
*பாக்குச் சூத்தைப் பாக்கு*

*கிணறு நிறை கிணறு*
*கெளிறு நெளி கெளுறு*

மேற்காட்டியவை போன்றவற்றைக் கூறப்பழக்கு வதும் பயிற்சி செய்வதும் 19 ஆம் நூற்றாண்டுத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் வழக்காறாக இருந்ததென்று பல முதியவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். ஒருவகையில் மகிழ்ச்சியுடனேயே அக்காலத்தில் இப்பயிற்சியில் மாணாக்கர்கள் ஈடுபட்டார்கள் என்று அறிய முடிகின்றது. மேற்காட்டிய தொடர்களைத் திண்ணைப்பள்ளி ஆசிரியர்கள் இலாவகமாகச் சொல்லுவார்கள் என்றும் மாணவர்கள் இதைச் சரியாகச் சொல்லாவிட்டால் தண்டனை வழங்க மாட்டார்கள் என்றும் கூறப்படுகின்றது. 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் கற்பித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமையின் மிக உச்சமாகக் கருதப்பட்டது மனனப்பயிற்சியே எனலாம். மனனப்பயிற்சிக்கு அத்திவாரமாக நாப்பயிற்சி அமைய வேண்டு மென்பதே அக்கல்வி முறையின் பிரதான நோக்கமாக இருந்தது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாகவும் அறியலாம். உதாரணமாக ஔவையாரின் பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

*சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்*
*வைத்தவொரு கல்வி மனப்பழக்கம் - மெத்த*
*நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்*
*கொடையும் பிறவிக் குணம்*

நாப்பயிற்சியின் மூலம் கல்வி மனத்திலே பதியும் என்ற நம்பிக்கையில் மரபுவழி ஆசிரியர்கள் மனனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். மனனத்திற்குரிய வகையிலேயே நமது இலக்கிய இலக்கணங்களும் அமைந்துள்ளன. இலக்கணங்கள் சூத்திரங்களாக அமைந்தவை (நூற்பா). செய்யுள் களின் அந்தாதி மரபு, எதுகை மோனை அமைப்புக்கள், ஓசை (யாப்பு) முதலியனவும் மனனமாக்கும் வசதிக்குரிய வகையிலேயே ஆக்கப்பட்டுள்ளன.


பாரம்பரியக் கற்பித்தல் முறையில் மனனப் பயிற்சி அளிப்பதற்காகப் பலவகையான உத்தி களையும் ஆசிரியர்கள் கையாண்டுள்ளனர். வீட்டிலிருந்து ஆசிரியரிடம் வரும் வேளையில் இரண்டு செய்யுள்கள், ஆசிரியரிடமிருந்து வீட்டுக்குச் செல்லும்போது இரண்டு செய்யுள்கள் என்ற வகையில் ஒருநாளைக்குக் குறைந்தது நாலு செய்யுள்களை ஒரு மாணவன் மனனம் செய்து விடுவான். இற்றைக்குச் சில காலத்திற்கு முன் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பல முதியவர்களை அணுகிக் கேட்டால் தமக்கு நன்னூல் முழுவதும் மனப்பாடம், கந்தபுராணம், கம்பராமாயணம் மனப்பாடம் என்று கூறுவதையும் அவதானிக்க முடிகின்றது. மனனமாகியதும் எழுதும் வேகமும் அதிகரிக்கும் என்று கருதப்பட்டது.

*வெண்பா இருகாலில் கல்லானை வெள்ளோலை*
*கண்பார்க்கக் கையால் எழுதானைப் பெண்பாவி*
*பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாள்*
*எற்றோ மற் றெற்றோ மற் றெற்று*

தமிழ்மொழி இலக்கியங்களைக் கற்கும் முறையும் எழுதும் முறையும் எவ்வாறு இருந்தன என்பதையே ஔவையாரின் பாடல் காட்டி நிற்கின்றது. தமிழ்ச் செய்யுட் பயிற்சியிலே வெண்பா, விருத்தம், கலித்துறை, ஆசிரியம் (அகவல்) முதலான யாப்பு வடிவங்களுக்கும் கற்பித்தல் முறைமைக்கும் ஒரு தொடர்பு இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இவை தனியான ஆய்வுக்குரியவை.

மாணவனின் மொழித்திறன் வளர்ந்ததும் படிமுறையான தமிழ் இலக்கியங்களையே கற்று வந்துள்ளான். வெண்பாவிற் தொடங்கி கட்டளைக் கலித்துறை வரை அவன் மனனம் செய்து கொள்வான்.

சொற்கள், சொற்றொடர்கள், பந்தி அமைப்பு (மிகச் சிறுபான்மையாக) எழுதப்பழகிய பின்னர் சொற்களுக்குப் பொருள்காணும் முறைமை போதிக்கப்படும். சொற்களைப் படிக்கும் பொழுதே, பெயர், வினை, இடை, உரி, திசை,


உ

அவருக்குத் தேற்றரவாளன் என்னும் பெயர்.
தேவன் அன்புள்ளவரும் இரக்கமுள்ளவருமாக இரு க்கிறார்.
நீதியும் பரிசுத்தமும் உள்ளவராக இருக்கிறார்.
அவர் துவக்கமும் முடிவும் இல்லாமல் நித்தியமாய் இருக்கிறார்.
எங்கும் நிறைந்தவரும் எல்லாம் அறிந்தவருமாய் இரு க்கிறார்.
யாவற்றையுஞ் செய்யக்கூடிய வல்லமையுள்ளவர்.
அவர் எப்பொழுதும் ஆனந்தமுள்ளவர்.
அவர் ஒருவராலும் அளவிடப்படக் கூடாதவர்.

*மெய்—உண்மை*
*நாமம்—பெயர்*
*சிருட்டித்தல்-உண்டாக்கல்*
*சுதன்—குமாரன்*
*திரி—மூன்று*
*ஏகம்—ஒன்று*
*இரட்சித்தல்-காப்பாற்றுதல்*
*பரலோகம்—மோட்சம்*
*தேற்றரவாளன்—ஆற்றல்செய்வோன்*

வடசொற்கள் முதலியவற்றையும் மாணாக்கன் அறிந்து கொள்ளக்கூடிய வகையிலே போதிக்கப் படும். கற்பித்தல் முறையில் முதற்படியாகத் தமிழ்ச் சொற்களை இலக்கண முறையில் வகுக்காமல் முதலில் வெறும் சொற்களாகவே மரபுவழி ஆசிரியர்களும் கற்பித்தனர். சொற்களைப் பொருள் விளங்கி அறிந்த பின்பே சொற்களுக்குரிய இலக்கணப் பகுப்புக்கள் போதிக்கப்பட்டன. பாரம்பரியத் தமிழ்க் கல்வி மரபினை நவீன முறையில் மீட்டெடுக்க விரும்பிய நாவலர் முதலியோர் அமைத்த பாடத் திட்டங்களின் படிமுறை வளர்ச்சியை அவதானித்தால் இவ்வுண்மை புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மேற்கு திசையிலிருந்து எதிரிகள் பயம் நீக்குவான்

# நிருதி

- கலாபூஷணம் - வித்துவான் வசந்தா வைத்தியநாதன்

நிருதி தேவன் தென்மேற்கு திசைக்கு அதிபதி. இவன் முற்பிறவியில் பிங்கலாட்சன் என்னும் வேடன். இவன் வேடனாக இருந்தாலும் தவறு செய்து தீமை இழைக்கும் சக வேடுவர்களை தண்டிப்பான்; அறநெறியில் செல்லு மாறு பணிப்பான். புண்ணிய செயல் களால் புண்ணிய நிலை பெற்றான். இப்படி நற்செயல்கள் நிகழ்த்தி வரும் நாட்களில் தல யாத்திரை செய்ய செல்லும் நல்லவர்களை சில வேடர்கள் பிடித்து வந்து துன்புறுத்தினார்கள்.

இதனைக் காணப் பொறுக்காத பிங்கலாட்சன் வேடர்களுடன் போரிட் டான். அப்போரில் இறந்து விட்டான். இறந்த வேடன் தான் செய்த நற்காரியங்களின் மூலம் ஈட்டிய புண்ணியத்தின் பலனாக தென்மேற்கு திசைக்கு காவலனாகும் பேற்றை பெற்று 'நிருதி' யானான்.

நிருதியின் சக்தி த்ர்க்காதேவி. இவரது பட்டாளம் ரஷோவதி. எண்திசை பாலகர்களின் உலகங்கள் மேருமலையில் அமைந்துள்ளன. ஒவ்வொன்றிற்கும் தனித்த சிறப்பு உண்டு. இந்திரனுக்கு சொந்தமான அமராவதியில் யாகம் செய்து தவம் பெருக்கிய முனிவர்கள் நிறைந்து காணப்படுவர்.

அக்கினிக்குச் சொந்தமானது தேஜோ வதி. இதில் ஹோமம் செய்தவர்களும் அக்கினியை உபாசிப்ப வர்களும் வாழ்வார்கள். யமனுக்குச் சொந்தமான ஸம்யமநி. இது சத்தியம் தவறாதவர்கள் வாழ்வது. தென்மேற்கு நிருதியின் பட்டணமான ரஷோவதி நகரில் வசிப்பவர்கள். தாமச குணத்தோடு தர்மம் செய்பவர்கள் ஆவர். பிராணாயாமம் செய்த புண்ணியா சாரிகள் செல்லும் நகரம் வருணராஜனின் கந்தவதி. சுயதர்மத்தை கைக்கொள் பவர்கள் ஸோமனின் நகரத்திற்குச் செல்வர். ஈசானனின் யசோதவதி நகரில் புண்ணியம் செய்த வர்களின் தரத்திற் கேற்ப யோக சுகங்களை அனுபவிக் கலாம்.

நிருதி தேவனின் வாகனம் நர வாகனம் என்றும் பூத வாகனம் என்றும் கூறுவர். பராசர முனிவர் குழந்தையாக தாயின் மடியில் இருக்கையில் தாய் மங்கலமிழந்திருக்கக் கண்டு தனது தந்தையின் மரணம் உதிரன் என்னும் அரக்கனால் நிகழ்ந்ததை அறிந்து அரக்கர் குலத்தையே வேரோடு அழிக்க எண்ணி 'சத்திரவேள்வி' எனும் யாகத்தைச் செய்தார். வேள்வியில் கூறும் மந்திர வன்மையால் அரக்கர்கள் வந்து வேள்வி நெருப்பில் விழுந்து விட்டில் பூச்சிகளானார்கள். நிருதியின் வாகனமான பூதத்தின் முறை வந்தபொழுது அப்பூதம் சிவபெரு மானை குறித்து ஓலமிட்டது. சிவபெரு மானும் பூதத்தின் வேண்டு கோளுக்கு இரங்கி புலத்தியர் முதலி யோரிடம் கருணை காட்டி யாகத்தை நிறுத்த கட்டளை இட்டார். பூதம் சிவமூர்த்திக்கு நன்றி கூறி நிருதி தேவனை அடைந்தது.

நிருதியின் ஆயுதம் முசலம்; ஆலயங்களில் நடக்கும் மகோற்ச வத்தில் எண்திசை பாலகர்களையும் வணங்கிப் போற்றும் மரபு உண்டு. அதில் தென்மேற்கு திசைக்கும் நாயகனாகிய நிருதிக்கு உரிய வேதம் - அசுன் வந்தம் என்னும் தொடக்கத்துடன் கூடியது. அவருக்கு உரிய பண் - நட்டபாடை; தாளம் - மல்லதாளம்; வாத்தியம் - ஜம்பு; நிருத்தம்- புஜங்கத்திராசம்; இராகம் - பைரவி. திசை தெய்வங்களை வந்தித்து வாழ்த்தி வாழ்வில் நலம் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வகுளம் என்னும் மகிழ்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
- M.D (S) India, சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

மகிழ் ஒரு சிறுமரம்; எப்பொழுதும் தழைத்திருக்கும். மலர், தேர் உருளையின் வடிவானது. மலரின் நடுவில் சிறுதுளை இருக்கும். இம்மலர் சிறியதாயினும் நறுமணம் உடையது. வெளிர் மஞ்சள் நிறமானது.

சங்க இலக்கியப் பெயர் - வகுளம்
பிற்கால இலக்கியப் பெயர் - மகிழ், இலஞ்சி
உலக வழக்கு பெயர் - மகிழம்பூ, மகிழமரம்
தாவரவியற் பெயர் - Mimusops elengi

'*பசம்பிடி வகுளம் பல்இணர்க் காயா*' - (குறிஞ் 70) என்றார் கபிலர். வகுளம் என்பதற்கு மகிழம்பூ என்று உரைவகுத்துள்ளார் நச்சி னார்க்கினியர். இதற்கு 'இலஞ்சி' என்ற பெயரையும் சூட்டுகின்றது சேந்தன் திவாகரம். இங்ஙனமே பரிபாடலிலும் திணைமாலை நூற்றைம்பதிலும் ஒவ்வோரிடத்தில் மட்டும் வகுளம் குறிப்பிடப்பட்டுள்ளது.

'*குல்லை வகுளம் குருக்கத்தி பாதிரி*
*நறுந்தண் தகரம் வகுளம் இவற்றை*'
*-பரி 12:79*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேந்தன் திவாகரம் '*வகுளம் இலஞ்சி மகிழ் மரமென்று*' என்று வகுளத்திற்கு இலஞ்சி, மகிழ் என்ற இருபெயர்களைச் சூட்டுகின்றது. விஞ்ஞானப் பெயரில் சிற்றினப் பெயராகி 'இலஞ்சி' என்பது திவாகரம் கூறும் இலஞ்சியாத்தான் இருக்க வேண்டும்.

தினை விதைப்பதற்கு வெறும் புதரை வெட்டுவது போன்று வகுளத்தை வெட்டி எறிவதைக் கணிமேதாவியார் கூறுதலின் இது குறிஞ்சி நிலப்பூ என்பதறியலாம்.

கம்பர், இராமனது கொப்பூழ்க்கு இப்பூவை உவமையாக்கினார். இராமனது ஓலத்து எழுத ஒண்ணாத உருவத்தை சொல்லின் செல்வன் சொற்களாற் காட்டுகின்றார். கவிமரபில் வகுளம் மகளிர் எச்சில் உமிழ மலரும் என்பார்.



இம்மலர் வடிவில் சிறியதாயினும் மணத்தாற்பெரியது. 'மடல் பெரிது தாழை, மகிழ் இனிது கந்தம்' என்பது காண்க. இப்பூவில் மையத்துளை இருத்தலின் இணரிலிருந்து கழன்று விழும். அதனால் இம்மலர்களை நாரால் கோர்ந்து கண்ணியாக்கிப் புனையலாம்.

வகுளம் சிவனுக்குரிய மலர்களில் ஒன்றென்பார். இப்பூ நம்மாழ்வாருக்குரிய சின்னப்பூ என்பது போல அவரே 'என்குரு கூரான் நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்' என்று பாடுகின்றார்.

இதனுடைய பூ, பட்டை, பழம், விதை அனைத்தும் மருத்துவகுணம் மிகுந்தவை. துவர்ப்பி பலகாரி (Astringent, Tonic) செய்கைகளையுடையவை. இதன் பூக்கள் உடல் வெப்பத்தையும் நரம்பு மண்டலத்திற்கு பலத்தையும் கொடுக்கும். இதை முகர சுவையின்மை நீங்கும்.



*வெகுவனல் மாகும் விரகமிக வுண்டாம்*
*முகர அரோசி முறியும் - மிகவும்*
*மகிழச் சுரதவகை காட்டு மாதே!*
*மகிழத் துரும மலர்க்கு.*

*நேரிட் டவர்க்கிளைப்பை நீக்கிப் பிணியிபத்தை*
*வீரிட் டலற விரட்டுமே - சீரட்ட*
*வாச மலரின் மணத்தாற் குணத்தோடே*
*கேசரமென் றோது மகிழ் (தேரன்வெண்பா)*

மகிழம்பூ மணம் இளைப்பை நீக்கி, அழல் குற்றத்தை தணிக்கும். பூவைக் குடிநீரிட்டுக் கொடுக்க, உடல் அனல் தணியும்; வன்மை பெறும். இதன் பூக்களை இயந்திரத்திலிட்டு பூத்தீனீர் காய்ச்சி குடிநீருக்கு பதிலாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வழங்கலாம். இதனால் நீரிலுள்ள மாசுக்கள் நீங்கி மருத்துவகுணம் மிகுந்த நன்னீராக கிடைக்கும்.

பூக்களை உலர்த்தி பொடிசெய்து முகர, மூக்கில் நீர்பாய்ந்து தலைவலியை போக்கும். இதன் பட்டையில் துவர்ப்பு சுவையுள்ளதால் அதை உடல் வெப்ப மகற்றவும் உடலுரமாக்கவும் வழங்கலாம்.

பல் ஈறுகட்டி, பல் வலித்து வாயினின்று நீர் கசிவை நிறுத்த, பட்டை ஊறல் அல்லது குடிநீர் செய்து வாய் கொப்பளித்து வரலாம்.

மகிழம் பட்டை, கொத்தமல்லி சேர்த்து குடிநீர் காய்ச்சி 30 - 60 மில்லி அருந்த காய்ச்சல் தணியும்.

முற்றாத காயை மென்று வந்தால் பல்லிறுகும். பழம் துவர்ப்பு சுவையுடையதாகும். இதனை உண்பதால் இரத்தம் விருத்தியடைவதுடன் கண்பார்வை தெளிவாகும். இப்பழத்தில் உயிர்ச்சத்து ஏ உண்டு.

இதன் விதை உடலழகு, வன்மை, ஆண்மை இவைகளைப் பெருக்கும். ஆயினும் கபத்தைப் பெருக்கும். இது கண்ணிற்கு இடும் மருந்துகளில் சேரும். உடலில் வெப்பத்தை போக்கி, கழியச் செய்து, குற்றங்களை தன்னிலைப் படுத்தும். பல வகைப்பட்ட கொடிய நஞ்சு முறிவுக்கான மருந்துகளிலும் சேருகின்றது.

தாதுவை நன் மெய்யழகைச் சக்தியை
யுண் டாக்கிவிடுஞ் சீதளமென் பார்
கலிக்கஞ் செய்மருந்தாம் - வாதை
மலத்தை விழித் தோடத்தை வல்விடத்தை
வெப்பை விலக்கு மகிழம் விதை.

விதையை பொடித்து தாய்ப்பால் விட்டரைத்து கண்களில் தீட்ட கண்நோய் குணமாகும். விதையை பொடிசெய்து ஒரு கிராம் அளவு நெய் கூட்டிக் கொடுக்க உடல் வன்மையையும் ஆண்மையும் பெறும். விதையை சுட்டு பல்துலக்க பல்நோய் தீரும்.

- மகிழ மரத்தின் பிஞ்சுகளை (2) வாயில் மென்று துப்பி விட்டு, வெந்நீரில் வாய் கொப்பளித்தால் பல் தொல்லைகள் தீரும்.
- மகிழம் பூவைப் பறித்து பெண்களின் தளர்ந்த மார்பகங்கள் மீது வைத்துக் கட்டிக் கொண்டால் மார்புகள் இறுகி எடுப்பாகத் தோன்றும்.
- மகிழ மர பட்டைகளை சிறு துண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக்கி, நிழலில் உலர்த்தி, பொடித்து அரித்து தைத்துக் கொண்டு, அதனால் பல் துலக்கினால் பல்வலி குறையும்.

- மகிழமரப் பட்டையை கொதிக்க வைத்த தண்ணீரில் குளித்து வந்தால் தோல் நோய்கள் குணமாகும்.
- மகிழமர இலைகளுக்கு பன்னீர் சேர்த்து அரைத்து, உடல் முழுவதும் பூசிக் குளித்தால் உடலில் ஏற்படும் வியர்வை நாற்றம் நீங்கும்.
- மகிழம்பூ, சாதிக்காய் இரண்டையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி, பொடித்து 1 - 2 கிராம் சாப்பிட நரம்புகள் பலப்படும்.

முரசு கரைதல், வாய்நாற்றம், பற்கூச்சம் நீங்கும்.

**மூலிகை குளியல் பொடி**

மகிழம்பூ - 150 கிராம்

சந்தனம் - 150 கிராம்

வெட்டிவேர் - 100 கிராம்

பச்சைப்பயறு - 100 கிராம்

திருநீற்றுப்பச்சிலை - 100 கிராம்

நன்னாரி வேர் - 100 கிராம்,

மரமஞ்சள் - 50 கிராம்

மேற்கண்ட மூலிகை உலர் சரக்குகளை ஒன்றாகக் கலந்து உலர்த்தி பொடி செய்து தலைக்கும் உடம்பிற்கும் தேய்த்து குளிக்கவும். (சோப்பு பயன்படுத்த வேண்டாம்.) சொறி, சிரங்கு, வரட்சி ஏற்படாது. அத்துடன் பொடுகு, அரிப்பு, முடி கொட்டுதல் நீங்கும். முடி மிருது





**பற்பொடி (இயற்கை மூலிகை)**

கருவேலப்பட்டை - 175 கிராம்

மகிழம்பட்டை - 175 கிராம்

கடுக்காய்த் தோல் - 90 கிராம்

மாசிக்காய் - 70 கிராம்

வறுத்த உப்பு - 35 கிராம்

இவைகளை தனித்தனியே இடித்து பொடிசெய்து கொண்டு ஒன்றாகக் கலந்து கொள்ளவும். இப்பற்பொடியைக் கொண்டு பல் துலக்கி வர பல்வலி, பல்ஈறு,

வாகவும் மணத்தோடும் இருக்கும். கோடை காலத்திற்கு மிக உகந்த குளியல் பொடியாகும்.


மகிழம் பூ, ரோஜா இதழ்கள் - சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து முகத்தில் பூசி அரை மணி நேரம் ஊறிய பின்பு இளஞ்சூட்டு நீரால் முகம் கழுவி வர பருக்கள், கரும்புள்ளிகள் நீங்கி முகம் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Moonstone (Sandakada Pahana)
## – a unique feature of ancient Sri Lankan sculpture

Sandakada Pahana is a decorative structure commonly found in many Buddhist temples at the entrance or at the beginning of a stairway. Decorated with fine carvings, these structures are built mostly from granite or limestone. Half circle shaped ones are more frequent and rarely you may find a full circle Sandakada Pahana. There are triangular ones too.

**Madhuri Peiris**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The origin of Moonstone is deemed to be from India during the time of Lord Buddha. Sandakada Pahana or the moonstone is one of the main features found in Buddhist temples in Sri Lanka. The name Sandakada Pahana has originated from the ancient Pali language where a semi circular stone was called patika. Moonstone is usually a semi circular piece of granite with delicate carvings, fixed at the bottom of staircases and entrances.

*Sandakada Pahana or the moonstone is one of the main feature found in Buddhist temples in Sri Lanka*

The moonstone is also referenced as Irahandagala; (ire-sun, handa-moon, gala-stone) in Sinhala. From the early days, many cultures of the world respected the sun as giver of life, fertility and growth. The ancient Sinhala people were also giving the sun a predominant place in their poetry, paintings, sculpture, flags, etc. Sri Lanka's main cultural and social celebration, the Sinhala and Hindu New Year, that



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







falls around the 14th of April each year, is related to positions of the sun. The significant position of the lotus flower in the moonstone refers to the importance of the sun to life itself and is symbolised by the flower which blooms with the rising sun and stays open only so long as it shines. The moonstone is therefore considered to have beneficial magical powers which ensure prosperity when people come in physical contact with it even by just stepping on it.

Sandakada Pahana was added as a decorative unit to Buddhist temples during the later stage of the Anuradhapura Kingdom. Every Sandakada Pahana carried the same set of carvings. According to historians, the carvings on a moonstone have an in depth meaning of life which consists of never ending journey of rebirths or "Samsara" in Bhuddism.

The outermost edge is designed with a ring of flames which represents the never ending pains and passions connected with life. Below this is a ring filled with images of four animals; elephants, lions, horses, and bulls. These four animals represent the four noble truths ("Chathurarya Sathya" in Buddhism) which are birth, old age, disease and death. Next to this is a band with an intricate foliage design known as liyavel that reminds the desires of life. Next to liyavel is a procession of swans, which gives a very deep meaning. It is believed that a swan has the ability to separate milk from a mixture of water and milk. Likewise, if someone understands the four noble truths, one can easily filter the good from the bad like the swan filters out milk. Once a person achieves this ability, he can attain Nirvana which is represented by the first semi circle lotus.

*However, the most creative moonstones with the best craftsmanship were found in Anuradhapura and the Polonnaruwa Kingdoms*

"The symbolism of the moonstone as



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



indicated by the different bands, is that the world is at base on fire and is a continued succession of the four perils of birth, disease, old age and death. Not mindful of the nature of the world, the craving for life flourishes vigorously." - Prof. Paranavithana.

During the time of the Polonnaruwa Kingdom, the image of bulls from the sandakadapahana was removed due to the influence of Hinduism. The bull is a sacred animal to Hindus and trampling of this symbol was probably disrespectful. Later, the lion was also taken out of the moonstone as the lion is used to represent the Sinhala race.

At the later stages such as in Kandyan Kingdom, there were different shapes of moonstones like triangular (Sri Dalada Maligawa, Kandy). However, the most creative moonstones with the best craftsmanship were found in Anuradhapura and the Polonnaruwa Kingdoms. The moonstone found in the Abayagiri monastery in Anuradhapura, now commonly known as Biso Maligaya is one of the best and most well-preserved moonstones in this era. Moonstones at Dalada Maligawa in Anuradhapura, those of the King Mahasena's pavilion in Abayagiriya, and the one at the Sri Mahabodiya are equally beautiful with fine carvings. From the Polonnaruwa Kingdom, the one at the entrance to the North pavilion at the Watadage in Polonnaruwa is enriched with heavy carvings.

Recently, a moonstone that belonged to Anuradhapura period was discovered in the garden of a home in Devon, UK, which was once owned by a British tea planter who had brought this unique piece from Sri Lanka long ago. It was then advertised for auction and valued at £30,000 and has been sold for £553,250 . This story rings a bell, that this is the time to protect our remaining moonstones with ancient architectural value.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Fading traditions

Mrs. Sivanandini Duraisamy

Puberty is nature's way of transforming a child into an adult, growing up gently taking months and even years becoming a preparation for woman hood. Each girl has her own way of growing and developing – a way that is just right for her. In other words, we could also say that the rites that go with the ceremony are linked to the social preparation of girls for womanhood and their later roles as wives and mothers in society.

At puberty, glands in the body begin to produce hormones, namely chemicals that cause the changes perhaps emotional ups and downs or even creating sexual feelings in the girl.

Secluding girls during menstruation has been practiced in societies around the world from time immemorial. Perhaps this is due to the fact that many traditional religions consider menstruation as ritually unclean.

Be that as it may, the menstrual cycle is an evolving process. The requirement of the mother's blood is fundamental for life. Thus, the menstrual cycle is essentially an evolving biological process and the puberty ceremony is very part of this evolution.

*Puberty is nature's way of transforming a child into an adult, growing up gently taking months and even years becoming a preparation for woman hood*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A blessing to the girl from a relative

*Relatives blessing the girl holding a wooden measuring jar filled with rice grains and covered by betel leaves*



In Hindu traditions (Shaktism) where the Lord is worshipped in his manifestation as Shakti, the earth's menstruation is celebrated on 'Aadi Puram' an annual (fertility) festival held in July. This reflects the tradition that, to the Hindus, gods and goddesses are so human and loving that they not merely house them in shrines in their homes but continue performing ceremonies not dissimilar to those that go with receiving a special guest or keep traditions afresh.

In the earlier Hindu society, women were prohibited from participating in normal life while menstruating. The idea that she must be "purified" before she is allowed to return to her family has been considered as a negative view of menstruation. Women who are menstruating are not allowed in the household for a period of 3 nights. These ideas are now outmoded with the changing times.



*Some items specially used for the ceremony*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

However, generally Hindus view menstruation, especially the first menstruation as a positive aspect of a girl's life - girls who experience their menstrual period for the first time are given presents to mark this special occasion.

In Jaffna, traditions associated with the young girl's "coming of age," "பூப்பு நீராடல்" are ancient and have been in practice for a long time but have been changing with times.

All the changes in the girl make up the menstrual cycle of preparing her for marriage, becoming both physically and mentally an important event. The girl is now grown up – "பெரிய பிள்ளை ஆகிவிட்டாள்" has attained puberty – "சாமத்யம்" are different synonymous phrases.

When a child comes of age, certain traditions are associated with it and instead of parents officiating, it is the maternal uncle-the mother's brother and aunt or the paternal aunt the father's sister who are the main people. In Jaffna, until recent times, the members of the family take their bath at the well. However, the young girl who has attained puberty is initially given a bath on a heap of the sweepings in the backyard – "குப்பைத்தண்ணீர்" and it is the aunt who pours the water over her head. She is wiped dry, clothed and brought inside. This is today a fading tradition while the bathroom serves as the place for the bath ritual.



Placing Aruham grass and milk on the girls head



Specially prepared food is given to her merely to strengthen her in health. Vegetables cooked in gingelly oil, special "Kali" made of orid/black gram dhal made into dumplings and sometimes egg coffee would be the special food that is given. In Western cultures, we hear of the egg coffee being laced with a dash of brandy.

In olden traditions, we see the grandmother playing an important role in imparting information to the child about puberty and its meaning and the care that goes with it and it is she who prepares the special food that is given to the child. In modern nuclear families this tradition is also fading away.

The important event is the bath "பூப்பு நீராடல்" followed by the ceremonies referred to as "சாமத்ய சடங்கு" In the past, the family well in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the back yard was where the family members had their bath. However, with changing times, it is the bath room. And the young gilr is given her bath in the bathroom itself. But more importantly, the entire ceremony is captured in a video film, nowadays.

As the girl is brought for her bath, she comes carrying a tray with milk and aruham grass. This is placed on the head and the uncle pours three buckets of water on her head followed by the parents and other relatives.

A dhoby's wife also participates in the ceremony. The girl is then taken, dressed up and brought back beautifully attired to sit with the guests. She carries a wooden measuring jar "மரத்தாலான கொத்து" filled with rice grains and covered by betel leaves. She is led by children and young married women each carrying a tray of fruits, flowers sweetmeats or lighted lamps. The basic tradition has been embellished and a newer tradition has crept in essentially to make it colourful for the video presentation while earlier the Poorana kumbam with lighted brass lamps was the main arrangement. Samples of the food that the girl had eaten together with the garments that she had worn are now given to the dhoby's wife.

The next is the aarathi where lighted camphor on a tray with three cut pieces of bananas on which are placed wicks brought by two young married women and aarathi taken. The aarathi that is presently carried out on this occasion varies from place to place in Jaffna itself. Once the aarathi is done an elderly member of the family would wave neem leaves and with the specially prepared food stuff "பலகார வகைகள்". She would take each item and circle it around the girl's head four times and finally throw it to the four corners of the room – this action is to ward off evil eye.

And finally the guests come with gifts and bless the grown up girl.

Here we see that some of the traditions are fading while others are being modernized to suit the camera especially the video camera!





*Performing pooja*

*In olden traditions, we see the grandmother playing an important role in imparting information to the child about puberty and its meaning and the care that goes with it and it is she who prepares the special food that is given to the child*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kullakottan traditions alive in Thampalakamam

V.Varathasuntharam

What strikes vividly any visitor, be he a scholar, historian or layman, to Thampalakamam, the granary of Trincomalee district, is the adherence to Kullakottan's traditions and customs in this village in an unadulterated manner despite the passage of time. How jealously have these villagers guarded and meticulously followed Kullakottan's customs and handed them down to emerging Saivaite generations needs special focus!

According to legends, in order to provide adequate resources to the temple of Aathy Konanayakar in Thampalakamam, King Kullakottan built the Kantalai Tank with a view to irrigating the paddy fields in Thampalagamam and Kantalai. He constructed three canals, a big one and two small ones. The small canals are called mettu vaaikal and palla vaaikal while the big cannal is named peraaru. The mettu vaaikal supplies water to paddy fields in Kantalai and the palla vaaikal carries water to paddy lands including purana fields in Thampalakamam. The canal flows through forest and rocks and irrigates and enriches Thambalakamam paddy fields. The name Thampalakamam has been in usage since early times. It was



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Varipathar AKA Vairaviyar Tholumpalar

originally called Thmapai Nagar in a puranam. An inscription known as Thampalakamam Inscription also supports this view.

The Hindu temple located in this village is called 'Aathy Konanayakar temple.' Aathy in Tamil means ancient. Since an ancient statue is enshrined here, religious traditions of early times are are still in vogue, the procedured laid down by King Kullakottan is still adhered to here, the koil is reverently called 'Aathy Konanayakar Koil'. The temple, which is of stone construction, is surrounded by a circumambulatory or pradhasksana path enclosed by brick wall, beyond which there is an outer prahara. The presiding deiety is Siva Lingam. The Raja Kopuram of the temple is 36 ft by 27ft in dimension at its base. It is a large structure with five stories. The idols of Shiva and Pavathy installed at the temple are called Aathy Konanayakar and Humsagamanambikai. This name, by which the Goddess is referred to is a Sanskrit word. The Tamil name is "annam mennatai." They belong to the Chola period. The ritual and worship at the temple of Thampalakamam are conducted in accordance with injuctions of the Makutakaman. Worship is conducted thrice a day and on special occasions - New year, Aadi Amavasai, Thirukarthigai, Markali Thiruvathirai, Thiruvembavai etc. Annual festival commences on Aani Uthiram and lasts for eighteen days.



K.Sivasubramanium



Atapanar




Sutrupaly Tholumpalar



Mariharar Tholumpalar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Salavai Thoumpalar



Paatuvalliar Tholumpalar




Kankanam Tholumpalar



Murasu Araivon Tholumpalar



Kapukatiyar Tholumpalar



Kalanchiya Tholumpalar

There are some features of the annual festival which are unique to this temple. Duties to be performed at the temple during the annual festival are assigned by custom to various groups of people living in the Trincomalee district. All these are customs and traditions stipulated by King Kullakottan according to puarnams. Kalikutti Sivasubramaniam, who had been the President of the Aathy Konanayakar Temple Board of Trustees for two decades and a half until his retirement recently, explained the unique traditions of King Kullakottan in the following words:

" Aathy Konanayakar temple has a unique scheme of functionaries. The remuneration that ought to be received by them has also been determined in a similar manner. According to Kullakottan Kalvettu, the functionaries are called Atappan Tholumpalar, Marikarar Tholumpalar, Varipathar Vairaviyar, Kaapukattiyar, Thevasthana Salavai Tholilalar, Paatuvaaliyar, Murasu araivon, Kalanchiya Tholumpalar, Suttrupali Tholumpalar, Thanathar Kariappar, Kanganam Tholumpalar, Thevasthana Kavalar, Pulavar Tholumpalar, Thirukulathu Kattadiyar, Sindhunatuattupan, Manadaiyam Tholumpu, Aasari Thlumpu etc.

The functionaries have been alloted paddy fields as remuneration for their functions. To mention a few, they are Kulalkaran Keetru, Malaikattu Keetru, Kurukkal Vayal, Navithan Vayal, Vanaan Vayal, Kuyavan Vayal, Pulavan Vayal, Vairavy Keetru, Manikatha Vayal etc."

The Pulavanar who recites hymns at the temple hails from the village of Sampoor. The craftsman who paints the image of Nanthi on the flag to be hoisted on the flagstaff comes from the village of Kilivetty. The Kaapu Katiyar who has to wear the sacred thread in the form of a bangle on his arm and reside in the koil premises till the conclusion of the festival, comes from Kattukulam Pattu in the Muthur district.

A traditional ritual with the performance of which Thampalakamam temple is associated is the Thirukulathu Velvi, a ritual which means the sacrificial offering in connection with the sacred tank . As a ritual, it is said to have had its orgins under Kullakottan, who is celebrated in legened and tradition as the founder

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*Panniru Thirumurai, Periya Puranam read at the tample*



*The temple bell being rung*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



*Pooja time at the temple*

of Kantalai Tank. The Thiruku Kathuvelvi was essentially a ritual conducted by agriculturalists with the objective of obtaining a regular and a regulated supply of water, through the divine intercession, from the Kantalai tank, a massive reservoir considered to be beyond the means of ordinary mortals.

The Thirukulathu velvi is essentially a commuity ritual in which the Brahmin elites do not figure prominently. The leading role is played by Kariapper, the principal manager of temple affairs, who on a Thursday morning proceeds to a well at the site called Theertha Kattakarai, the costal site of sacred ablutions, along the beach near the Clock Tower in Trincomalee. He prepares a basket of palm leaves and fills it with items required for the cermoney. He, then, places it on his head and proceeds along a jungle tract to the temple of Pillair at Umirikattu and rests there during the night.

On the following day which happens to be a Friday, people from the village go to this temple in the jungle and assemble there. They are led in procession by the Karriappar to the temple of Thampalakamam with the accompaniment of traditional music. Once they have arrived at the temple, the basket is placed in front of the Aathy Konanayakar and it remains there throughout the following night. It is a covered with a second silk shawl, while remaining in that position.

Thereafter, it is taken to the Kantalai Tank by the Kariappar to perform the rites at a selected site on the embankment. Rice is cooked in large quantities of milk obtained from herds of cows roaming loose in the surrounding plain by the marikarar, a special category of people so called on account of this function traditionally assigned to them.

The pongal is offered as matai, mass offering to the deities. They also offer as part of the matai, a thousand betel leaves, a thousand arecanuts and a thousand flowers. Once in twelve years, this rite is observed on a magnified scale and the offerings are proportionately multiplied in quantity. An interesting part of rituals is the display of implements such as knives, axes, crow bars and other agricultural implements stored up in the temple in a wooden casket called the Narrayanan Pettakam, which is carried from the temple to the site, when the ritual is conducted at the time of its commencement.

The prevalence of the traditions laid down in the Kullakottan Kalvettu even today in the Thampalakamam village and the strict compliance with customs mentioned in the legend is ample testimony to the antiquity of the village. The allotment of paddy fields to Hindu temple functionaries reflects the kind concern of our forefathers for the social well being of those who serve the koil and Lord Siva.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.